Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

சேது பந்தனம்

(இராமர் பாலம்)

இரா.சுப்பராயலு

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

சேது பந்தனம்

(இராமர் பாலம்)

இலக்கிய ஆதாரங்கள்

தொகுப்பும் உரையும்

இரா.சுப்பராயலு

மாமன்னன் பதிப்பகம்
124, நட்சத்திர நகர்
தஞ்சாவூர் - 613 005

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

நூலின் பெயர்	:	சேது பந்தனம்
நூலாசிரியர்	:	இரா.சுப்பராயலு
மொழி	:	தமிழ்
உரிமை	:	ஆசிரியருக்கே
நூல் வெளியீடு	:	மாமன்னன் பதிப்பகம் 124, நட்சத்திர நகர், தஞ்சாவூர்
முதல் பதிப்பு	:	ஜுன் 2007
இரண்டாம் பதிப்பு	:	ஜுலை 2007
மூன்றாம் பதிப்பு (விரிவுப் பதிப்பு)	:	டிசம்பர் 2007
தாள்	:	இயற்கை வண்ணம் (NS) மேப்லித்தோ
பக்கம்	:	144
நூலின் அளவு	:	டெமி
எழுத்தின் அளவு	:	10 புள்ளி
விலை	:	ரூ.75/-
அச்சாக்கம்	:	மீரா ஃபைன் ஆர்ட்ஸ், சிவகாசி.
விற்பனை உரிமை	:	அகரம் மனை எண்.1 நிர்மலா நகர் தஞ்சாவூர்-7

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

சேது பந்தனம்

(இராமர் பாலம்)

இலக்கிய ஆதாரங்கள்

தொகுப்பும் உரையும்

இரா. சுப்பராயலு

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

நன்றி

சேதுவுக்குப் பதியாய் இருந்து

பலப்பல நூற்றாண்டுகளாய்

சேதுவையும், தமிழையும், இந்து மதத்தையும்

புரந்து வந்துள்ள

இராமநாதபுரம் சேதுபதி

மன்னர் மரபினருக்கு.

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

திருஞானசம்பந்தர் தேவாரம்

மூன்றாம் திருமுறை

அணையலை சூழ்கடல் அன்றடைத்து வழிசெய்தவன்
பணையிலங்கும் முடி பத்திறுத்த பழி போக்கிய
இணையிலி யென்றுமிருந்த கோயில் இராமேச்சுரம்
துணையிலி தூமலர்ப் பாதமேத்தத் துயர் நீங்குமே.
(3 : 10 : 6)

(அலைகளையுடைய வளைந்த கடலை அன்று அணை கட்டி அடைத்து வழி செய்த இராமபிரான், இராவணனின் பருத்த தலைகள் பத்தினையும் இறுத்ததால் ஏற்பட்ட பாவத்தைப் போக்கிய இணையற்ற சிவபெருமான் என்றும் இருந்த கோயில் இராமேச்சுரம் ஆகும். ஒப்பற்ற சிவபெருமான் தூய மலர்ப்பாதத்தைப் போற்றித் துதிப்பவர்களுடைய துயர் நீங்கும்.)

◈

திருநாவுக்கரசர் தேவாரம்

நான்காம் திருமுறை

கடலிடை மலைகள்தம்மால் அடைத்து மால் கருமமுற்றித்
திடலிடைச் செய்த கோயில் திருஇராமேச்சுரத்தைத்
தொடலிடை வைத்து நாவிற் சுழல்கின்றேன் தூய்மையின்றி
உடலிடை நின்றும் பேரா ஐவர் ஆட்டுண்டு நானே.
(4 : 61 : 3)

(மலைகள்தம்மால் கடலிடத்தை அடைத்துத் திருமால் தம் செயல் முடித்துப் பின்னர் நீரகற்றி நிலமாகச் செய்த அத்திடலில் உருவாக்கிய கோயிலாகிய இராமேச்சுரத்தை, இவ்வுடம்பின் ஐந்து பொறிகளால் ஆட்டுவிக்கப்படும் நான், தூய்மையின்றி என் நாவின் வாக்கில் வைத்துச் சுழல்கின்றேன்.)

◈

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

ஆறாம் திருமுறை

செங்கண்மால் சிலைபிடித்துச் சேனை யோடுஞ்
சேதுபந் தனஞ்செய்து சென்று புக்குப்
பொங்குபோர் பலசெய்து புகலால் வென்ற
போரரக்கன் நெடுமுடிகள் பொடியாய் வீழ
அங்கொருதன் திருவிரலால் இறையே யூன்றி
யடர்த்தவற்கே அருள்புரிந்த அடிக ளிந்நாள்
வங்கமலி கடல்புடைசூழ் மாட வீதி
வலம்புரமே புக்கங்கே மன்னினாரே. (6 : 58 : 10)

(செங்கண்ணையுடைய திருமால் வில்லை ஏந்திக் குரங்குச் சேனையைக்கொண்டு கடலில் அணைகட்டி, இலங்க்க சென்று புகுந்து, பொங்கிவந்த படைகளுடன் போர்கள் பல செய்து, அடைக்கலமாக வந்த சுக்கிரீவன், வீடணன் ஆகியோர் உதவியுடன் வென்று இராவணனை அழித்தார். இராவணன், முன்னர் கயிலை மலையைத் தூக்க முயன்றபோது சிவபெருமான் தன் திருவிரலால் சிறிது ஊன்றி அவனை வருத்திப் பின்னர் அவன் சாமவேதம் இசைத்த பின்னர் அருளையும் செய்தார். இந்நாளில் கப்பல்கள் நிறைந்த கடல் ஒருபுறம் சூழ்ந்த, மாடவீதிகளை உடைய திருவலம்புரம் என்னும் தலத்தில் சிவபெருமான் நிலைபெற்று உள்ளார்.)

நாலாயிர திவ்யப் பிரபந்தம்

பெரியாழ்வார் திருமொழி

குரக்கு இனத்தாலே குரைகடல்தன்னை
நெருக்கி அணை கட்டி நீள்நீர் இலங்கை
அரக்கர் அவிய அடு கணையாலே
நெருக்கிய கைகளால் சப்பாணி
நேமியங் கையனே சப்பாணி 82

(குரங்குகள் இனத்தாலான படையைக்கொண்டு, ஒலிக்கின்ற கடலில் மலைகளைக் கொண்டு தூர்த்து அணைகட்டி, நீர் சூழ்ந்த இலங்கை அரக்கர் மாளும்படி அம்பால் நெருக்கிய கைகளால் சப்பாணி கொட்டு! சக்கரம் கைக்கொண்டவனே, சப்பாணி கொட்டு!)

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

மின்னிடைச் சீதை பொருட்டா, இலங்கையர்
மன்னன் மணிமுடி பத்தும் உடன் வீழத்
தன் நிகர் ஒன்று இல்லாச் சிலை கால் வளைத்து இட்ட
மின்னு முடியற்கு ஓர் கோல் கொண்டு வா,
வேலை அடைத்தாற்கு ஓர் கோல் கொண்டு வா. 179

(மின்னல் இடையுடைய சீதையின் பொருட்டாக, இலங்கையர் மன்னன் இராவணன் மணிமுடி பத்தும் உடனே விழும்படியாகத் தன்நிகர் இல்லாத வில்லைக் காலில் வளைத்து இட்ட வெற்றி மின்னும் முடியுடைய இராமனுக்கு ஒரு கோல் கொண்டுவா. கடலை அடைத்து அணை கட்டினவனுக்கு ஒருகோல் கொண்டுவா.)

காரார் கடலை அடைத்திட்டு இலங்கை புக்கு
ஓராதான் பொன்முடி ஒன்பதோடு ஒன்றையும்
நேரா அவன் தம்பிக்கே நீள் அரசு ஈந்த
ஆராவமுதனைப் பாடிப் பற!
அயோத்தியர் வேந்தனைப் பாடிப் பற! 316

(கருமை நிறமான கடலை அடைத்து அணைகட்டி இலங்கையில் புகுந்து, ஆராயாது செயல்பட்ட இராவணன் பொன்முடி பத்தையும் வீழ்த்தி, அவன் தம்பி வீடணனுக்கு முடி சூட்டிய ஆராவமுதனைப் பாடிப் பற! அயோத்தியர் வேந்தனைப் பாடிப்பற!)

கொலையானைக் கொம்பு பறித்துக் கூடலர் சேனை பொருது அழியச்
சிலையால் மராமரம் எய்த தேவனைச் சிக்கென நாடுதிரேல்,
தலையால் குரக்கினம் தாங்கிச் சென்று தடவரை கொண்டு அடைப்ப
அலை ஆர்கடற்கரை வீற்றிருந்தானை அங்குத்தைக்கண்டார் உளர்.
330

(கொலை செய்யும் யானையின் கொம்புகளைப் பறித்து, பகைவர்கள் சேனைகளைப் போரில் அழியச் செய்து, வில்லால் மராமரங்களைத் துளைத்து அம்பு செலுத்திய தேவனைச் சிக்கென அடைய விரும்பினால், குரங்குகள் இனம் தலையில் மலைகளைத் தூக்கிச் சென்று கடலில் அணைகட்டி அடைப்பதைப் பார்த்து அலைகள் மோதும் கடற்கரையில் வீற்றிருக்கும் இராமனை அங்கு சென்றுக் காணலாம்; கண்டவர்கள் உள்ளனர்.)

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

முற்று இலாத பிள்ளைகளோம் முலை
போந்திலா தோமை நாள்தொறும்
சிற்றில் மேல் இட்டுக் கொண்டு நீ சிறிது
உண்டு திண்ணென நாம் அது
கற்றிலோம்; கடலை அடைத்து அரக்
கர் குலங்களை முற்றவும்
செற்று இலங்கையைப் பூசல் ஆக்கிய
சேவகா எம்மை வாதியேல். 519

(முற்றாத இளம்பிள்ளைகளாய், முலை முழுமையாக எழாத சிறுமியராய், நாங்கள் கட்டும் சிற்றிலை நாள்தொறும் நீ சிதைத்து வருகிறாய். நீ செய்வதற்கான காரணத்தை நாங்கள் கற்றிலோம், கடலில் அணைகட்டி அடைத்து, அரக்கர் குலங்களை முற்றவும் அழித்து இலங்கையைப் போர்க்களமாகிய சேவகனே! எங்களை வருத்த வேண்டாம்.)

பேதம் நன்கு அறிவார்களோடு இவை
பேசினால் பெரிது இன் சுவை;
யாதும் ஒன்று அறியாத பிள்ளைக
ளோமை நீ நலிந்து என் பயன்?
ஓத மா கடல்வண்ணா! உன் மண
வாட்டிமாரொடு சூளறும்;
சேது-பந்தம் திருத்தினாய்! எங்கள்
சிற்றில் வந்து சிதையேலே. 520

(உன் பேச்சின் பேதத்தை நன்கு அறியவல்லாரோடு இவற்றைப் பேசினால் அதன் இனிய சுவை பெரிது. யாதொன்றும் அறியாத சிறுமிகளாகிய எம்மை நீ வருத்துவதால் என்ன பயன்? அலைகள் ஆர்ப்பரிக்கும் கடலின் நிறத்தவனே! உன் மணாட்டியர் மீது சூள் உரைத்தோம். கடலில் அணையினைச் செம்மையாகக் கட்டியவனே, எங்கள் சிற்றில்களைச் சிதைக்க வேண்டாம்.)

உண்ணாது உறங்காது ஒலிகடலை ஊடறுத்துப்
பெண் ஆக்கை யாப்புண்டு தாம் உற்ற பேது எல்லாம்
திண்ணார் மதில் சூழ் திருவரங்கச் செல்வனார்;
எண்ணாதே தம்முடைய நன்மைகளே எண்ணுவரே. 613

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

(உண்ணாமலும் உறங்காமலும் வருந்தி, ஒலிக்கின்ற கடலில் அணைகட்டிக் கடந்துசென்று, சீதையாகிய பெண்ணை மீட்கத்தாம் அடைந்த துன்பம் எல்லாம் எண்ணாமல், வலிமையான மதில் சூழ்ந்த திருவரங்கச் செல்வனார் தாம் பெற்றுள்ள நன்மைகளையே எண்ணுகின்றார்.)

குலசேகரர் : பெருமாள் திருமொழி

மலையதனால் அணை கட்டி மதில்-இலங்கை அழித்தவனே!
அலைகடலைக் கடைந்து அமரர்க்குஅமுது அருளிச்செய்தவனே!
கலைவலவர்தாம் வாழும் கணபுரத்து என் கருமணியே!
சிலைவலவா! சேவகனே! சீராமா! தாலேலோ! 726

(மலைகளைக் கொண்டு அடைத்து பாலம் கட்டி மதில் சூழ்ந்த இலங்கையை அழித்தவனே! அலைகடலைக் கடைந்து தேவர்களுக்கு அமிழ்தத்தை அருளிச் செய்தவனே! கலைகளில் வல்லவர்கள் வாழும் கண்ணபுரத்தில் என் கருமணியே! வில்வித்தையில் தேர்ந்தவனே! சேவகனே! சீராமா! தாலேலோ.)

குரை கடலை அடல் அம்பால் மறுக எய்து,
குலை கட்டி மறுகரையை அதனால் ஏறி,
எரி நெடு வேல் அரக்கரொடும் இலங்கை வேந்தன்
இன்னுயிர் கொண்டு, அவன்தம்பிக்கு அரசும் ஈந்து,
திருமகளோடு இனிது அமர்ந்த செல்வன்தன்னைத்
தில்லைநகர்த் திருச்சித்ரகூடந் தன்னுள்
அரசு-அமர்ந்தான் அடி சூடும் அரசை அல்லால்,
அரசு ஆக எண்ணேன் மற்று அரசு தானே. 747

(ஒலிக்கின்ற கடலை வலிமைமிக்க அம்பால் கலங்கும்படி எய்து, மலைகளால் அணைகட்டி, அதன்மீது சென்று மறுகரை எய்தி, வேற்படை அரக்கரோடு இலங்கை வேந்தன் இராவணன் உயிரைப் பறித்து, அவன் தம்பி வீடணனுக்கு முடிசூட்டி, திருமகளுடன் இனிதே அமர்ந்துள்ள செல்வனைத் தில்லைச் சித்திரகூடத்தில் ஆட்சி புரியும் அவனுடைய திருவடியைத் தலையில் சூடும் மகுடத்தை அல்லாமல் வேறு மகுடத்தை எல்லாம் ஒரு மகுடமாக எண்ண மாட்டேன். மாறுபட்ட அரசு ஒரு பொருட்டன்று.)

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

திருமழிசைப்பிரான் : திருச்சந்த விருத்தம்

குரக்கினப் படை கொடு, குரை கடலின் மீது போய்,
அரக்கர் அங்கு அரங்க, வெஞ்சரம் துரந்த ஆதி நீ;
இரக்க மண் கொடுத்தவற்கு இரக்கம் ஒன்றும் இன்றியே,
பரக்க வைத்து அளந்து கொண்ட பற்பபாதன் அல்லையே? 783

(குரங்குகளின் இனத்தாலான படையைக் கொண்டு ஒலிக்கின்ற கடலின் மீது அணைகட்டிக் கடந்துசென்று அரக்கர் அங்கு மாள வெம்மையான அம்பினைச் செலுத்திய முதல்வன் நீ! இரந்து மூன்றடி மண் கேட்டபோது மண்கொடுத்த மாபலிக்கு இரக்கம் இல்லாமல் உலகளவுக்குத் திருவடியைப் பரக்க வைத்து அளந்துகொண்ட தாமரைத் திருவடிகளைக் கொண்டவன் நீயல்லவா!)

வெற்பு எடுத்து வேலை-நீர் கலக்கினாய்; அது அன்றியும்,
வெற்பு எடுத்து வேலை-நீர் வரம்பு கட்டி வேலை சூழ்
வெற்பு எடுத்த இஞ்சி சூழ் இலங்கை கட்டழித்த நீ
வெற்பு எடுத்து மாரி காத்த மேகவண்ணன் அல்லையே? 790

(மலையை எடுத்து கடல்நீரைக் கலக்கினாய். அது அன்றியும் மலைகளை எடுத்து கடல்நீரில் அணைகட்டி பாலம் அமைத்து, கடல் சூழ்ந்த இலங்கையின் கோட்டைச் சுவர்களைத் தகர்த்து அந்நாட்டைச் சீரழித்தாய். நீ மலையை எடுத்து குடையாகப் பிடித்து மழையினின்றும் ஆயர்களையும் ஆநிரைகளையும் காத்த மேகவண்ணன் அல்லவா!)

தொண்டரடிப் பொடிகள் : திருமாலை

குரங்குகள் மலையை நூக்கக் குளித்துத் தாம் புரண்டிட்டுஓடித்
தரங்கநீர் அடைக்கல் உற்ற சலம் இலா அணிலும் போலேன்;
மரங்கள் போல் வலிய நெஞ்ச வஞ்சனேன், நெஞ்சு தன்னால்
அரங்கனார்க்கு ஆட் செய்யாதே அளியத்தேன் அயர்க்கின்றேனே.
898

(கடல் நீரைத் தூர்த்து அணை அமைக்க குரங்குகள் மலையை எறிந்தபோது, பொய்ம்மை இல்லாத அணில் தண்ணீரில் குளித்துப் பின்னர் மணலிலே புரண்டு அம்மணலைக் கடலிலே உதிர்த்தது.

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

நானோ மரங்கள் போன்று வலிய நெஞ்சினனாய், திருவரங்கனார்க்கு அடிமை செய்யாமல் வஞ்சனையாளனாக அயர்க்கின்றேனே!)

திருமங்கையாழ்வார் : பெரிய திருமொழி

கலங்க மாக்கடல் அரிகுலம் பணிசெய,
அருவரை அணைகட்டி,
இலங்கை மாநகர் பொடிசெய்த அடிகள்-தாம்
இருந்தநல் இமயத்து,
விலங்கல் போல்வன விறல்இரும் சினத்தன
வேழங்கள் துயர்கூர,
பிலம் கொள் வாள் எயிற்றுஅரி - அவைதிரதரு
பிரிதி சென்று அடை, நெஞ்சே! 959

(பெருங்கடலானது கலங்கும்படி வானரங்கள் பணி செய்ய, மலைகளைக் கொண்டு அணைகட்டி, அதன்மீது இலங்கை சென்று அப்பெருநகரை அழித்தவர் இராமபிரான். இமயத்தில் வாழும் சீற்றமுடைய யானைகள் கூட அச்சம் கொள்ளும்படியான, குகை போன்று பெரிய வாயுடைய, கூர்மையான பற்கள் உடைய சிங்கங்கள் திரியும் இடமான இராமபிரானின் திருப்பிரிதியைச் சென்றடைவாய் நெஞ்சமே!)

மாலும்கடல் ஆர, மலைக் குவடு இட்டு,
அணை கட்டி, வரம்பு உருவ, மதி சேர்
கோலமதிள் ஆய இலங்கை கெட,
படை தொட்டு, ஒருகால், அமரில் அதிர,
காலம் இது என்று அயன் வாளியினால்
கதிர் நீள் முடி பத்தும் அறுத்து அமரும்
நீலமுகில் வண்ணன் எமக்கு இறைவற்கு
இடம் மா மலை ஆவது - நீர்மலையே. 1082

(பெருமைமிக்க கடலும் நிரம்புமாறு மலைகளை இட்டு நிரப்பி, அணைகட்டி, பாதை அமைத்து, நிலவு தவழும் அழகிய மதில்கள் உடைய இலங்கை அழியுமாறு படையெடுத்துச் சென்று, தேர்க்கால்கள் அதிரப் போரிட்டு, இதுவே உரிய தருணம் என்று அயன் அம்பினால் இராவணன் தலைகள் பத்தையும் அறுத்து

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

வீழ்த்திய நீலமேக வண்ணனாகிய எம் இறைவன் அமரும் இடமாகிய மா மலை திருநீர்மலையேயாகும்.)

குடைத் திறல் மன்னவன் ஆய், ஒருகால்
குரங்கைப் படையா, மலையால் கடலை
அடைத்தவன் எந்தை பிரானது இடம் -
அணி மாடங்கள் சூழ்ந்து அழகு ஆய கச்சி,
விடைத் திறல் வில்லவன் நென்மெலியில்
வெருவ, செரு வேல் வலங் கைப் பிடித்த
படைத் திறல் பல்லவர் - கோன் பணிந்த
பரமேச்சுரவிண்ணகரம் - அதுவே. 1135

(வெண் கொற்றக்குடை கொண்ட வீரமுடைய மன்னவனாய், முன்பொருமுறை குரங்கைப் படையாகக் கொண்டு மலையால் கடலைத் தூர்த்து பாலமிட்ட எந்தையாகிய இராமபிரானது இடம், அணிமாடங்கள் சூழ்ந்து அழகுடன் திகழும் காஞ்சியில் பரமேச்சுர விண்ணகரம் பதியாகும். காளை போன்று வீரமுடைய வில்லவன் என்ற அரசன் நென்மெலியில் அஞ்சும்படியாக வெற்றிகொள்ளும் வேலை வலக்கையில் பிடித்த படைவீரம் மிக்க பல்லவ மன்னன் பணிந்து வணங்கும் பதி அதுவேயாகும்.)

கம்ப மா கடல் அடைத்து, இலங்கைக்கு மன்
கதிர் முடி - அவை பத்தும்
அம்பினால் அறுத்து, அரசு அவன் தம்பிக்கு
அளித்தவன் உறை கோயில் -
செம் பலா நிரை, செண்பகம், மாதவி,
சூதகம், வாழைகள் சூழ்
வம்பு உலாம் கமுகு ஓங்கிய நாங்கூர்
வண்புருடோத்தமமே. 1258

(முழங்குகின்ற பெருங்கடலை மலைகளால் அடைத்து அணைகட்டி, இலங்கை மன்னனாகிய இராவணனின் ஒளிவீசும் முடிகள் பத்தினையும் அம்பினால் அறுத்து, ஆட்சியை அவன் தம்பியாகிய வீடணனுக்கு அளித்த இராமபிரான் வாழுமிடம் செம்பலா மரத்தோப்பும், செண்பகம், மாதவி, சூதகம் ஆகிய மலர்ச்

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

செடிகளும், வாழை மரங்களும் சூழ்ந்து மணம் வீசுகின்ற, பாக்கு மரங்கள் ஓங்கி வளர்ந்துள்ள திருநாங்கூர் வண்புருடோத்தமமாகும்.)

மல்லைமா முந்நீர் அதர்பட, மலையால்
அணைசெய்து மகிழ்ந்தவன் - தன்னை,
கல்லின்மீது இயன்ற கடி மதிள் இலங்கை
கலங்க ஓர் வாளி தொட்டானை -
செல்வ நான்மறையோர் நாங்கை நல் நடுவுள்
செம்பொன்செய்கோயிலினுள்ளே
அல்லிமா மலராள் - தன்னொடும் அடியேன்
கண்டுகொண்டு அல்லல் தீர்ந்தேனே. 1273

(வளப்பம் மிக்க பெருங்கடல் அதிரும்படி மலையால் அணை செய்து மகிழ்ந்தவன் இராமபிரான். மலைகள்மீது எழுப்பப்பட்ட காவல்மிக்க மதில் சூழ்ந்த இலங்கை கலங்குமாறு ஓர் அம்பினை எய்தவன் அவன். செல்வம் மிக்க, நான்மறைகளில் சிறந்த அந்தணர்கள் வாழும் திருநாங்கூர் நடுவுள் அமைந்துள்ள செம்பொன் வேய்ந்த கோயிலினுள் அவனைத் தாமரையில் வீற்றிருக்கும் இலக்குமிதேவியுடன் அடியேன் கண்டு கொண்டு அல்லல் தீரப் பெற்றேன்.)

கல்லால் கடலை அணை கட்டி உகந்தாய்!
நல்லார் பலர் வேதியர் மன்னிய நாங்கூர்ச்
செல்வா! திருவெள்ளக்குளத்து உறைவானே!
எல்லா இடரும் கெடுமாறு அருளாயே. 1313

(மலைகளைக் கொண்டு கடலில் அணைகட்டி மகிழ்ந்தாய்! நல்லோர் பலரும், வேதியர்களும் நிறைந்து வாழும் நாங்கூரின் செல்வனே! திருவெள்ளக்குளப் பதியில் உறைபவனே! எல்லாத் துன்பங்களும் நீங்குமாறு அருள் புரிவாய்!)

ஆ-நிரை மேய்த்து, அன்று, அலை கடல் அடைத்திட்டு,
அரக்கர் - தம் சிரங்களை உருட்டி,
கார்நிறை மேகம் கலந்தது ஓர் உருவக்
கண்ணனார் கருதிய கோயில் -
பூநிரைச் செருந்தி, புன்னை முத்து அரும்பி,
பொதும்பிடை வரி வண்டு மிண்டி,

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

தேன்இரைத்து உண்டு, அங்கு, இன் இசை முரலும் -
திருவெள்ளியங்குடி - அதுவே. 1339

(பசுக் கூட்டத்தை மேய்த்து, முன்னர் அலை கடலை மலைகளால் அடைத்து அணையிட்டு, அரக்கர்களின் தலைகளை உருளச்செய்துவன் மழை நிறைந்த மேகத்தின் நிறமுடைய கண்ணன் ஆவான். அவன் விரும்பிய கோயில், செருந்தி மலர்க்கொத்தும், புன்னை முகையும் அரும்பிய சோலையில் வரிவண்டுகள் ரீங்காரமிட்டு, தேன் இரைத்து உண்டு, இன்னிசை முரலும் திருவெள்ளியங்குடியாகும்.)

சுரி குழல் கனி வாய்த் திருவினைப் பிரித்த
கொடுமையின் கடு விசை அரக்கன்
எரிவிழித்து இலங்கும் மணி முடி பொடிசெய்து,
இலங்கை பாழ்படுப்பதற்கு எண்ணி,
வரி சிலை வளைய, அடு சரம் துரந்து,
மறி கடல் நெறிபட, மலையால்,
அரிகுலம் பணிகொண்டு, அலை கடல் அடைத்தான் -
அரங்க மா நகர் அமர்ந்தானே. 1414

(சுழன்ற கூந்தலும், கொவ்வை அதரமும் உடைய சீதையைப் பிரித்த கொடுமை மிக்க அரக்கனான இராவணனைக் கனல்விழி காட்டி, அவன் தலைகளில் திகழும் மணிமுடிகளைப் பொடி செய்து, இலங்கையைப் பாழ்படுத்துவதற்கு எண்ணிய இராமன், வில்லை வளைத்து, கொடிய அம்பினை எய்து, தடைப்படுத்திய கடல் நெறிபட, குரங்கு இனத்தைக் கொண்டு மலைகளைத் தூக்கிவரச் செய்து, அலைகடலை அடைத்து வழிசெய்தான். இன்று அரங்க மாநகரில் அமர்ந்துள்ளான்.)

விலங்கலால் கடல் அடைத்து, விளங்கிழை பொருட்டு, வில்லால்
இலங்கை மா நகர்க்கு இறைவன் இருபது புயம் துணித்தான்,
நலம் கொள் நான்மறை வல்லார்கள் ஓத்து ஒலி ஏத்தக் கேட்டு,
மலங்கு பாய் வயல் திருப்பேர் மருவி, நான் வாழ்ந்த ஆறே!
1433

(அணிகலன்கள் பூண்ட அழகிய சீதையின் பொருட்டு மலைகளைக் கொண்டு கடலை அடைத்து அணைகட்டி, இலங்கை

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

நகர் சேர்ந்து, அரசனாகிய இராவணனின் இருபது புயங்களையும் துணித்த இராமனை, நலம் சிறந்த நான்மறை வல்லார்களின் வேதஒலி ஏத்தக் கேட்டு விலாங்கு மீன்கள் துள்ளிப் பாயும் வயல்கள் நிறைந்த திருப்பேர் நகரைச் சென்றடைந்து வணங்கி நான் வாழ்வில் உய்ந்தேன்.)

மல்லை முந்நீர் அதர்பட, வரி வெம் சிலை கால் வளைவித்து,
கொல்லை விலங்கு பணிசெய்ய, கொடியோன் இலங்கை புகல் உற்று,
தொல்லை மரங்கள் புகப் பெய்து, துவலை நிமிர்ந்து வான் அணவ,
கல்லால் கடலை அடைத்தான் ஊர், கண்ணபுரம், நாம் தொழுதுமே.
1701

(கொடிய இராவணனுடைய இலங்கையில் புகவேண்டி, வளப்பமான கடல் வழிவிடும்படியாகக் காலில் வில்லை வைத்து வளைத்து அம்பு எய்தும், காட்டு வானரங்கள் பணிசெய்ய, தொன்மையான மரங்களையும், மலைகளையும் கடலில் வீசி எறிந்து அதனால் கடல்நீர்த் துவலை வானை எட்டும்படி செய்தும் அணையைக் கட்டிக் கடலை அடைத்தவன் ஊராகிய கண்ணபுரத்தை நாம் தொழுவோம்.)

விடை ஏழ் அன்று அடர்த்து வெகுண்டு, விலங்கல் உறப்
படையால் ஆழி தட்ட பரமன், பரஞ்சோதி,
மடை ஆர் நீலம் மல்கும் வயல் சூழ் கண்ணபுரம் ஒன்று
உடையானுக்கு அடியேன்; ஒருவர்க்கு உரியேனோ? 1730

(ஏழுகாளைகளையும் அன்று வெகுண்டு கொன்றவன்; குரங்குப் படைகளைக் கொண்டு மலைகளை எறிந்து கடலில் அணைகட்டிய பரமன்; பரஞ்சோதி; மடைகளில் நீலமலர்கள் நிறைந்த வயல்கள் சூழ்ந்த கண்ணபுரத்தை இருப்பிடமாக உடையவன்; அவனுக்கு நான் அடியவன்; வேறு ஒருவர்க்கு உரியேனல்லன்.)

கல்லின் முந்நீர் மாற்றி வந்து, காவல் கடந்து, இலங்கை
அல்லல் செய்தான் உங்கள் கோமான் எம்மை; அமர்க்களத்து
வெல்லகில்லாது அஞ்சினோம்காண்; வெம் கதிரோன் சிறுவா!
கொல்லவேண்டா ஆடுகின்றோம் - குழமணிதூரமே. 1873

(உங்கள் கோமான் இராமன் மலைகளால் கடலை அடைத்து அணைகட்டி இலங்கை வந்து, அரண்களைக் கடந்து எங்களைத்

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

துன்புறுத்தினான். போர்க்களத்தில் வெல்லமுடியாமல் நாங்கள் அஞ்சினோம். சூரியகுலத்தில் உதித்த சிறுவா! எங்களைக் கொல்ல வேண்டாம். தோற்றவர் ஆடும் ஆட்டமாகிய குழமணிதூரம் என்ற ஆட்டத்தை நாங்கள் ஆடுகின்றோம்.)

படைத்திட்டு, அது, இவ் வையம் உய்ய, முன நாள்
பணிந்து ஏத்த வல்லார் துயர் ஆய எல்லாம்
துடைத்திட்டு, அவரைத் தனக்கு ஆக்க என்னத்
தெளியா அரக்கர் திறல் போய் அவிய,
மிடைத்திட்டு எழுந்த குரங்கைப் படையா,
விலங்கல் புகப் பாய்ச்சி விம்ம, கடலை
அடைத்திட்டவன் காண்மின் - இன்று, ஆய்ச்சியரால்,
அளை, வெண்ணெய் உண்டு, ஆப்புண்டிருந்தவனே.
1904

(இவ்வுலகைப் படைத்திட்டு, அது உய்ந்திட, முன்னம்நாளில் பணிந்து ஏத்திய பக்தர்களின் துயரான எல்லாவற்றையும் நீங்கச் செய்பவர் திருமால். அவ்வரைத் தமக்கு ஆக்கம் தருபவராகத் தெளிவு. பெறாத அரக்கர்களின் வீரம் அழியுமாறு செய்ய, கிளர்ந்தெழுந்த குரங்குப் படையால் கடலில் மலைகள் புகுமாறு பாய்ச்சி, கடல் விம்முமாறு அடைத்து அணை செய்தார். அளைந்தெடுத்த வெண்ணெயை உண்டு ஆய்ச்சியரால் கட்டுண்ட கண்ணனாக அவரை இன்று காணுங்கள்!

திருமழிசை ஆழ்வார் : நான்முகன் திருவந்தாதி

இது - இலங்கை ஈடு அழியக் கட்டிய சேது;
இது - விலங்கு வாலியை வீழ்த்தது; இது - இலங்கை
தான் ஒடுங்க, வில் நுடங்க, தண் தார் இராவணனை
ஊன் ஒடுங்க, எய்தான் உகப்பு. 2409

(இது இலங்கை சீர்குலைவதற்காகக் கட்டிய அணை; இந்த அம்பு விலங்காகப் பிறந்த வாலியை வீழ்த்தியது; இந்த அம்பு இலங்கை ஒடுங்கும்படியாக வளைந்த வில்லினின்றும் புறப்பட்டு, குளிர்ந்த மாலை சூடிய இராவணனின் ஊனுடம்பு ஒடுங்கும்படி செய்து எய்தவனை மகிழ்வித்தது.)

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

தற்பு என்னைத் தான் அறியானேலும், தடங் கடலைக்
கல் கொண்டு தூர்த்த கடல் வண்ணன், என் கொண்ட
வெவ்வினையும் நீங்க, விலங்கா மனம் வைத்தான் -
எவ் வினையும் மாயுமால் - கண்டு. 2458

(என் உண்மை இயல்பைத் தான் அறியாவிட்டாலும், வளைந்த கடலை மலைகளைக் கொண்டு தூர்த்த கடல் நிறத்தவனாகிய இராமன், என்னைச் சார்ந்த தீவினைகள் எல்லாம் நீங்குமாறு தடையற்ற அருள்புரிந்தான். எல்லா வினைகளும் அவனைக் கண்டு மாய்ந்தொழிந்தன.)

திருமங்கையாழ்வார் : பெரிய திருமடல்

சின்ன நறும் பூந் திகழ் வண்ணன், வண்ணம் போல்
அன்ன கடலை மலை இட்டு, அணை கட்டி,
மன்னன் இராவணனை மா மண்டு வெம் சமத்துப்
பொன் முடிகள் பத்தும் புரள, சரம் துரந்து,
தென் உலகம் ஏற்றுவித்த சேவகனை-ஆயிரக் கண் 2764

(சின்னஞ்சிறிய, மணமுள்ள, காயாம்பூ நிறமுடையவன் இராமன். தன் நிறமுடைய கடலில் மலைகளை இட்டு அணைகட்டி, இலங்கை மன்னன் இராவணனைக் குதிரைகள் நிறைந்து போரிட்ட கொடிய போரில் அவனுடைய பொன்முடிகள் பத்தும் தரையில் புரளுமாறு அம்பை எய்து, இயமனுக்குச் சொந்தமான தென்திசையிலுள்ள உலகத்திற்கு ஏற்றுவித்த காவலன் இவன்.)

◈

கம்பராமாயணம்

யுத்த காண்டம்

கடல் சீறிய படலம்

இடுக்கு இனி எண்ணுவது இல்லை; ஈண்டு இனி
முடுக்குவென் வருணனை என்ன, மூண்டு எதிர்
தடுக்க அரும் வெகுளியான், சதுமுகன் படை
தொடுத்தனன்; அமரரும் துனுக்கம் எய்தினார் 56

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

('துன்பத்தை இனி எண்ணுவது ஏன்? இங்கு இனி வருணனை வரச் செய்வேன்' என்று யாரும் தடுக்க இயலாத கோபத்துடன், இராமன் பிரமனுடைய அம்பினை எடுத்து அபிமந்திரிக்கத் தொடங்கினான். தேவர்கள் அச்சம் அடைந்தனர்.)

மழைக் குலம் கதறின; வருணன் வாய் உலர்ந்து
அழைத்தனன்; உலகினில் அடைத்த, ஆறு எலாம்;
இழைத்தன நெடுந் திசை, யாதும் யாவரும்
பிழைப்பிலர் என்பது ஓர் பெரும் பயத்தினால். 57

(மேகங்கள் கதறின. பஞ்ச பூதங்களில் நீருக்கு உரியவனான வருணனின் வாய் உலர்ந்தது. உலகிலிருந்த ஆறுகள் வற்றிப் போயின. யாதும் யாவரும் இனிப் பிழைக்க முடியாது என்ற அச்சத்தினால் திசைமுகன்களும் வெய்துயிர்த்தனர்.)

அண்ட மூலத்துக்கு அப்பால் ஆழியும் கொதித்தது; ஏழு
தெண் திரைக் கடலின் செய்கை செப்பி என்? தேவன் சென்னிப்
பண்டை நாள் இருந்த கங்கை நங்கையும் பதைத்தாள்; பார்ப்பான்
குண்டிகை இருந்த நீரும் குளுகுளு கொதித்தது அன்றே. 58

(உலகின் புறத்தே இருந்த கடல்நீர் கொதித்தது. ஏழு அலை கடல்களின் செயல்களைக் கூறினால் மட்டும் போதாது. சிவபெருமான் தலை மீது நீண்டகாலமாக இருந்த கங்கை நங்கையும் பதைத்தாள். பிரமன் கமண்டலத்திலிருந்த நீரும் குளுகுளுவென்று குமிழிட்டுக் கொதித்தது.)

இரக்கம் வந்து எதிர்ந்த காலத்து, உலகு எலாம் ஈன்று, மீளக்
கரக்கும் நாயகனைத் தானும் உணர்ந்திலன்; சீற்றம் கண்டும்,
வரக் கருதாது தாழ்த்த வருணனின் மாறு கொண்டார்
அரக்கரே? அல்லர் என்னா, அறிஞரும் அலக்கண் உற்றார். 59

('உலகம் யாவையும் தோற்றுவித்து, மீண்டும் அவற்றை மறையச் செய்யும் நாயகனான இராமனை, அவன் இரக்கத்தை வேண்டும் வேளையில் வருணன் உணரவில்லையே! நேரில் வர எண்ணாது காலத்தாழ்ச்சி செய்யும் வருணன் அரக்கரினும் கொடிய நெஞ்சத்தன் என்று கூறி அறிஞரும் வருத்தம் உற்றனர்.)

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

உற்று ஒரு தனியே, தானே, தன்கணே, உலகம் எல்லாம்
பெற்றவன் முனியப் புக்கான்; நடு இனிப் பிழைப்பது எங்ஙன்?
குற்றம் ஒன்று இலாதோர்மேலும் கோள் வரக் குறுகும் என்னா,
மற்றைய பூதம் எல்லாம், வருணனை வைத மாதோ. 60

('நிகரற்ற பரம்பொருள், தனியாய் இருந்து, தன்னிலிருந்து உலகம் எல்லாம் தோற்றுவித்தவன் கோபம் கொண்டுவிட்டான். இனி உலகம் பிழைப்பது எங்ஙனம்? குற்றம் ஏதும் செய்யாதவரும் கோள்களின் மாறுபாட்டால் துன்பம் எய்துவர்' என்று கூறி ஐம்பூதங்களில் வருணன் தவிர்த்த மற்றைய பூதங்கள் எல்லாம் வருணனை வைதன.)

வருணன் அடைக்கலப் படலம்

எழு சுடர்ப் படலையோடும் இரும் புகை எழும்பி எங்கும்
வழி தெரிவு அறிவு இலாத நோக்கினன் வருணன் என்பான்,
அழுது அழி கண்ணன், அன்பால் உருகிய நெஞ்சன், அஞ்சித்
தொழுது எழு கையன், நொய்தின் தோன்றினன், வழுத்தும் சொல்லான். 1

(எழுகின்ற தீப்பிழம்பும், கரும்புகையும் எங்கும் பரவ வழி தெரியாதபடி வருணன் கண்மறைந்து அழுதகண்ணுடனும், அன்பால் உருகிய நெஞ்சினனாய், அஞ்சித்தொழுத கையனாய் விரைந்து தோன்றினான். முகமன் கூறவும் இல்லை.)

நீ எனை நினைந்த தன்மை, நெடுங் கடல் முடிவில் நின்றேன்
ஆயினேன் அறிந்திலேன் என்று அண்ணலுக்கு அயிர்ப்பு நீங்க,
காய் எரிப் படலை சூழ்ந்த கருங் கடல் தரங்கத்தூடே,
தீயிடை நடப்பான் போல, செறி புனற்கு இறைவன் சென்றான். 2

('நெடுங்கடலின் முடிவில் நான் நின்றிருந்ததனால் நீ என்னை நினைந்து அழைத்ததை நான் அறியாமல் போனேன்' என்று அண்ணல் இராமபிரானின் ஐயம் நீங்குமாறு எரிசூழ்ந்த கருங்கடல் அலைகளுக்கிடையில் தீயினில் நடப்பதைப் போன்று நீருக்கு அரசனான வருணன் நடந்து சென்றான்.)

வந்தனன் என்ப மன்னோ, மறி கடற்கு இறைவன்; வாயில்
சிந்திய மொழியன், தீந்த சென்னியன், திகைத்த நெஞ்சன்,
வெந்து அழிந்து உருகும் மெய்யன், விழுப் புகைப் படலம் விம்ம,
அந்தரின் அலமந்து, அஞ்சி, துயர் உழந்து, அலக்கண் உற்றான் 3

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

(வாயில் துயர்மிக்க மொழிகளை சிந்திக்கொண்டு, தீயினால் தீய்ந்த தலையுடையவனாய், திகைத்த நெஞ்சினனாய், வெந்து அழிந்து உருகும் உடம்புடன் புகைப்படலம் சூழ்ந்து விம்ம, துன்பத்தால் அலமந்து, அச்சமுற்று, துயருழந்து கடலுக்கு அரசனான வருணன் வந்தான்.)

நவை அறும் உலகிற்கு எல்லாம் நாயக! நீயே சீறின்,
கவயம் நின் சரணம் அல்லால், பிறிது ஒன்று கண்டது உண்டோ?
இவை உனக்கு அரியவோதான்; எனக்கு என வலி வேறு உண்டோ?
அவயம், நின் அவயம்! என்னா, அடுத்து அடுத்து அரற்றுகின்றான். 4

('குற்றம் நீங்கும் உலகத்திற்கெல்லாம் நாயகனே! நீயே சீறினால் எனக்கு உன் திருவடி அல்லாமல் பாதுகாப்பு வேறொன்று உண்டோ? இவை உனக்கு அரியவையோ? எனக்கு என்று உன்னையன்றி வலிமை வேறு உண்டோ? நீயே அபயம்! உனக்கே அபயம்' என்று வருணன் அடுத்தடுத்து அரற்றலுற்றான்.)

ஆழி நீ; அனலும் நீயே; அல்லவை எல்லாம் நீயே;
ஊழி நீ; உலகும் நீயே; அவற்று உறை உயிரும் நீயே;
வாழியாய்! அடியேன் நின்னை மறப்பெனோ? வயங்கு செந் தீச்
சூழுற உலைந்து போனேன்; காத்தருள் சுருதி மூர்த்தி! 5

('கடலும் நீயே; தீயும் நீயே; அவை அல்லாத எல்லாம் நீயே; ஊழியும் நீயே; உலகமும் நீயே; உலகில் உறையும் உயிரும் நீயே! நீ வாழ்க! அடியேன் நின்னை மறப்பேனா? தீ என்னைச் சூழ நான் உலைந்து போனேன். என்னைக் காத்தருள் சுருதி மூர்த்தி!' என்று வருணன் அடைக்கலம் கோரினான்.)

பாய் இருள் சீய்க்கும் தெய்வப் பருதியைப் பழிக்கும் மாலை,
மா இருங் கரத்தால், மண்மேல் அடியுறையாக வைத்து,
தீயன சிறியோர் செய்தால், பொறுப்பதே பெரியோர் செய்கை;
ஆயிர நாமத்து ஐயா! சரணம் என்று அடியில் வீழ்ந்தான். 10

(தெய்வக் கதிரவனைப் பழிக்கும் பேரொளியால் இருளை விரட்டும் ஆரம் ஒன்றினை மண்மேல் காணிக்கையாகத் தன் கைகளால் வைத்து வணங்கி, 'சிறியவர் தவறிழைத்தால் பொறுப்பது பெரியோர் செய்கை. ஆயிரம் பெயர் உடைய ஐயனே! சரணம்' என்று வருணன் அடிபணிந்தான்.)

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

பருப்பதம் வேவது என்னப் படர் ஒளி படராநின்ற
உருப் பெறக் காட்டி நின்று, நான் உனக்கு அபயம் என்ன,
அருப்பு அறப் பிறந்த கோபம் ஆறினான், ஆறா ஆற்றல்
நெருப்பு உறப் பொங்கும் வெம் பால் நீர் உற்றது அன்ன நீரான். 11

(மலை எரிவது போன்ற பேரொளியுடன் தன் உருவத்தைப் பெரிதாகக் காட்டிய இராமன், நான் உனக்கு அபயம் என்று வருணன் கூறியதைக் கேட்டு, நெருப்பு உற்றதால் பொங்கும் பாலில் நீர் ஊற்றியது போன்று தன் கோபம் ஆறினான்.)

மொழி உனக்கு அபயம் என்றாய்; ஆதலான், முனிவு தீர்ந்தேன்;
பழி எனக்கு ஆகும் என்று, பாதகர் பரவை என்னும்
குழியினைக் கருதிச் செய்த குமண்டையைக் குறித்து நீங்க,
வழியினைத் தருதி என்றான், வருணனை நோக்கி, வள்ளல். 19

('உனக்கு அபயம் என்று மொழிந்தாய். அபயம் அளிக்கா விட்டால் எனக்குப் பழிவரும் என்பதால் நான் கோபம் தீர்ந்தேன். தீயோரைப் பாதுகாக்க இலங்கைக்கு அரணாக நிற்கும் இந்தக் கடலைக் கடந்து செல்ல வழியினைக் கொடு' என்று வருணனை நோக்கி இராமன் மொழிந்தான்.)

ஆழமும் அகலம்தானும் அளப்ப அரிது எனக்கும், ஐய!
ஏழ் என அடுக்கி நின்ற உலகுக்கும் எல்லை இல்லை;
வாழியாய்! வற்றி நீங்கில், வரம்பு அறு காலம் எல்லாம்
தாழும்; நின் சேனை உள்ளம் தளர்வுறும் தவத்தின் மிக்காய். 20

(அதற்கு வருணன், 'தவத்தில் மிக்காய்! இக்கடலின் ஆழமும் அகலமும் என்னாலும் அளவிடல் முடியாது. அடுக்கி நின்ற ஏழு உலகங்களுக்கும் எல்லை இல்லை. கடலை வற்றவைத்து வழிசெய்து நீங்கவேண்டுமானால் எல்லையற்ற காலம் பிடிக்கும். அதற்குள் நின் சேனைகள் தளர்வு எய்திவிடும்' என்றான்.)

கல்லென வலித்து நிற்பின், கணக்கு இலா உயிர்கள் எல்லாம்
ஒல்லையின் உலந்து வீயும்; இட்டது ஒன்று ஒழுகாவண்ணம்
எல்லை இல் காலம் எல்லாம் ஏந்துவென், இனிதின்; எந்தாய்!
செல்லுதி, "சேது" என்று ஒன்று இயற்றி, என் சிரத்தின் மேலாய்.' 21

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

('பனிக்கட்டியாக இறுகிவிட்டால், கடலிலுள்ள கணக்கில்லாத உயிர்கள் எல்லாம் உடனடியாக மடிந்து போகும். 'சேது' என்னும் அணை ஒன்றினைக் கட்டி அதன்மீது நீர் செல்வீர்! அணையில் கட்டிய கற்களில் ஒன்றும் நெகிழாதபடி நான் அதனை எல்லையற்ற காலம் ஏந்துவேன் என் சிரத்தின் மேலாய்' என்றனன் வருணன்.)

நன்று, இது புரிதும் அன்றே; நளிர் கடல் பெருமை நம்மால்
இன்று இது தீரும் என்னில், எளிவரும் பூதம் எல்லாம்;
குன்று கொண்டு அடுக்கி, சேது குயிற்றுதிர் என்று கூறிச்
சென்றனன், இருக்கை நோக்கி; வருணனும் அருளின் சென்றான். 22

('நல்லது, இதையே செய்யலாம்! குளிர்ந்த கடலின் பெருமை இன்று நம்மால் தீரும் என்றால், பூதங்கள் எளியனவாகும். குன்றுகளைக் 'கொண்டு கடலில் அடுக்கி அணை கட்டுவீர்! என்று இராமன் கூறிவிட்டுத் தன் இருக்கை நோக்கிச் சென்றான். வருணனும் இராமன் அருள்பெற்றுச் சென்றான்.)

சேது பந்தனப் படலம்

அளவு அறும் அறிஞரோடு அரக்கர் கோமகற்கு
இளவலும் இனிது உடன் இருக்க, எண்ணியே,
விளைவன விதி முறை முடிக்க வேண்டுவான்,
நளன் வருக! என்றனன் - கவிக்கு நாயகன். 1

(அளவற்ற அறிஞரோடு, அரக்கர் தலைவனுக்கு இளவலாகிய வீடணன் இனிதே உடனிருக்க, குரங்குகளுக்குத் தலைவனான சுக்கிரீவன், எண்ணியவற்றை விதிமுறைப்படி விளைக்கவேண்டி வானரத் தச்சனான நளனை வருமாறு அழைத்தான்.)

வந்தனன், வானரத் தச்சன்; மன்ன! நின்
சிந்தனை என்? என, செறி திரைக் கடல்
பந்தனை செய்குதல் பணி நமக்கு என,
நிந்தனை இலாதவன் இயற்ற நேர்ந்தனன். 2

(வானரத் தச்சனான நளன் வந்தான். மன்னனே! நீ கருதுவது என்ன?, என்று கேட்டான், சுக்கிரீவன், 'செறிந்த அலைகடலில் பாலம் கட்டுவது நம் பணியாகும்' என்றான். இகழ்ச்சி இல்லாத நளனும் பணிசெய்ய இசைந்தான்.)

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

காரியம் கடலினை அடைத்துக் கட்டலே;
சூரியன் காதல! சொல்லி என் பல;
மேருவும் அணுவும் ஓர் வேறு உறாவகைச்
சேர்வுற இயற்றுவென்; கொணரச் செப்பு என்றான். 3

('கடலினை அடைத்து அணைகட்டலே செய்யவேண்டிய காரியமாகும். சூரியனின் மகனாகிய சுக்கிரீவனே? பலசொல்லிப் பயன் இல்லை. மேருமலையும், அணுவும் வேறாகத் தெரியாது ஒன்றியிருக்கும்படி அழகுற அணை அமைப்பேன். கொண்டு வாருங்கள் மலைகளை' என்றான் நளன்.

இளவலும், இறைவனும், இலங்கை வேந்தனும்,
அளவு அறு நம் குலத்து அரசும், அல்லவர்
வளைதரும் கருங் கிடல் அடைக்க வம் எனத்
தளம் மலி சேனையைச் சாம்பன் சாற்றினான். 4

(வானர சேனைத் தலைவனான சாம்பன், 'இலக்குவன், இறைவனாகிய இராமன், இலங்கை வேந்தனாக இருக்கும் வீடணன், அளவற்ற நம்குலத்து அரசனான சுக்கிரீவன் நீங்கலான எல்லோரும் அணைகட்டும் பணிக்கு வாருங்கள்' என்று குரங்குக் கூட்டத்தை நோக்கிக் கூறினான்.)

கரு வரை காதங்கள் கணக்கு இலாதன
இரு கையில், தோள்களில், சென்னி, ஏந்தின,
ஒரு கடல் அடைக்க மற்று ஒழிந்த வேலைகள்
வருவன ஆம் என, வந்த வானரம். 5

(கரிய மலைகள் கணக்கு இல்லாமல் பலகாதங்களுக்குப் பரவி இருந்தன. குரங்குகள் அவற்றை இரு கைகளிலும், இரு தோள்களிலும், தலையிலுமாக ஏந்தி வந்தன. ஒரு கடலை அடைக்க மற்றைக் கடல்கள் திரண்டு வருவதுபோல் வானரங்கள் வந்தன.)

பேர்த்தன மலை சில; பேர்க்கப் பேர்க்க, நின்று
ஈர்த்தன சில; சில சென்னி ஏந்தின;
தூர்த்தன் சில; சில தூர்க்கத் தூர்க்க நின்று
ஆர்த்தன; சில சில ஆடிப் பாடின. 6

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

(குரங்குகள் சில மலைகளைப் போர்த்தன. சில குரங்குகள் போர்க்கப் பேர்க்க அவற்றை இழுத்தன. சில குரங்குகள் அவற்றைத் தலையில் ஏந்தின. சில குரங்குகள் அவற்றைக் கடலில் எறிந்து தூர்த்தன. தூர்ப்பதைக் கண்டு சில குரங்குகள் ஆர்ப்பரித்தன. மற்றும் சில ஆடிப்பாடின.)

காலிடை ஒரு மலை உருட்டி, கைகளின்
மேலிடை ஒரு மலை வாங்கி, விண் தொடும்
சூலுடை மழை முகில் சூழ்ந்து சுற்றிய,
வாலிடை, ஒரு மலை ஈர்த்து, வந்தவால். 7

(கால்களிடையே ஒரு மலையை உருட்டியும், கைகளின் மேலாக ஒரு மலை வாங்கியும், வானத்து மேகம் வரை சுழலக்கூடிய வாலிடையே ஒரு மலையை இழுத்துக்கொண்டும் வானரங்கள் வந்தன.)

முடுக்கினன், தருக என, மூன்று கோடியர்
எடுக்கினும், அம் மலை ஒரு கை ஏந்தியிட்டு,
அடுக்கினன்; தன் வலி காட்டி, ஆழியை
நடுக்கினன் - நளன் எனும் நவையின் நீங்கினான். 8

(வானரங்கள் கொண்டுவந்த மலைகளைத் 'தருக' என்று வாங்கி நளன் விரைவுபடுத்தினான். மூன்று கோடி வானரங்கள் எடுக்கினும் அம்மலையை ஒரு கையில் ஏந்திக் கடலில் இட்டு அடுக்கினான். தன் வலிமையைக் காட்டிக் கடலை நடுங்க வைத்தான் குற்றமற்றவனான நளன்.)

விண்தலம் தொடு மால் வரை வேரொடும்
கொண்டு, அலம் கொள வீரர் குவித்தலால்,
திண் தலம், கடல், ஆனது; நீர் செல,
மண்தலம் கடல் ஆகி மறைந்ததே. 26

(விண் முட்டிக் கொண்டிருந்த பெரிய மலைகளை வேரோடு பறித்துக் கொண்டு வந்து நீரில் வானரவீரர் குவித்ததால் கடல் திடலாக மாறிற்று. அருகிருந்த திடலெல்லாம் நீர் வழிந்ததால் கடலாக மாறிற்று.)

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

குலை கொளக் குறி நோக்கிய கொள்கையான்,
சிலைகள் ஒக்க முறித்துச் செறித்து, நேர்
மலைகள் ஒக்க அடுக்கி, மணற் படத்
தலைகள் ஒக்கத் தடவும், தடக் கையால். 46

(அணை கட்டுவதையே குறியாகக் கொண்ட நளன் மலைகளை ஒத்தவையாக முறித்து, நேர்பட அடுக்கி, இடையே மணலைப் பெய்து தன் தடக்கையால் தடவி சீராக்கினான்.)

தழுவி, ஆயிர கோடியர் தாங்கிய
குழுவின் வானரர் தந்த கிரிக் குலம்,
எழுவின் நீள் கரத்து ஏற்றிட, இற்று இடை
வழுவி வீழ்வன கால்களின் வாங்குவான். 47

(வானரக் குழுக்கள் ஆயிரம் கோடியர் தாங்கி வந்த மலைகளைத் தன் நீள்கரத்தில் ஏந்தி வாங்கிய நளன், இடை வழுவி வீழ்வன வற்றைத் தன் கால்களால் வாங்கினான்.)

மலை சுமந்து வருவன வானரம்,
நிலையில் நின்றன, செல்ல நிலம் பெறா -
அலை நெடுங் கடல் அன்றியும், ஆண்டுத் தம்
தலையின்மேலும் ஓர் சேது தருவ போன்ம். 48

(வானரங்கள் மலை சுமந்து வரிசையாக வரும்போது நடக்க நிலம் இல்லாத நிலையில் நின்றன. அப்படி வரிசையாக நின்றபோது கடல்மீது மட்டும் ஒரு சேது இல்லாமல், தலையின் மீதும் மற்றொரு சேது அமைந்தது போலிருந்தது.)

பருத்த மால் வரை ஏந்திய பல் படை
நிரைத்தலின், சில செல்ல நிலம் பெறா,
கரத்தின் ஏந்திய கார் வரை, கண் அகன்
சிரத்தின் மேற்கொண்டு, நீந்தின சென்றவால். 49

(பருத்த பெரிய மலைகளை ஏந்திய குரங்குப் படைகள் நிலமில்லாமல் நிற்க நேர்ந்தபோது, கரத்திலிருந்த மலைகளைத் தலையில் ஏந்திக்கொண்டு சில குரங்குகள் கடலில் நீந்திக்கொண்டு முன் சென்றன.)

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

ஆய்ந்து நீளம், அரிது சுமந்தன
ஓய்ந்த கால, பசியின் உலர்ந்தன,
ஏந்து மால் வரை வைத்து, அவற்று ஈண்டு தேன்
மாந்தி மாந்தி, மறந்து, துயின்றவால். 50

(மிகுந்த தொலைவு மலைகளைச் சுமந்து வந்ததால் சிலவற்றின் கால்கள் ஓய்ந்தன. பசியால் உலர்ந்தன. ஏந்திய பெரிய மலைகளைக் கீழே வைத்து, அவற்றிலிருந்த தேன் அடைகளிலிருந்து தேனைக் குடித்துவிட்டு, பணியை மறந்து துயின்றன.)

உற்றதால் அணை ஓங்கல் இலங்கையை,
முற்ற மூன்று பகலிடை; முற்றலும்,
பெற்ற ஆர்ப்பு விசும்பு பிளந்ததால்;
மற்று இவ்வானம் பிறிது ஒரு வான்கொலோ? 65

(இலங்கையைச் சென்றடைய எழுப்பப்பட்ட அணை மூன்றே நாள்களில் முற்றுப் பெற்றதால் வானரங்கள் ஆர்ப்பரித்தன. அவ்வொலி வானைப் பிளந்தது. இப்போதுள்ள வானம் மற்றொரு வானமோ?)

கல் கிடந்து ஒளிர் காசுஇனம் காந்தலால்,
மற்கடங்கள் வகுத்த வயங்கு அணை,
எல் கடந்த இருளிடை, இந்திர
வில் கிடந்தது என்ன விளங்குமால். 69

(குரங்குப் படைகள் கொண்டுவந்து குவித்த மலைகளிலுள்ள மணிகள் ஒளிர்ந்ததால் பகல் கழிந்த இரவுப் போதில் சேதுவானது இந்திரனுடைய வில் கிடந்தது போன்று ஒளிர்ந்தது.)

ஆன பேர் அணை அன்பின் அமைந்த பின்,
கான வாழ்க்கைக் கவிக் குல நாதனும்,
மான வேற் கை இலங்கையர் மன்னனும்,
ஏனையோரும், இராமனை எய்தினார். 70

(பேரணையாகத் திகழ்ந்த சேதுவினை அன்புடன் அமைத்த பின்னர், காட்டில் வாழும் குரங்குகளின் அரசனான சுக்கிரீவனும், இலங்கைக்கு மன்னனாக விளங்கும் வீடணனும், ஏனையோரும் இராமனை அடைந்தனர்.)

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

எய்தி, யோசனை ஈண்டு ஒரு நூறுடன்
ஐயிரண்டின் அகலம் அமைந்திடச்
செய்ததால் அணை என்பது செப்பினார்
வைய நாதன் சரணம் வணங்கியே. 71

(வையகத்திற்கு நாதனான இராமனை அடைந்து சேதுவின் நீளம் நூறு யோசனை தொலைவும், அகலம் பத்து யோசனை அளவும் கொண்டதென்று கூறிப் பணிந்தனர்.)

ஒற்றுக் கேள்விப் படலம்

அருங் கடகம் அம் கையில் அகற்றி, அயர்வோடும்
மருங்கு அட வளர்ந்த முலை மங்கை மணம் முன்னா,
ஒருங்கு அடல் உயர்ந்த படர் தானையொடும் ஓதத்து
இருங் கடல் கடந்து, கரை ஏறினன் - இராமன். 12

(கரிய பெருங்கடலை சேதுவின் மூலம் தன் பெரும் படையுடன் கடந்து, கையிலுள்ள வளையல்கள் நீங்க அயர்வோடு சீதை சிறை வைக்கப்பட்டிருந்த இலங்கை நகரில் இராமன் கரை ஏறினான்.)

◇

ஒட்டக்கூத்தரின் உத்தரகாண்டம்

அனுமப்படலம்

இவனால் அருக்கன் மகனோடு எமக்கு
இவ் இனிதாய நட்பும் உறவும்;
இவனால் அளப்புஇல் பெருநீர் அடைத்தது;
இளையா வயத்து அநுமனாம்
இவனால் அரக்கர் பொருசேனையில் சென்று
இடையூறு அகற்றிய எலாம்;
இவனால் அரக்கர் குலம் வேர்அறுத்தது
இனி யான் உரைப்பது எவனோ? 628

(சூரியன் மகனாகிய சுக்கிரீவனோடு இந்த இனிய உறவும், நட்பும் ஏற்பட்டது இந்த அனுமனால்தான். அளவிடமுடியாத

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

பெருங்கடலை அடைத்து அணையிட்டது இவனால்தான். அரக்கரின் பெருஞ்சேனையில் ஏற்பட்ட இடையூறுகளை அகற்றியது எல்லாம் இவனால்தான். அரக்கர் குலத்தை வேரறுத்ததே இந்த அனுமனைக்கொண்டுதான். இனி யான் உரைப்பதற்கு யாதுளது?)

பன்னகத்து மணிதனம், பண்டைநூல்
பன் அகப் பகவன் படர்வேலையைப்
பல் நகத்து அணைசெய் பரன் ஈந்தனன்
பல் நகப் படைத் தானைப் பதிகட்கே. 682

(பண்டைய நூல்களில் சொல்லப்பட்டுள்ளபடி பல்லுயிர்களின் அகத்திலுள்ள இறைவன், பரவிய கடலைப் பல மலைகளைக் கொண்டு அணையிட்ட பரமன், பற்களையும் நகங்களையும் படைக் கருவிகளாக கொண்ட வானர சேனையின் தளபதிகளுக்கு நாகரத்தின மணிகளையும் பிற செல்வங்களையும் பரிசாகக் கொடுத்தான்.)

அம்புயத்து அயன் தாதை அணிதிகழ்
அம்புயத்தன் அரக்கன்பட, அடல்
அம்புயத்தொடை உய்த்தோன் அளித்தனன்
அம்புயத்து அணைசெய்தோற்கு அருந்தனம். 683

(தாமரை மலரில் வீற்றிருக்கும் பிரமனின் தந்தையாகிய இராமன், இருபது தோள்கள் கொண்ட அரக்கனாகிய இராவணன் மாயும்படி வலிமைமிக்க பிரம்மாத்திரம் எனும் அம்பை எய்தான், கடலில் சேதுபந்தனம் என்ற அணைகட்டிய செயலுக்காக நளன் என்ற வானரத் தச்சனுக்கு அரிய செல்வத்தைப் பரிசாக வழங்கினான்.)

◇

திருச்செந்தூர்த் தலபுராணம்

வென்றிமாலைக் கவிராயர்

செற்றமொடு இலங்கையிற் சேர் இராவணன்
கொற்றமது அகற்றுவான் குறித்து இராகவன்
அற்றம் இனம் முனம் ஆதி சேதுவைக்
குற்றம் இன்றுயர் தரக் கோலினா னரோ. 413

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

(பகையுணர்வோடு இலங்கையில் இருந்த இராவணனுடைய ஆட்சியை அகற்றுவதற்காக அழிவுபடாத இனமாகிய குரங்குகளைக் கொண்டு ஆதி சேதுவைக் குற்றமில்லாமல் உயர்ந்ததாகக் கட்டினான் இராமபிரான்.)

காதலிற் சீதையைக் காக்க வேண்டியே
மாதவன் மூன்றவதார மாயிவண்
ஆதியிற் சேதுவை யமைத்த பான்மையான்
பூதலத் தமராய்ப் புனித முற்றுளீர். 414

(பரசுராமன், பலராமன், கோதண்டராமன் என்னும் மூன்றும் அவதாரங்களை எடுத்த நாராயணன், காதல்மிக்க சீதையைக் காக்க வேண்டியே இங்கு ஆதியில் சேதுவை அமைத்த பான்மையால் இப்புவியின் இத்தலத்தில் அனைவரும் உற்றவர்களாகப் புனிதமடைந்துள்ளீர்கள்.)

◈

திருநாகைக் காரோணப் புராணம்

இராமநாதப்படலம்

(திரிசிரபுரம் மீனாட்சி சுந்தரம்பிள்ளை)

நட்ட பரிதி மகற்கரசு நல்கியவனும் வருதினியுங்
கிட்ட வளியீன்றவன் சீதை நிலைமை தேர்ந்து கிடைத்துரைப்பப்
பட்ட இலங்கை யடைவதற்குப் பறம்பு செறித்துப் பரவையணை
கட்ட மதித்து மேற்செய்யக் கடவ துணர்ந்துங் காகுத்தன். 7

(நட்பு பூண்ட சூரியன் மகனாகிய சுக்கிரீவனுக்கு அரசுரிமை பெற்றுத்தந்த இராமன், அவனிடம் படைகளைப் பெற்று, வாயு மைந்தனான அனுமன் சீதையின் நிலைமையைத் தேர்ந்து உரைத்ததால் இலங்கையை அடைவதற்கு மலைகளைப் பிடுங்கிக் கடலில் நெருக்கியிட்டு, அணைகட்டக் கருதி மேற்செய்ய வேண்டியதனை உணர்த்தினான்.)

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

அனைய கொடியற் செருத்திடவும் அவன்வாழ் இலங்கை நகரடைய
வினைய முறந்த பெரும்பரவை வெற்பால் அடைத்து வழிசெயவும்
நினைய முடியாப் பரம்பொருளே நிகரில் வரங்கள் தரல்வேண்டும்
இனைய வரங்கள் அல்லாமல் இன்னும் வேண்டும் வரமுளவால்.
12

(கொடுமையான இராவணனை அழித்திடவும், அவன் வாழும் இலங்கையைச் சென்றடையவும், பரவிக்கிடக்கும் பெருங்கடலை மலைகளால் அடைத்து அணைகட்டி வழி செய்யவும் மனத்துக் கெட்டாத பரம்பொருளே! நிகரில்லாத வரங்களை நீ தரல் வேண்டும். இத்தகைய வரங்கள் மட்டுமின்றி நான் வேண்டும் வரங்கள் இன்னும் உள்ளன.)

மறை பூசித்த நகர்த்தென்பால் மகிடற் காய்ந்தாள் அமர்நகரில்
குறைதீர் பரவை அடைத்துஇலங்கைகுறுகிக் கொடியோன்தனை மாட்டி
நிறைசால்புடையாள் தனை மீட்டு நேயத்தவரோடு ஈங்கணைந்தே
அறைசால் இந்தக் குறிபோற்றி அயோத்தி யடைந்து வாழ்ந்திருப்பாய்.
17

(மறை பூசித்த நகராகிய வேதாரணியத்திற்குத் தென்பால் மகிடாசுரனைக் கொன்ற துர்க்கை அமர்ந்த நகரில் குறைதீர்க்கும் கடலை அடைத்து அணைகட்டி வழிசெய்து இலங்கையை அடைந்து கொடியோனாகிய இராவணனைக் கொன்று கற்புக்கரசியாகிய சீதையை மீட்டு, அன்புடையவர்களோடு இங்கு வந்து இந்த சிவலிங்கத்தை வணங்கி அயோத்தி அடைந்து வாழ்ந்திருப்பாய்.)

ஆழி வரைகொண்டு அடைத்து இலங்கை யகத்துப் புகுந்து கொடியோனைப்
பாழி யமைந்த சேனையொடும் படர் ஆகவபூமியிற் படுத்து
வீழி பொருவாய்ச் சானகியை மீட்டு விமான மேற்கொண்டு
வாழி துணைவர் பலரோடு வளஞ்சா னாகைப் பதியடைந்தான்.
20

(கடலை மலைகொண்டு அடைத்து அணைகட்டி வழிசெய்து இலங்கை நகரில் புகுந்து, கொடிய இராவணனை வலிமைமிக்க சேனையோடு போர்க்களத்தில் கொன்று, வீழிப்பழம் ஒத்த

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

செவ்வாயுடைய சீதையை மீட்டு, துணைவர்கள் பலருடனும் விமானம் மூலம் பறந்து வளம்மிக்க நாகைப் பதியை அடைந்தான்.)

◈

கூர்ம புராணம்

இராவண வதை யத்தியாயம்

(அதிவீரராம பாண்டியர் மொழிபெயர்ப்பு)

உரவுத் திரைநீர்க் கடலடைப்பான் வருணர்ப் பழிச்சி யுயர்கரையின்
விரியுந் தருப்பசயனத்தின் மேவி ஓரேழ் நாள்நோற்ப
வருணன் போதந் திலனாக வெகுண்டு வரிவெஞ் சிலையினொடும்
புருவச் சிலைகால் குனிந்திடலும் புகைந்த வோரேழ் புணரியுமே.
4

(ஒலிக்கின்ற அலைநீர்க் கடலை அடைப்பதற்காக வருணனைத் துதித்து உயர்ந்த கரையில் விரியும் தருப்பைப் புல்லாகிய படுக்கையில் அமர்ந்து இராமன் ஏழுநாள் நோன்பிருந்தும் வருணன் வாராதொழிய, கோபித்து, கட்டப்பட்ட கொடுமையான வில்லை எடுத்து அம்பைச் செலுத்திடலும், ஏழ்கடலும் புகைந்தன.)

கரை கொன்றிரங்கு கடல்புகைய வருணன் வெருவிக் காகுத்தன்
விரை மென்கமலத் தாள்பணிந்து வேலை யடைப்பா னுரைத்தேகச்
செரு வேக்கறவுற் றுயர் திணிதோட் செம்மனளனா லணை கட்டிப்
பருதி மான்றே ரெதிர் தடுக்குஞ் சுவேத வரையின் பாலிறுத்தான்.
5

(கரையை அழித்து முழங்குகின்ற கடல் புகையவும், வருணன் அஞ்சி விரைந்து வந்து இராமன் தாமரைத்தாள் பணிந்து கடலை அடைக்குமாறு உரைத்துச் செல்ல, போரை நினைந்து ஏங்கிய திண்தோள் செம்மல் நளனைக் கொண்டு கடலில் அணைகட்டி, கதிரவன் தேரைத்தடுக்கின்ற சுவேத மலையில் சென்று இராமன் தங்கினான்.)

◈

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

பெருந்தேவனார் பாரதம்

மாவிந்தம்

கடலடைத்த வாறுங் கடலிலங்கை புக்குப்
பொடிபடுத்திப் போந்தவா றெல்லா - மிடிமுரச
முன்னுயர்த்தோன் மொழியவே முற்றுணர்ந்தோர் மாவிந்தம்
பின்னுயற்கப் போவார் பெரிது. 175

(கடலை மலைகளால் அடைத்தவாறும், கடல் சூழ்ந்த இலங்கையில் புகுந்து இராவணனைக் கொன்று, நகரைப் பூழ்தி செய்தவாறும் பழைய நிகழ்வுகளை இடிபோன்று ஒலிக்கும் முரசத்தையுடைய தருமன் மொழியவே முற்றுணர்ந்தோர் பாண்டவர் சுவர்க்கமென்னும் மகாவிந்தத்துக்குச் செல்லலானார்கள்.)

◇

இராமோதந்தம்

(அ.குமாரசுவாமிப்பிள்ளை மொழிபெயர்ப்பு)

ஆயபெருங் கடற்கிடையே யணை யென்னுஞ் சேதுவினை
நாயகனாகிய ராமன் நளனைக் கொண்டு ஆற்றுவித்துப்
பாயு நெடு வானரராம் படைகளொடும் அவ்வழியே
தீயர் செறிந்திடும் இலங்கைச் சுவேலமலை சேர்ந்தனனே. 95

(தலைவனாகிய இராமன், பெருங்கடற்கிடையே மலைகளைக் கொண்டு சேது என்னும் அணை கட்டுவித்து, வானரப் படைகளை அதன் மேல் செலுத்தி, தீயவனான இராவணன் வாழ்ந்திடும் இலங்கையில் சுவேல மலை சென்று தங்கினான்.)

◇

குடந்தையந்தாதி

சேரா வமுது கிடையோ றெவன்ன சிந்தையர்தோள்
கூராவமுது கதியின்றியே குடந்தைக் கிடந்த
வாராவமு தொரு பெண் பொருட்டால் அலை தூர்த்து விற்கொண்
டோரா வமுது கனிவா னவனடி யோதினர்க்கே! 22

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

(சிந்தைக்கெட்டாத அமுதமாகக் குடந்தையிலே பள்ளி கொண்ட ஆராவமுதர், சீதைக்காக அலைகடலை மலைகளைக் கொண்டு தூர்த்து அணைகட்டி வில்லேந்திப் போரிட்டவர். அவர் திருவடிப் பெருமையை ஓதினவருக்கு அவர் உள்ளங்கனிந்து அருள் புரிவார்.)

◇

உபதேச காண்டம்

(ஞானவரோதயர் இயற்றிய உத்தர கந்த புராணம்)

கருவிரற் செம்முக நெடுவாற் கவியளிகத் துடனே
கடலில் நெடுஞ் சேது இமைப்பிற் கட்டுவித்துப் படர்ந்து
பொருசமர விஞ்சைகவிக் குலசேனை யுடன்போய்ப்
பொருக்கென வல்லரக்கர் படைப் புணரியுடன் தொலையாத்
திருகுசினம் புழுங்கி இராவணன் முடிகள் தடிந்து
செந்தழற் சோதனை கொடுத்த சீதையைக் கொண்டயோத்தி
வருகுரிசில் நவமணி சிங்காசனத்தில் உடனே
வதிந்தருள் பட்டாபிடேகம் பெற்று மகிழ்ந்திருந்தான்.
1862

(கருவிரல்களும், செம்முகமும், நீண்ட வாலும் உடைய குரங்குப் படைகளைக் கொண்டு கடலில் நீண்ட சேதுவினை இமைப் பொழுதில் கட்டுவித்து, அதன்மீது சென்று, போரில் வல்ல குரங்குப் படையுடன் போய் வல்லரக்கர் சேனையுடன் போரிட்டு வென்று, இராவணனின் பத்துத் தலைகளையும் வீழ்த்தி, சீதைக்கு செந்தழல் சோதனை கொடுத்து, அயோத்தி வந்து நவமணி பொருந்திய சிம்மாதனத்தில் உடனே முடிசூடியமர்ந்து இராமன் மகிழ்ந்திருந்தான்.)

◇

காளமேகப்புலவர் பாடல்

நிரனிறைப் பொருள்கோள்

பொன்னனைவா ளரக்கனை நூற்றுவனரக் காவைப்
பொருசிலையைக் கனைகடலைப் பொன்ன னீன்ற

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

நன்மகற்காய்ச் சுரர்க்காய் ஐவருக்காய்க் காதல்
நட்பினுக்காய்ச் சானகிக்காய் நடவைக்காக
மன்னுகிரால் வடிக்கணையால் வளையாற் புள்ளால்
வயங்கு தோள் வலியால் வானரங்களாகும்
முன்னுடற்கீறிச் சிரங்கொண்டு அமரில் வீழ்த்தி
முதலொடுங் கொண்டிறுத்து அடைத்த மோகூரானே.

(இரணியனை அவன் ஈன்ற நன் மகனுக்காக உடலைக் கிழித்துக் கொன்றவன்; வாளாற்றல் மிக்க அரக்கனான இராவணனைத் தேவர்களின் பொருட்டாகக் கூரிய அம்பினால் தலையைக் கொய்தவன்; பஞ்சபாண்டவரின் பொருட்டாக நூற்றுவரான கௌரவரைத் தம் சங்க நாதத்தினால் போரிலே அழித்தவன்; நட்புக்குரிய நப்பின்னைக்காக கருடன் மூலம் பாரிசாத மலர்ச் சோலையைக் கொணரச்செய்தவன்; சானகியை மணப்பதற்காக போர் வில்லைத்தன் தோள் ஆற்றலால் ஒடித்தவன்; ஒலிக்கும் கடலைக் கடந்து செல்வதற்காக குரங்குகளைக் கொண்டு அணைகட்டியவன் - அவனே மோகூரில் உள்ள திருமால் ஆவான்.)

◈

திருப்புல்லாணி மாலை

பள்ளத் திரைகடற் சேது வுண்டாக்கப் பரிதிகுலத்
துள்ளுற்ற வள்ளல் புல்லாணி யிடங்கொண்டு வந்து சென்று
விள்ளற் கருஞ்சமர் வென்றான் றொடங்கற்க வெவ்வினையு
மெள்ளற்க முற்றுமிடங் கண்ட பின்னல்ல தென்பதுவே. 50

(ஆழமும் அலையும் உள்ள கடலில் அணைகட்டுவதற்காக சூரிய குலத்தில் தோன்றிய வள்ளலான இராமபிரான் திருப்புல்லாணியில் அமர்ந்து இலங்கை சென்று விவரித்தற்கு அரிய போரில் வென்றான். முற்றிலும் இடமறிந்த பின்னல்லது எவ்வினையையும் தொடங்கக்கூடாது, எள்ளவும் கூடாது என்பதாகும்.)

◈

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

வடமலை வெண்பா

நேசத்து அணில் மணலை நின்றுதிர்ப்ப வான்கொடுத்தான்
வாசத் துழாயன் வடமலையே - நேசத்(து)
உதவி வரைத்தன்று உதவி உதவி
செயப்பட்டார் சால்பின் வரைத்து. 11

(அன்பு நிறைந்த அணில் இராமன் சேதுபந்தனஞ் செய்தபோது நீரில் மூழ்கி மணலில் புரண்டு, அம்மணலை அணையில் உதிர்த்துப் பணி செய்ததற்காக அதற்கு தேவலோகம் கொடுத்தான். உதவி என்பது உதவியின் அளவைப் பொருத்ததன்று. அது யாருக்குச் செய்யப்பட்டது என்பதைப் பொருத்ததாகும்.)

◈

சிவசிவ வெண்பா

பார முடிபத்தும் பறித்தபழி சேதுவினில்
தீருதலி னாலே சிவசிவா - சாருமிகல்
தீயவை தீய பயத்தலால் தீயவை
தீயினு மஞ்சப் படும். 21

(இராவணனின் முடிபத்தையும் இராமன் பறித்த பாவம் சேது அணையினில் உள்ள இராமேச்சுரத்தில் தீருதலால், சிவ சிவா! சேரும் பகையானது தீயவையானால் அவை தீயவே விளைவிக்கும். எனவே தீய்வை தீயைவிட அதிகமாக அஞ்சப்படும்.)

◈

தீர்த்தகிரிப் புராணம்

தண்டகவனச் சருக்கம்

(சைவ எல்லப்ப நாவலர்)

உலவு சூரிய குலத்து இராகவன் எனும் உழவன்
அலைய தாகிய வனத்தை அம்பு அழலினால் அடக்கிப்
புலமதாக மேற் சேதுவாம் வரம்பையும் புணர்ந்து
நிலவிராக்கதர் சோரியாம் ஏரிநீர் நிறைத்து.

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

(சூரிய குலத்துதித்த இராகவன் என்னும் உழவன் அலையாலாகிய வனத்தைத் தன் அம்பு அழலினால் அடக்கி, வரப்பு கட்டுவது போன்று சேது என்னும் அணையை அமைத்து, நில அரக்கர்கள் குருதியை ஏரி நீராக இறைத்தார்.)

இலங்கை யாகிய பெருவயல் செறிந்து இராவணனார்
அலங்கல் சேர்பல முடிகளைப் பறித்து வீடணனாற்
துலங்கு வான்பயிர் சமைத்துநல் அருட்புனல் சொரிந்து
விலங்கு றாதுபல் கதிருமுற் றிடும்படி விளைத்தான். 6

(இலங்கையாகிய பெரிய வயலையடைந்து இராவணனின் பத்து முடிகளையும் பறித்து, வீடணனால் துலங்கும் வான் பயிர் சமைத்து, அருள் என்னும் புனலைச் சொரிந்து, விலங்குகள் வாராமல் பல்கதிரும் முற்றிடும்படி விளைத்தான்.)

◈

புள்ளிருக்குவேளூர்ப் புராணம்

சடாயு அருச்சனைசெய் சருக்கம்

இலங்கெழிற் சீதையைத் தேடி நடந்து இராமன்
இனிய திருவணை இயற்றி இலங்கை சேர்ந்து
வலன்கொள் க்ணைதொடுத்து இராவணனைக் கொன்று
வந்தடுத்த விபீடனுக்கு இலங்கை வாழும்
நலன் கொள் முடிசூட்டி அருந்ததிக்குக் கற்பு
நல்கியிடுஞ் சீதையுடன் விமானம் ஏறிக்
கலந்துரிமை மிகும் இலக்கு மணன்பின் சூழக்
கனகமதில் அயோத்திசென்று காதல் கூர்ந்தான். 49

(எழில் இலங்கும் சீதையைத் தேடி நடந்து, குரங்குகள் உதவியுடன் கடலில் திருவணை இயற்றி, அதன் வழியாக இலங்கை சேர்ந்து, வலத்தில் கொண்ட கணையைத் தொடுத்து இராவ்ணனைக் கொன்று, அவன் தம்பி வீடணனுக்கு இலங்கை அரசளித்து முடிசூட்டி, அருந்ததிக்குக் கற்பு நல்கிடும் சீதையுடன் புட்பக விமானம் ஏறி, என்றும் உடனிருக்கும் இலக்குமணன் பின்வரக் கனகமதிலுடைய அயோத்தி சென்று இராமன் காதல் கூர்ந்தான்.)

◈

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

சூதவன புராணம்

இராமன் மந்திரோபதேசம் பெற்ற சருக்கம்

(ராம.சொ.சொக்கலிங்கச் செட்டியார்)

ஆழிமீது அணையணை திறன் குறித்தனை யருச்சித்
தூழின வேண்டுதியேல் அணையுஞற்றுதற் குரிய
பாழியாற்றல் தந்து இன்னருள் புரிவளப் படியே
வாழிராம நீயவ்வுழிக் குரம்பினை வயக்கி. 115

(கடல்மீது அணைகட்டும் திறன் குறித்து வேண்டினை, அருச்சனை செய்து முறைமைக்கு உரியன வேண்டுவையாயின் அணை கட்டுதற்குரிய ஆற்றலைத் தந்து அப்படியே இன்னருள் புரிவாள் அன்னை. இராமனே, நீ வாழ்க! நீ மலைகளை அவ்வாறே கடலில் குவிப்பாய்.)

ஆய பேரணை வழிச்செலீஇ யிலங்கையை யடைந்து
தீய ராவண வதம்புரீஇச் சீதையை மீட்டு
மேய விந்திர வரத்தினாற் போர்வயின் விளிந்த
பாய வானர கணமுயிர்த் தெழும்வகை பயிற்றி. 116

(நீ அமைத்த பேரணை வழிச்சென்று இலங்கையையடைந்து தீய இராவணனை வதம்புரிந்து, சீதையை மீட்டு, நீ பெற்ற இந்திர வரத்தினால் போரில் மாண்ட வானரக் கணம் உயிர்த்தெழுமாறு செய்வாய்.)

◇

குசேலோபாக்கியானம்

குசேலர் வைகுந்தம் அடைந்தது

(வல்லூர் தேவராச பிள்ளை)

கதிரவன் பயந்த மதலையை நட்டுக்
கனந்தவழ் மராமரந் துளைத்து
முதிரொலிக் குலிசப் படையினான் மகனை
முனிந்தடல் புரிந்துல கடங்க

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

அதிர்தரத் திரியுஞ் சேனைதற் சூழ
அனுமனா லறிவதை யறிந்திட்
டெதிரறு கடற்க ணொருசரம் புகுத்தி
யியங்குற நடவையுண் டாக்கி. 673

(சூரியன் மகனாகிய சுக்கிரீவனை நட்புக்கொண்டு, மராமரம் ஏழினையும் ஓர் அம்பால் துளைத்து, ஒளிபடைத்த வச்சிராயுதத்தை யுடைய இந்திரன் மகனான வாலியைக் கோபமுடன் கொன்று, உலகமுழுதும் அதிரும்படி திரிகின்ற வானரச்சேனை தன்னை சூழச்சென்று, அனுமனால் அறிய வேண்டியதை அறிந்திட்டு, எதிர்ந்துள்ள கடலில் ஓர் அம்பினைச் செலுத்தி, நடந்து செல்ல ஓர் அணையினைக் கட்டி...)

◈

சேது புராணம்

(நிரம்ப அழகிய தேசிகர்)

கந்தமாதனச் சிறப்பு

சிலைபயில் இராகவன் செய்த சேதுவாங்
கலையொடு மான்பயில் கந்த மாதன
மலைவள மதனொடு மருவு மாண்புசால்
அலைவளம் அளவையால் அளக்க லாகுமோ 93

(வில்வித்தையில் சிறந்த இராமன் அமைத்த கடல் அணை சேதுவாகும். ஆண்மானும், பெண்மானும் இணைந்திருக்கும் கந்தமாதன மலைவளமும், அதனோடு மருவுகின்ற பெருமைசான்ற அலைகடலின் வளமும் அளப்பரியது; அளவைக்கு உட்படாதது.)

சேது சருக்கம்

அணியிராமன் அணைமிசைக் கண்படும்
பணியர் காத்திரம் பற்றிய நுண்மணற்
கணிதம் அந்தணர்க் கொன்ற கரிசெலாந்
துணியுமின்றி தற்கையுறல் சூழ்ச்சியே. 36

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

(அழகிய இராமன் மலைகளால் செய்த சேதுவினில் தென்படும் பாம்புகள், கீரி பற்றிய நுண்மணற் கணிதப்படி அந்தணர்களைக் கொன்ற பாவம் எல்லாம் சேதுவில் மூழ்கினால் தீரும் என்பது உபாயமாகும்.)

கூறு கோசல நாடன் குரம்பினில்
வீறு சீதள மாருத மேற்படின்
ஊறு நூறு மதுவினு கர்ச்சியா
வேறு தீவினை யீறுறும் அக்கணம். 37

(புகழ் பெற்ற கோசல நாட்டையுடையவனான இராமன் கட்டிய மலை அணையாகிய சேதுவில் குளிர்ந்த தென்றல் தவழும்போது மதுவின் நுகர்ச்சி போன்று துன்பம் நீங்கும். சேதுவில் மூழ்கினால் எல்லா தீவினைகளும் அந்தக் கணமே நீங்கிவிடும்.)

வணர் கொளுஞ் சிலை வள்ளல் இராகவன்
அணை யினால் வகையாம் பெரும் பாதகர்ப்
புணருந் தீமையும் ஒல்லையிற் போயிடும்
உணரு நெஞ்சில் உடன்புகுந் தாடிலே. 40

(வளைந்த வில்லைக் கையில் கொண்ட இராமன் செய்த அணையினால், பெரும் பாதகர்களைச் சேர்ந்த தீமையும் அதனை உணர்ந்து அவர்கள் சேதுவில் நீராடினால் உடன் கழிந்துவிடும்.)

கோசலத்தவ: கோமகனாற்றிய
தேசுடைப் புனற் சேதுவின் மூழ்குறும்
ஆசை மேற்கொண் டிரக்குமவர்கள் பால்
யாசகத்தின் இழிவர வில்லையே. 66

(கோசல நாட்டின் கோமகனாகிய இராமன் அமைத்த அணையாகிய சேதுவின் அழகிய புனலில் மூழ்கும் ஆசைகொண்டு அப்பயணத்திற்காக யாராவது பிச்சை எடுத்தால் அவர்களுக்கு ஏற்பதால் ஏற்படும் இகழ்ச்சி இல்லையாம்.)

சேது வந்த சருக்கம்

எம்மை மதியா இருங்கடலை இருதாள் வளைய எதிர்கோலி
வெம்மை விசிகக் கடுங்காலால் விரையக் கலக்கி விளிந்தசுறாச்

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

சும்மை யுயர்த்தி வானரத்தின் தொகுதி நடப்பத் தொகுத்தமைப்பன்
செம்மை யணையொன் றதுகாண்பாய் எம்பி தருதி சிலையென்றான்.
29

('நான் பலநாள் அழைத்தும் வராமல் என்னை மதிக்காத கடலரசன் என்னை வந்து இருதாள் வளைய பணியுமாறு சுடுசரத்தை விட்டுக் கடலைக் கலக்கி அதிலுள்ள சுறாக்கள் துள்ளி விழுமாறு செய்து, வானரங்களின் படைகள் நடந்து செல்வதற்காக செம்மையான அணையொன்று அமைப்பேன். என் தம்பியே. வில்லை எடுத்துத் தா' என்றான் இராமன்.)

வருவாய் நளநீ மயவினையின் மாண்பு மதியும் படைத்தமையாற்
தருவாய் அலைநீர்க் கருங்கடலிற் தடந்திண் குரம்பொன்றி யாமெல்லாம்
வெருவா வகையான் மதிலிலங்கை மேவும்படி யென்றியம்புதலுந்
திருவாய்மொழிகேட்டதற் கிசைவான் தெய்வத்தச்சன் சிறுவனியான்.
38

('வருவாய் நளனே! நீ மயனுடைய சிற்பக் கலைத்திறனும், பெருமையும் பெற்றுள்ளமையால், இந்த அலைகடலில் மலைகளை யடைத்து திண்மையான தடம் ஒன்றினை நாங்களெல்லாம் வெருவா வகையில் மதில் சுவர் சூழ்ந்த இலங்கைக்குச் செல்லுமாறு தந்திடுவாய்' என்று திருவாய்மொழி இயம்பிடவும், தெய்வத்தச்சன் மகனான நளன் அதனைக் கேட்டு அதற்கு இசைந்தான்.)

கருட னெனவுங் காற்றெனவுங் கடியகவியின் கணமெழுந்தே
யருடங்கிராமன் தனைவிடைகொண்டு அவனியடங்கப் படர்ந்தெங்கு
மிருடங்கடவி மரங்கொடி புல் இருங்கல் எவையும் எடுத்திடலும்
பொருடங் குலகில் புனைவன்மகன் பொங்கு மகராலய மடைத்தான்.
40

(கருடனைப் போன்றும், காற்றினைப் போன்றும் குரங்குக் கூட்டம் விரைந்து எழுந்து அருளுடைய இராமனிடம் விடை பெற்றுக்கொண்டு உலகையே சூழ்ந்தது போன்று பரந்து படர்ந்து, காடுகளிலுள்ள மரம், செடி, கொடி, புல், மலைகள் எல்லாவற்றையும் எடுத்து வந்து தெய்வத் தச்சன் மகனான நளனிடம் கொடுக்கவும், அவன் பொங்குகின்ற கடலினை அடைத்து அணை செய்தான்.)

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

இப்பான்மையினா லிழைத்த கரைக்கிடம் யோசனை பத்தெழுபதொடு
முப்பானீளமிக சூரம்பின் மூலங்குளிக்கு முத்தர்பால்
வைப்பான்கருணை மதிமவுலி வண்மைவிரத மகந்தவஞ்செய்
மெய்ப்பான்மையினோரிடத்துறையும் வினைகள்யாவும் விளிந்திடுமால் 41

(இந்த வகையில் எழுப்பிய அணைக்கரையின் நீளம் நூறு யோசனை தொலைவாகும். இச்சேதுவினில் குளித்து மனத்தில் தவம் இயற்றும் உண்மையான பக்தர்களிடம் இறைவன் கருணை வைப்பான். அவர்கள் செய்த பாவம் யாவும் அழிந்து போய்விடும்.)

பயங்கொள் இருளின் படங்கிழிக்கும் பரிதியொளிபோற் படியிலதாம்
வயங்கொள் இராமன் வானரத்தால் வகுத்தசேது வதன்மூல
நயங்கொள் தருப்ப சயனமென ஞாலம்பகரு நான்மறையீர்
கயங்கொள் கடலின் முன்சேதுக் கண்டமுறையின் கதையீதால். 42

(அச்சம் ஏற்படுத்தும் இருளைக் கிழித்து அகற்றும் சூரியக் கதிர்கள் போன்று, இராமன் வயப்படுத்திய குரங்குகள் கட்டிய சேது ஆழ்ந்த கடலை அகற்றி வழிசெய்தது. நலம் தரும் தருப்பசயனம் என்று உலகில் போற்றும் நான்மறையீர்! கடலின் முன்பு சேது உருவாகிய கதை இதுவேயாகும்.)

◈

திருவேங்கடத் தலபுராணம்

சக்கரவர்த்தித் திருமகன் வேங்கடமடைந்த அத்தியாயம்

(மதுரகவி வீரராகவஸ்வாமி அய்யங்கார்)

திரும்பிவந் தெறுழ் வலித்தோட் சேனையினொருங்குகூடி
இருந்தனர் உதயகாலத்து இராகவன் இலங்கை வேந்தன்
அருந்தலை பத்துஞ்சிந்திக் காதலி தன்னை மீட்ப
விரும்பி வானரங்களோடு விரைந்து தென் சலதிமேவி. 29

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

(திரும்பி வந்து மிகுந்த வலிமையுடைய சேனையுடன் ஒன்றாய்க் கூடி இருந்தனர். உதய காலத்தில் இராமன், இலங்கை வேந்தனான இராவணனின் அரிய தலை பத்தினையும் கொய்து, தன் மனைவி சீதையை மீட்பதற்காக விருப்பமுடன் வானரங்களோடு தென் கடலுக்கு விரைந்து சென்றான்.)

சேது பந்தனஞ் செய்தேகித் திறன்மிகு கும்பகர்ணன்
மோது போர்வல்ல மேகநாதனே முதலாயுள்ள
பாதக ருடனே இராவணன் படக்கோ றூண்டிச்
சீதையை மீட்டு அயோத்தி சென்று மௌலி சூடி. 30

(சேது என்னும் அணையைக் கட்டி அதன்மீது சென்று, திறன்மிக்க கும்பகர்ணன், போரில் வல்ல மேகநாதன் முதலாயுள்ள எல்லா பாதகரையும், இராவணனையும் அம்பு எய்து கொன்று, சீதையை மீட்டு அயோத்தி சென்று முடி சூடினான்.)

◈

இராமாயண வெண்பா

சேது பந்தனப் படலம்

(வித்வான் சுப்ரமணிய ஐயர்)

கருவரைகள் காதங் கணக்கி லதனை
இருவரைதோள் சென்னிமிசை யேந்தி யொருகடலை
உற்றடைக்க மற்றை யொழிகடல்கள் வந்தனபோற்
கற்றொடுக்கும் வானரமாக் கள். 5

(கரிய மலைகள் காதக்கணக்கில் இருப்பதனை மலைபோன்ற இரு தோள்களிலும், தலைமீதும் ஏந்தி, ஒரு கடலை அடைப்பதற்கு மற்ற கடல்கள் திரண்டு வந்தது போன்று கற்களை வீசின வானரங்கள்.)

சேதுப் பெருமையது செப்புந் தரமுடைத்தோ
ஏதுவது வேண்டுமென வெண்ணுவதென் தூதனிட்ட
மாமலையி னீர்த்துவலை வாரி யிறைத்ததனால்
தாமலையு மீனந் தகைந்து. 36

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

(சேது அணையின் பெருமை, செப்புந் தரமுடையது அன்று. இயன்றதனைச் செய்ய நினைப்பதற்கு முன்னமேயே இராமனின் தூதுவனாகிய அனுமன் வீசிய மாமலையின் நீர்த்துவலை வானளவு சென்று வாரி இறைத்ததனால் விண்மீன்களும் சிதறி ஓடின.)

குலையா தடுக்கிவரு கொள்கை குறித்தான்
சிலையாது மொன்றொடொன்று சேர்த்து மலைகள்
முறித்தடுக்கி முற்றும் முழுமணலிற் கையால்
தறித்தடுத்துச் சேர்த்தான் தகைந்து. 45

(வானரங்கள் கொண்டுவந்த மலைகளை வானரத் தச்சனான நளன் வாங்கி, அவற்றைக் குலையாது அடுக்கும் கொள்கையுடன், ஒன்றோடு ஒன்று சேர்த்தும், மலைகளை முறித்தும் அடுக்கி, அவற்றிற்கிடையே மணலைப் பரப்பி ஒன்று சேர்த்தான்.)

மலைகள் சுமந்து வருவா னரங்கள்
நிலைநின்ற செல்ல நிலமும் அலைகடலும்
அன்ற தெனத்தலையி னானவொரு சேது
நின்றதெனக் காட்டும் நிலைத்து. 47

(மலைகள் சுமந்து வந்த வாரனங்கள் நடந்துசெல்ல நிலப்பகுதி இல்லாமல் வரிசையாக நின்றபோது, கடலில் மட்டும் அணை என்று இல்லை, தலையின் மீதும் ஒரு அணை நின்றதைப் போன்று இருந்தது.)

எய்தவரு யோசனைதா னீண்டு மொருநூறும்
அய்யிரண்ட தாகும் அகலமுடன் செய்த
அணையென் றுரைத்தார் அமரர்க்கு நாதன்
துணையொன்று தாளைத் துதித்து. 69

(அமரர்க்கு நாதனான இராமன் தாளைத் துதித்து, தாங்கள் எழுப்பிய அணையின் நீளம் நூறு யோசனையும், அகலம் பத்து யோசனையும் கொண்டதாகும் என்று உரைத்தனர்.)

◈

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

அகநானூறு

வென்வேற் கவுரியர் தொல்முது கோடி
முழங்குஇரும் பௌவம் இரங்கும் முன்துறை
வெல்போர் இராமன் அருமறைக்கு அவித்த
பல்வீழ் ஆலம் போல
ஒலி அவிந்தன்று இவ் அழுங்கல் ஊரே

(பாடல் - 70 : அடி 13 - 17)

(வெற்றியுடைய வேலினைக் கொண்ட பாண்டியரின் தொன்மையான கோடிக்கரை திருவணையருகில், முழங்கும் பெருங்கடல் ஒலிக்கும் முன்துறையில், போரில் வெல்லும் ஆற்றலுடைய இராமன் இலங்கையில் படையெடுப்பது குறித்து மறைகளை ஆய்ந்தபோது, புள்ளொலிகள் அடங்கிநின்ற பல விழுதுகளுடைய ஆலமரம் போன்று ஆரவாரமுடைய இவ்வூரும் அடங்கி நின்றது.)

◈

மகாகவி பாரதியார் பாடல்கள்

பாரத தேசம்

பல்லவி

பாரத தேச மென்று பெயர் சொல்லுவார் - மிடிப்
பயங் கொல்லுவார் துயர்ப்பகை வெல்லுவார்.

சரணங்கள்

வெள்ளிப் பனி மலையின் மீதுலவு வோம் - அடி
மேலைக் கடல் முழுதுங் கப்பல் விடுவோம்
பள்ளித் தல மனைத்துங் கோயில் செய்குவோம் - எங்கள்
பாரத தேச மென்று தோள் கொட்டுவோம். 1

சிங்களத் தீவினுக் கோர் பால மமைப்போம்
சேதுவை மேடுறுத்தி வீதி சமைப்போம்

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

வங்கத்தி லோடிவரும் நீரின் மிகையால்
மையத்து நாடுகளிற் பயிர் செய்குவோம். 2

(இந்நாட்டுக்குப் பாரததேசதம் ஏன்று பெயர் கூறுவர். சோம்பலையும், பயத்தையும் கொல்லுவார்கள். துயர்தரும் பகைவர்களை வெல்லுவார்கள்.

வெள்ளிப்பனி சூழ்ந்த இமயமலை மீது உலவுவோம். மேற்கிலுள்ள கடல் முழுவதும் கப்பல் விடுவோம். பள்ளிக் கூடங்களைக் கோயில்களாகக் கொண்டாடுவோம். பாரததேசம் எங்களுடையது என்று தோள் கொட்டுவோம்.

சிங்களத் தீவினுக்கு ஒரு பாலத்தை உருவாக்குவோம். சேதுவினை மேடாக்கி சாலை அமைப்போம். வங்க நாட்டில் பெருகிவரும் ஆறுகளின் நீரைக் கொண்டு மையத்திலுள்ள நாடுகளில் பயிர் செய்வோம்.)

◇

மணிமேகலை

உலக வறவி புக்க காதை

நெடியோன் மயங்கி நிலமிசைத் தோன்றி
அடலரு முந்நீர் அடைத்த ஞான்று
குரங்கு கொணர்ந் தெறிந்த நெடுமலை யெல்லாம்
அணங்குடை யளக்கர் வயிறு புக்காங்கு 9 - 12

(திருமால் ஏற்றுக்கொண்ட சாபத்தால் மயங்கி இராமனாக அவதரித்து இலங்கை நகரம் செல்வதற்காகக் கடலை அடைந்தபோது, குரங்குகள் கொண்டுவந்து எறிந்த பெரிய மலைகள் எல்லாம் கடலின் வயிற்றில் புகுந்தது போன்று...)

◇

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

அஷ்டப் பிரபந்தம்

(பிள்ளைப் பெருமாள் ஐயங்கார்)

திருவரங்கக் கலம்பகம்

அரவில் நடித்தானும் உரவில் ஒடித்தானும்
அடவி கடந்தானும் புடவி இடந்தானும்
குரவை பிணைத்தானும் பரவை அணைத்தானும்
கோசலை பெற்றானும் வீசலை உற்றானும்
முரனை அறுத்தானும் கரனை ஒறுத்தானும்
முத்தி அளித்தானும் அத்தி விளித்தானும்
பரம பதத்தானும் சரம விதத்தானும்
பாயல் வடத்தானும் கோயில் இடத்தானே. 16

(காளிங்கன் என்னும் நாகத்தின் தலைமீது நடனம் ஆடியவனும், வலிமை பொருந்த சிவதனுசினை ஒடித்தவனும், காட்டில் நடந்து சென்றவனும், பூமியைப் பன்றியாக மாறி கோட்டாற் குத்தி எடுத்தவனும், குரவைக் கூத்தாடினவனும், கடலில் மலையால் அணை கட்டியவனும், கோசலை ஈன்ற செல்வனும், அலைவீசும் பாற்கடலில் துயில்பவனும், முரன் என்னும் அரக்கனை அறுத்தவனும், கரன் என்னும் அரக்கனை தண்டித்தவனும், அடியவருக்கு முத்தி அளித்தானும், கஜேந்திரன் என்னும் யானையால் 'ஆதிமூலமே' என்று அழைக்கப்பட்டவனும், பரம பதத்தில் வாசம் செய்பவனும் சரமோபாயத்தை வழியாகக் காட்டுபவனும், ஆலிலையில் பள்ளிகொண்டவனும், திருவரங்க்த்தை இடமாகக் கொண்டவன் ஆவான்.)

கடல்வழி விடநிசி சரர்பொடி படஇரு கண்சீறி
வட கயிலையின் எழுவிடைதழு வியதும் மறந்தாரோ
அடல் அரவு அமளியில் அறிதுயில் அமரும் அரங்கேசர்
இடர்கெட வருகிலர் முருகலர் துளவும் இரங்காரே. 28

(வலிமைமிக்க அரவுப் படுக்கையில் அறிதுயில் கொண்ட அரங்கநாதர் என் துன்பம் நீக்க வருகிலர். மணம் கமழும் திருத்துழாய் மாலையும் இரங்கித் தரவில்லை, முன்னர் இராமனாக இருகண் சீறியதையும், கடல் அஞ்சி வழிவிட்டதையும், அரக்கர்கள்

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

பொடிபட்டதையும், வடகயிலையில் ஏழு காளைகளைத் தழுவிக் கொன்றதையும் மறந்து விட்டாரோ?)

திருவரங்கத்து மாலை

புடைக்கும் குடமுலைப் பூமக ளார்தம் பொருட்டு முந்நீர்
அடைக்கும் பெரிய பெருமாள் அரங்கர் அவர் கரத்துப்
படைக்கும் கமலம் அளிக்கும்மின் ஆழிப் படைபடைக்கும்
துடைக்கும் கதைமுத்தி மாற்றாது நல்கும் சுரிசங்கமே. 83

(பருக்கின்ற குடமுலைகளையுடைய சீதை பொருட்டாக கடலில் அணைகட்டி அடைக்கும் நம் பெரிய பெருமாளாகிய அரங்கர் திருக்கையில் உள்ள கமல மலர் காத்தலைச் செய்யும். மின்னல் போன்ற சக்கராயுதம் தோற்றுவித்தலைச் செய்யும். கதை ஆயுதம் அழித்தலைச் செய்யும். சுழிகொண்ட சங்கம் முத்தியைத் தவறாது கொடுக்கும்.)

திருவேங்கடத்து அந்தாதி

குன்றுகள் அத்தனையும்கடல் தூரக் குவித்து இலங்கை
சென்றுக ளத்துஅனை வோரையும் மாய்த்துத் திருச்சரத்தால்
அன்றுக ளத்தனை அட்டானை அப்பனை ஆய்மகள் தோள்
துன்றுக ளத்தனை ஏத்தவல் லார்க்குஇல்லை துன்பங்களே. 94

(குன்றுகள் அனைத்தையும் வானரப்படைகளைக் கொண்டு கடலில் தூர்த்து அணைகட்டி, இலங்கை சென்று போர்க்களத்தில் அரக்கர்கள் அனைவரையும் கொன்று, பிரம்ம அத்திரத்தால் இராவணனைக் கொன்றவனை, உயிர்களுக்குத் தந்தையானவனை, ஆயமகளாகிய நப்பின்னை தோள்களைப் பொருந்தும் கண்டத்தை யுடைய வேங்கடவனைத் துதிக்க வல்லாருக்குத் துன்பங்கள் இல்லை.)

அழகர் அந்தாதி

சேராத காத நரகுஏழ் தலைமுறை சேர்ந்தவர்க்கும்
வாராதுஅகாதம் வசைபிணி பாவம் மறிகடல்முன்
தூராத காதங்கள் தூர்த்தானை மாலிரும் சோலையில்போய்
ஆராத காதலுடன்பணி வீர்என் அழகனையே. 15

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

(மறிக்கின்ற கடலில் நூறுகாத தொலைவு மலைகளை நிரப்பி அணை கட்டியவனாகிய என் அழகர் பெருமானை திருமாலிருஞ் சோலையில் போய் தணியாத காதலுடன் வணங்குவீர்களாயின், ஏழு தலைமுறை சேர்ந்தவர்களுக்கும் தகாத நரகம் வந்து சேராது. வசையும், பிணியும், பாவமும் அண்டாது.)

என்றுஉ தரம்கலந் தேன்அற்றை நான்று தொட்டு இற்றைவரை
நின்று தரங்கிக்கின் றேற்குஅருள் வாய்நெடும் கான்கடந்து
சென்று தரங்கக் கடல்தூர்த்து இலங்கையில் தீயவரைக்
கொன்று தரம்குவித் தாய்சோலை மாமலைக் கோவலனே. 24

(நெடிய கானகம் கடந்து சென்று, அலைகடலை மலைகளால் தூர்த்து அணைகட்டி, இலங்கையில் அரக்கர்களைக் கொன்று மலையாகக் குவித்தவனே! திருமாலிருஞ்சோலை மலையில் உள்ள ஆயர்குலத்திலகமே! எப்போது என் தாயின் உதிரத்தில் கலந்தேனோ, அற்றை நாள்முதல் இன்றை நாள் வரை தொடர்ந்து அலைகின்ற எனக்கு அருள்செய்வாய்.)

பிழைத்தலை யான்எண்ணிப் பேசுகின் றேன்இப் பிணிமற்றொன்றால்
மழைத்தலை வார்குழ லீர்தணி யாது வருணனைமுன்
அழைத்துஅலை அங்குஅடைத்தார் அலங் காரர் அலங்கல் நல்கீர்
முழைத்தலை நின்று மலயா நிலம்வந்து மோதும் முன்னே. 41

(மேகம் போன்ற கூந்தலை உடையீர்! நான் நோயிலிருந்து பிழைக்கும் வழியை எண்ணிப் பேசுகின்றேன், இப்பிணி மற்றொரு வழியில் தணியாது. வருணனை முன்பு அழைத்து கடலில் மலைகளை இட்டு அணைகட்டி அடைத்த அழகருக்கு, மலைய பர்வதத்தினின்று தென்றல் வந்து உங்களைத் தாக்குவதற்கு முன்பாகவே மாலையைச் சூட்டுங்கள்.)

உடலம் புயங்கத்து உரிபோல் விடும் அன்று உவணப்புள்ளின்
அடல்அம் புயமிசை நீவர வேண்டும் ஐ ஆனனற்கும்
மடல்அம் புயற்கும் வரம்தரும் சோலைமலைக்கரசே
கடல்அம் புஉயர்வரை யால்அடைத் தாய் என்னைக் காப்பதற்கே.
53

(ஐந்து முகங்கள் கொண்ட சிவபெருமானுக்கும், தாமரையில் அமர்ந்த பிரமனுக்கும் வரம்தரும் சோலை மலைக்கு அரசே! கடல்

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

நீரில் உயர்ந்த மலைகளால் அணைகட்டி அடைத்தவனே! பாம்பு தன் தோலை விட்டு நீங்குதல் போன்று என் உடலிலிருந்து உயிர் பிரியும் நாளில் என்னைக் காப்பதற்காக கருடப் பறவையின் வலிய அழகிய தோள்மீது ஏறி நீ வரவேண்டும்.)

◈

திருப்புகழ்

முருகன் துதிப்பாடல்க்ள்

(அருணகிரிநாதர்)

குரைக் கருங்கடல் திருவணை யென்முனம்
அடைத்து இலங்கையின் அதிபதி நிசிசரர்
குலத்தொடும் பட வொரு கணை விடும் அரி மருகோனே. 9

(ஒலிக்கின்ற கருமையான கடலில் திரு அணையென முன்னம் அடைத்து இலங்கையின் அதிபதியான இராவணன் குலத்தொடு அழிந்துபட ஓர் அம்பினை எய்த திருமாலின் மருமகனே!)

முனைச் சங்கு ஒலிடு நீல மகோததி
அடைத்து அஞ்சாத இராவணன் நீள்பல
முடிக்கு அன்று ஓர் கணை ஏவும் இராகவன் மருகோனே. 82

(மூக்குடைய சங்கு ஒலிக்கின்ற நீலக்கடலை அடைத்து, அஞ்சாத இராவணனின் நீண்ட பல தலைகள் வீழ அன்று ஓர் அம்பினை எய்த இராகவனின் மருமகனே!)

அலைகடல் அடைத்தே மகா கோர ராவணனை
மணிமுடி துணித்து ஆவியேயான சாநகியை
அடலுடன் அழைத்தேகொள் மாயோனை மாமனெனு மருகோனே. 141

(அலைகடலை அடைத்து மிகவும் கோரமான இராவணனின் மணிமுடியைத் துண்டித்து உயிருக்கு நிகரான சானகியைப் போருக்குப் பின்னர் அழைத்துக்கொண்ட மாயோனாகிய இராமனை மாமனாக உடைய மருமகனே!)

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

நானாவித கருவிச் சேனை வகைவகை
சூழ்போது பிரபலச் சூரர் கொடுநெடு
நாவாய் செல் கடல் அடைத்து ஏறி நிலைமை இலங்கை சாய
நாலாறு மணிமுடிப் பாவிதனையடு
சீராமன் மருக! 202

(நானாவிதமான கருவிகளையுடைய சேனை வகை வகையாய்ச் சூழ்ந்து சென்று புகழுடைய வீரர்களைக் கொண்டு பெரிய கப்பல்கள் செல்லும் கடலை அணைகட்டி அடைத்துக் கரையேறி இலங்கையின் நிலையை சாய்த்து, பத்து மணிமுடிகளையுடைய பாவியாகிய இராவணனைக் கொன்ற ஸ்ரீ ராமனின் மருமகனே!)

செறித்த வளைகடலில் வரம்பு
புதுக்கி இளையவனொடு அறிந்து
செயிர்த்த அநுமனையும் உகந்து படையோடி
மறப்புரிசை வளையும் இலங்கை
யரக்கன் ஒருபது முடி சிந்த
வளைத்தசிலை விஜய முகுந்தன் மருகோனே 245

(செறித்து வளைந்த கடலில் அணையைக் கட்டி, இலக்குவனோடு நிலைமையறிந்து, சினமுடைய அனுமனையும் போற்றிப் படையுடன் சென்று, போர்த்திறன் மிக்க மதில் சூழ்ந்த இலங்கையின் அரசனான இராவணனின் பத்து தலைகளும் வீழுமாறு வில்லை வளைத்த வெற்றியுடைய முகுந்தனாகிய திருமாலின் மருமகனே!)

வேலை வற்றிட நற்கணை தொட்டு அலை
மீதடைத்து தனிப்படை விட்டுற
வீறு அரக்கன் முடித்தலை பத்தையும் மலைபோலே
மீதறுத்து நிலத்தில் அடித்து மெய்
வேத லட்சுமியைச் சிறை விட்டருள்
வீர அச்சுதனுக்கு நல் அற்புத மருகோனே. 280

(கடலானது வற்றும்படி சிறந்த அம்பை எய்து, கடல்மீது அணைகட்டி ஒப்பற்ற படையைச் செலுத்தி செருக்குற்ற அரக்கனின் பத்துத் தலைகளையும் மலைபோல நிலத்தில் வீழச்செய்து, வேத லட்சுமியான சீதையைச் சிறைமீட்டு அருளிய வீரமுடைய அச்சுதனாகிய திருமாலுடைய நல்ல அற்புதமான மருமகனே!)

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

விரவி நெருங்கு குரங்கினங் கொடு
மொகுமொகெனுங் கடலுங் கடந்துறு
விசைகொடு இலங்கை புகுந்து அருந்தவர் களிகூர
வெயில் நிலவும்பரும் இம்பரும்படி
ஜெயஜெய வென்று விடுங் கொடுங்கணை
விறல் நிருதன் தலை சிந்தினன் திரு மருகோனே. 325

(படர்ந்து நெருங்கிய குரங்குக் கூட்டத்தைக் கொண்டு 'மொகு மொகு' என்று ஒலிக்கும் கடலினைக் கடந்து மிகுந்த வேகத்துடன் இலங்கையில் புகுந்து அருந்தவத்தோர் மகிழ்ச்சியடைய, சூரியன், சந்திரன், வானவர், மக்கள் 'வெற்றி வெற்றி' என்று சொல்ல, கொடிய கணையை விடுத்து இராவணன் தலையை வீழச்செய்த இராமனின் மருமகனே!)

பாத சிலம்பு புலம்பும் அம்பத
வரிமுக எண்கினுடன் குரங்கணி
பணிவிடை சென்று முயன்ற குன்றணியிடையே போய்ப்
பகடி இலங்கை கலங்க அம்பொனின்
மகுட சிரம் தசமும் துணிந்து எழு
படியுநடுங்க விழும் பனம்பழம் எனவாகும். 361

(பாதத்திலுள்ள சிலம்பு ஒலிக்கும் அழகிய திருவடிகளை உடைய இராமன், கரடிகள், குரங்குகள் படை பணி செய்து உருவாக்கிய கற்பாலத்தினிடையே போய் இலங்கை கலங்க இராவணன் பொன்மகுடத்தலைகள் பத்தும் துண்டித்து, பனம்பழம் போல் விழுமாறு செய்து ஏழுலகையும் நடுங்கச் செய்தான்.)

கடிதுலாவு வாயு பெற்ற
மகனும் வாலி சேயும் மிக்க
மலைகள் போட ஆழி கட்டி யிகலூர்போய்க்
களமுறானை நேர் நுறுக்கி
தலைகள் ஆறுநாலு பெற்ற 450
அவனை வாளியால் அடத்தன் மருகோனே.

(கடுவிரைவிற் செல்லும வாயு பெற்ற மகனான அனுமனும், வாலியின் மகனான அங்கதனும் நிறைய மலைகளையிட்டுக் கடலில்

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

அணைகட்டிப் பகைவர் ஊருக்குச் சென்று போர்க்களத்தில் வந்த யானைகளைக் கொன்று, பத்துத் தலைகள் பெற்ற இராவணனை அம்பினால் கொன்ற திருமாலின் மருமகனே!)

அறந் தழைத்த அநுமானோடு மாகடல்
வரம்பு அடைத்ததின் மேலேறி இராவணன்
அரண்குலைத்து எதிர்போராடு நாரணன் மைந்தனான
அனங்கன் மைத்துன வேளே! 514

(அறநெறிமிக்க அனுமனுடன் போய், கடலில் மீது பெரிய அணைகட்டி, அதன்மீது சென்று இராவணன் கோட்டையை சிதைத்து எதிர்த்துப் போரிட்ட நாராயணன் மைந்தனான மன்மதனுக்கு மைத்துனனான செவ்வேளே!)

கருதி யிருபதுகரம் முடியொருபது
கனக மவுலி கொள் புரிசைசெய் பழையது
கடிய வியனகர் புகவரு கனபதி கனல்மூழ்கக்
கவச அநுமனொடு எழுபது கவிவிழ
அணையில் அலையெறி யெதிரமர் பொருதிடு
களரிதனிலொரு கணைவிடு மடலரி மருகோனே. 523

(இருபது கரங்களும், பொன்முடியுடன் கூடிய பத்து தலைகளும் உடைய இராவணனின் பழமையான மதில்களும் காவலும் கொண்ட, புகுதற்கு அரியதான இலங்கை நகரை எரியினில் மூழ்கச் செய்து, கவசம் போன்ற அனுமனுடன் எழுபது வெள்ளம் குரங்குகள் மலைகளைக் கொண்டு கடலில் எறிந்த அணையினில் நடந்து சென்று போரிட்டு, ஒரு கணையினை விட்டு வென்ற திருமாலின் மருமகனே!)

அடைத்தார் கடல் ஓர் வல்இராவண
குலத்தோடு அரியோர் சரனார் சினம்
அழித்தார் முகில்ஏய் நிற ராகவர் மருகோனே. 764

(கடலில் அணை கட்டியவர்; ஒப்பற்ற வலிமை உடைய இராவணனைக் குலத்தோடு அழித்த ஓர் அம்பினைக் கொண்டவர்; அசுரர் சினம் அழித்தவர்; முகிலின் கருநிற வண்ணமுடைய திருமாலின் மருமகனே!)

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

தருக்கு மற்கடப் படைப் பலத்தினிற்
தடப் பொருப்பு எடுத்து அணையாகச்
சமுத்திரத்தினைக் குறுக்கடைத்ததில்
தரித்து அரக்கர் பொட்டெழவே போர்
செருக்கு விக்ரமச் சரத்தை விட்டுறச்
செயித்த உத்தமத் திருமாமன். 801

(வீரப் பெருமிதம் உடைய குரங்குப் படையின் பலத்தால் மலைகளை எடுத்து, கடலினில் அணைகட்டி, அதன் வழியாகச் சென்று அங்கிருந்த அரக்கர் மாயும்படி போர்செய்து வெற்றிதந்த அம்பைச் செலுத்திய உத்தமராகிய அழகிய மாமன் திருமால்.)

சங்க தசக்ரீவனோடு சொலவள
மிண்டு செயப் போன வாயு சுதனொடு
சம்பவ சுக்ரீவனாதி யெழுபது வெளமாகச்
சண்டகவிச் சேனையால்முன் அலைகடல்
குன்றில் அடைத்து ஏறி மோச நிசிசரர்
தங்கிளை கெட்டோட ஏவு சரபதி மருகோனே. 821

(பத்துத் தலைகளுடைய இராவணனிடம் தூது செல்வதற்குரிய சொல்வளமும், வீரமும் நிறைந்த வாயுமைந்தனான அனுமனுடன், சுக்ரீவன் முதலான எழுபது வெள்ளம் குரங்குச் சேனையைக் கொண்டு அலைகடலைக் குன்றுகளால் அடைத்து அதன்மீது ஏறிக் கடந்து சென்று மோசம் செய்த அரக்கர்களைச் சுற்றத்துடன் அழித்து ஓடச் செலுத்திய அம்பை ஏவிய தலைவரான திருமாலின் மருமகனே!)

ஆழி யடைத்துத் தங்கை யிலங்கையை யெழுநாளே
ஆண்மை செலுத்திக் கொண்ட கரும்புயல் மருகோனே. 853

(கடலை அடைத்து அணைகட்டி ஏழு நாளில் இலங்கையைத் தம் கையில் கொண்டுவர வீரத்தைச் செலுத்தி வென்ற கரிய மேகநிறம் கொண்ட திருமாலின் மருமகனே!)

வேலை யடைத்து வரங்கள் சாடி அரக்கர் இலங்கை 854
வீடணருக்கருள் கொண்டல் மருகோனே.

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

(கடலை அடைத்து அணைகட்டி, அரக்கர் வாழ்ந்திருந்த இலங்கையை வென்று ஆட்சியை வீடணருக்கு அருளிய மேக வண்ணராகிய திருமாலின் மருமகனே!)

சினத்துக் கடிவீசி மோது மாகடல்
அடைத்துப் பிசிதாச னார்தி மாமுடி
தெறிக்கக் கணை யேவு வீரமாமன் 963

(விரைந்து அலைகளை வீசி மோதும் பெருங்கடலைச் சினத்துடன் மலைகளால் அடைத்து, ஊன் உண்ணும் அரக்கரின் தலைவனாகிய இராவண்ணனின் மாமுடிகள் தெறித்து வீழ அம்பை ஏவிய வீரனாகிய மாமன் திருமால்.)

அமரர் துதிக்கப் புரந்தரன் தொழ
எழுபது வர்க்கக் குரங்கு கொண்டெறி
யலையை யடைத்துக் கடந்து சென்றெதிர் முந்து போரில்
அசுரர் முதற் கொற்றவன் பெருந்திறல்
இருபது கொற்றப் புயங்கள் சிந்திட
அழகிய கொத்துச் சிரங்கள் ஒன்பதும் ஒன்றும்மாளக்
கமல மலர்க்கைச் சரம் துரந்தவர் மருமக. 1027

(அமரர்கள் துதிக்கவும், இந்திரன் தொழவும் எழுபது வெள்ளம் குரங்குகளைக் கொண்டு மலைகளை எறிந்து அணைகட்டிக் கடலை அடைத்து அதன்மீது சென்று, எதிர்வந்த போரில் அசுரர் தலைவனாகிய இராவணனின் இருபது கைகளும், பத்துத் தலைகளும் வீழுமாறு தாமரை மலர்க் கையினால் அம்பை எய்த திருமாலின் மருமகனே!)

வேலை யடைக்க அரிக்குலத்தொடு
வேணு மெனச் சொலும் அக்கணத்தினில்
வேகமொடு அப்புமலைக் குலத்தை நளன் கைமேலே
வீச அவற்றினை யொப்பமிட்டணை
மேவி அரக்கர் பதிக்குள் முற்பட
வீடணனுக்கருள் வைத்தவர் தமையன்கள் மாளக்
கால யிலக்கணை தொட்டருட் கனமால். 1162

(கடலை அடைக்கவேண்டும் என்று வானரக் கூட்டத்திடம் சொன்ன அக்கணத்திலேயே வேகமுடன் கடல்நீரில் மலைகளின்

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

கூட்டத்தை நளன் தன் கைமீது வாங்கி வீசி, அவற்றைப் பொருந்துமாறு அணைகட்ட, அதன்மீது சென்று அரக்கர் நகருக்குள் சென்று வீடணனுக்கு அருள்செய்து அவன் தமையன்கள் மாளுமாறு அம்பை எய்த திருமால்.)

அநுமனொடு கவிகூட வாராக நீராழி
யடைசெய்து அணைதனிலேறி மாபாவி யூர்மேவி
அவுணர் கிளைகெட நூறி யாலால மாகோப நிருதேசன்
அருணமணி திகழ்பாரா வீராக ராமோலி
ஒருபதுமொர் கணைவீழவே மோது ,போராளி
அடல்மருக குமரேச மேலாய வானோர்கள் பெருமாளே. 1168

(அனுமனொடு குரங்குக் கூட்டம் வந்து கடலினை அடைத்து அணைசெய்து அதன்மேல் ஏறிப்போய் மாபாவியான இராவணன் ஊர் அடைந்து அரக்கர் உறவுகள் கெட அனைவரையும் கொன்று, ஆலகாலம் போல் சினந்துவந்த இராவணனின் பத்துத் தலைகளையும் ஒரு கணையினால் வீழ்த்தித் தாக்கிய வில்வீரனான இராமனின் மருமகனாகிய குமரனே, வானோர்களின் மேன்மைமிக்க பெருமாளே!)

உததி புதைபட அடைத்து ஆதவன்
நிகரில் இரதமும் விடுக்கா நகர்
ஒருநொடியில் வெயில்எழச் சாநகி துயர்தீர
உபய ஒருபது வரைத்தோள்களு
நிசிசரர்கள் பதி தசக்ரீவமும் 1200
உருள ஒருகணை தெரித்தான்.

(கடலானது புதையும்படி அணைகட்டி அடைத்து, சூரியனுடைய நிகரற்ற தேர் வானில் வராதபடி தடுத்திருந்த இலங்கை நகரில் ஒரு நொடிப்பொழுதில் வெயில் எழுமாறு செய்து, சானகியின் துயர் தீரும்படி அரக்கர் தலைவனான இராவணனின் பத்துத் தலைகளும், இருபது தோள்களும் உருளும்படி ஓர் அம்பினை எய்த திருமால்.)

அளவில் வன்கவிச் சேனை பரவிவந்த சுக்ரீவ
அரசுடன் கடற்றூளி யெழவே போய்
அடலிலங்கை சுட்டாடி நிசிசரன் தசக்ரீவம் 1246
அற வொரம்பு தொட்டார்தம் மருகோனே. ✤ 55

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

(அளவற்ற வலிமையுடைய குரங்குப் படை பரவ வந்த சுக்ரீவன் என்ற அரசனுடன் கடலில் அணைகட்டி தூசி எழச்சென்று பகையான இலங்கை நகரைத் தீக்கிரை செய்து அரக்கனான இராவணனின் பத்துத் தலைகளும் இற்று வீழும்படி ஓர் அம்பினைச் செலுத்திய இராமனின் மருமகனே!)

திரையாழி சேது கண்டு பொரு ராவணாதி வென்ற
திருமால்முரிரா தங்கை அருள்பாலா! 1286

(அலைமோதும் கடலில் அணை கட்டிப் போரில் இராவணன் தலைமையிலான அனைவரையும் கொன்று, முரன் என்ற அசுரனைக் கொன்ற திருமாலின் தங்கையுடைய அருள்மிகுந்த பாலனே!)

◈

மீனாட்சியம்மை பிள்ளைத்தமிழ்

குமரகுருபரர்

கடகளி றுதவுக பாய்மிசைப் போர்த்தவள்
கவிகுவி துறுகலின் வாரியைத் தூர்த்தவள்
கடல்வயி றெரியவொள் வேலினைப் பார்த்தவள்
கடிகமழ் தருமலர் தார்முடிச் சேர்த்தவள். 12

(மதயானையின் தோலை மேலங்கியாகப் போர்த்தவள்; குரங்குகள் குவித்த சிறுகற்களால் கடலைத் தூர்த்தவள்; கடல் வயிறு எரியுமாறு ஒளிமிக்க வேலினைப் பாய்ச்சியவள்; மணம் கமழும் கற்பக மலரை மாலையாக முடியில் அணிந்தவள்.)

குறிப்பு : சிவபெருமான் யானைத் தோலைப் போர்த்தது உமையின் செயலாகவும், இராமன் சேதுவைக் கட்டியது நாராயணியின் செயலாகவும், முருகன் கடலில் வேல் எறிந்தது கௌமாரியின் செயலாகவும் இங்கு சத்த மாதர்களின் பெருமைக்காகக் கூறப்பட்டது.

◈

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

கல்லாடம்

கல்லாடர் இயற்றியது

92. பரத்தையிற் பிரிவு உரைத்தல்

மாகுகன் நதிவிட ஊக்கி வனத்துக்
கராதி மாரீசன் கவந்தனுயிர் மடித்து
இருசிறைக் கழுகினர்க்கு உலந்தகடன் கழித்து
எறிவளி மகனை நட்டேழு மரத்தினுக்கு
அரிக்கு கருங்கடற்கு ஒரோ ஒரு கணைவிடுத்து
அக்கடல் வயிறுஅடைத்து அரக்கனுயிர் வெளவி
இலங்கை அவ்வரக்கற்கு இளையோன் பெறுகளனத்
தமதூர் புகுந்து முடிசுமந் தோர்க்கும்
நான்முகத் தவர்க்கும் இருபால் பகுத்த
ஒருநுதல் கண்ணவன் உறைதரு கூடல். அடி 31-40

(பெருமைமிக்க குகன் கங்கை நதியைக் கடக்க உதவிட ஊக்கமளித்து, கானகத்தில் கரன், மாரீசன், கவந்தன் ஆகியோரின் உயிரை மாய்த்து, இராவணனுடன் போரிட்டு மாண்ட இருசிறகுடைய கழுகினத்தைச் சேர்ந்த சடாயுவுக்கு ஈமச்சடங்குகள் செய்து, வாயுவின் மகனுடன் நட்புப்பூண்டு, ஏழு மராமரத்திற்கும் வாலிக்கும், கருங்கடலுக்கும் ஒவ்வொரு கணையை விடுத்து, கருங்கடலில் கடந்து செல்ல ஓர் அணையைக் கட்டி, அரக்கனாகிய இராவணன் உயிரைக் கவர்ந்து, இலங்கையை இராவணன் தம்பியாகிய விபீடணன் பெறுக எனக் கொடுத்து, சீதையுடன் மீண்டும் தம் நாடு திரும்பி முடிசூட்டிக்கொண்ட இராமனாகிய திருமாலுக்கும், நான்முகனுக்கும் இரண்டு பாகம் பகுத்தளித்த, நெற்றிக்கண் உடைய சிவபெருமான் வீற்றிருக்கும் கூடல் நகரெனப்படும் மதுரை.)

◈

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

தக்கயாகப் பரணி

(ஒட்டக்கூத்தர்)

எறிப்பவெறிபடை நிசிசரன்சிர மொருபதுங் கரமிருபதும்
தறிப்பவொருசரம் விடுவதுங்கடல் சுடுவதுங் குனிசாபமே. 163

(சோதி விட்டு எறியவல்ல படையையுடைய அரக்கன் இராவணனுடைய தலைபத்தும், கை இருபதும் அறுந்து போகும்படி ஒரு சரத்தை விட்டதும், க்டலரசன் அழைத்தபோது வராத நிலையில் ஒரு சரம் விட்டுக் கடலைக் கொதிக்கவைத்ததும் இராமனின் வளைந்த வில்லாகும்.)

◇

மூவருலா

ஒட்டக்கூத்தர்

3. இராசராச சோழனுலா

- பொருது
சிலையால் வழிபடு தெண்டிரையைப் பண்டு
மலையால் வழிபட வைத்தோன். 12

(இராமன், தான் போரிட்ட வில்லால் வணங்கிய கடலை மலைகளைக்கொண்டு வழியுண்டாகும்படி செய்தவன்.)

- முற்கோலி
வட்ட மகோததி வேவ வொருவாளி
விட்ட திருக்கொற்ற விற்காணீர். 84

(வட்டமான கடல் எரியும்படி ஓர் அம்பை இராமன் முன்னே வளைத்துச் செலுத்திய வில்லைக் காண்பீர்.)

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

- மாதண்ட
முற்றக் கடல்கிடந்து வேவ முனிந்தின்னம்
கொற்றத் தனிவிற் குனியாதோ. 310

(இராமன் கோபத்துடன் கடல் முற்றவும் வற்றும்படி அம்பெய்து பெரிய தண்டனையளிப்பதற்கு அவனுடைய அரச வில்லானது வளையாதோ?)

◇

கப்பற்கோவை

கார்க்குன்று கொண்டு கவிக்கடலாகக் கருங்கடலைத்
தூர்க்குங் கனைகழற் றொண்டையர்கோன் கப்பல் சூழ்சிலம்பர்
யார்க்கும் பழுதுரை யாரிதுநீமற வின்னருவி
ஆர்க்கும் வரையணங் கேயணங் கேலென்ப மன்பருக்கே. 268

(கரிய கடலைக் குரங்குக்கடல் ஆகும்படி கரிய மலைகளைக் கொண்டு தூர்க்கும் தலைவராகிய இராமபிரானை ஒத்த ஒலிக்கும் கழலுடைய தொண்டைமன்னர் கப்பல்கள் சூழ்ந்த மலைகளை யுடையவர். யாரிடமும் தவறான சொல் கூறமாட்டார். நீ தவறான எண்ணம் கொள்ள வேண்டாம். மலைவாழும் சூரர் மகளான தெய்வமே, தலைவருக்குத் தீங்கு உண்டாக்காதே என்று வணங்குவோம்.)

தேர்த்தானை மன்னன் றிருமுகத் தாமரைச் செவ்வி நவ்வி
பார்த்தா ளிதுநல்ல பாயலென் னாள்பண்டு தெண்டிரைநீர்
தூர்த்தானை வண்டுவரைத் தொண்டைமானைத் தொழாரினங்கம்
வேர்த்தா ணெடிதுயிர்த் தாளணிந்தாண் மணிமேகலையே. 368

(முன்பு இராமனாகக் கடல்நீரை அணைகட்டித் தூர்த்தவனை - இன்று தேர்ப்படையுடைய தலைவனாகிய தொண்டைமானை - மான் போன்ற அழகிய தலைவி திருமுகம் பார்த்தாள். தொழாத

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

பகைவரைப்போல வேர்த்து, பெருமூச்செறிந்து மேகலையை அணிந்து தன் புலவியைக் குறித்தாள்.)

◈

கந்தரலங்காரம்

அருணகிரிநாதர்

கவியாற் கடலடைத்தோன் மருகோனைக் கணபணக்கட்
செவியாற் பணியணி கோமன் மகனைத் திறலரக்கர்
புலியார்ப் பெழத்தொட்ட போர்வேள் முருகனைப் போற்றியன்பாற்
குவியாக் கரங்கள்வந் தெங்கே யெனக்கிங்ஙன் கூடியவே. 43

(குரங்குகளைக்கொண்டு கடலை அடைந்து அணைகட்டிய திருமாலின் மருமகனை, கண்ணைச் செவியாக உடைய பாம்பினை அணியாக அணிந்த சிவபெருமான் மகனை, அரக்கர்களைப் புலி போன்று ஆர்த்து வென்ற வீரனாகிய முருகனை அன்புடன் வாழ்த்தி வணங்காத கரங்கள் எனக்கு இங்கு வந்து கூடினவே!)

சாகைக்கு மீண்டு பிறக்கைக்கு மன்றித் தளர்ந்தவர்க்கொன்
றீகைக் கெனைவிதித் தாயிலையே இலங்காபுரிக்குப்
போகைக்கு நீவழி காட்டென்று போய்கடல் தீக்கொளுத்த
வாகைச் சிலைவளைத்தோன் மருகாமயில் வாகனனே. 54

(இலங்கை நகருக்குச் செல்வதற்கு நீ வழிகாட்டு என்று கடலரசனை அழைப்பதற்காக வெற்றிமிக்க வில்லை வளைத்து தீயெழவைத்த அம்பைச் செலுத்திய திருமால் மருமகனே, மயிலை வாகனமாக உடையவனே! இறப்பதற்கும், பிறப்பதற்கும் அல்லாமல், தளர்ந்தவர்களுக்கு ஒன்றை ஈவதற்கு என்னை விதித்தாய் இல்லையே!)

◈

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

இராசராச சேதுபதி ஒருதுறைக் கோவை

ரா.இராகவையங்கார்

அணையலை யீந்திலங்காபுரி வேந்தை யழித்தவன்றன்
றுணையலை யாவரசாக்கிய தேவற்குத் தூண்டெழிற்றே
ரிணையிலை யென்னச்செய் சீராசராச னிருங்கிரியீர்
பிணையலை யீந்துபின்னே செண்டு நல்கல் பெருவழக்கே. 37

(கடலில் அணையைக் கட்டி இலங்கை வேந்தனாகிய இராவணனை அழித்து அவனுடைய இளவல் விபீடணனை அரசாக்கிய இராமனுக்குச் செலுத்தப்படும் அழகிய தேருக்கு ஒப்பில்லையெனச் செய்யும் இராசராச சேதுபதியின் மலையைச் சேர்ந்தவர்கள் மாலையைக் கொடுத்துப் பின்னர் பூச்செண்டினைத் தருவது உலக முறைமையேயாகும். அலையும் கண்களை ஈயாது செண்டாகிய முலையை நல்குதல் வழக்கில்லை என்பது குறிப்பு.)

அலைக்கணை யிட்ட பெருமானுக் கன்ப னடையலரைச்
சிலைக்கணை தொட்டுவெல் சீராசராசன் றினமளிக்கும்
மலைக்கணை யுற்றரி திற்றெளிவுற்ற மடந்தையர்தாம்
தலைக்கணை யில்லாமற் பாய்மாத்திரங் கொடுத்தா ரென்னையே. 104

(கடலில் அலைக்கு அணைகட்டிய இராமன் - தம்மைச் சேராத பகைவர்மீது வில்லில் அம்பைத் தொடுத்து வெல்லும் இராசராச சேதுபதி - மலையிலே பொருந்தி அரிதில் தெளிவுற்ற பெண்டிருக்குத் தலைக்கு அணை இல்லாமல் பாய்மாத்திரம் கொடுத்தார். முகத்தில் பொருந்திய அம்பாகிய கண்ணைத் தராமல் எழுச்சியுற்ற யானை போன்ற மார்பினைக் கொடுத்தல் என்னையோ? என்பது குறிப்பு.)

◈

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

கோவிந்த சதகம்

நாராயணபாரதி

வாலியைக் கொன்றுசுக் ரீவனைப் பட்டத்தில் வைத்து முந்நீர்
வேலிக டந்திலங் கைவீடணனை விளங்கவைத்தாய்.

(வாலியைக் கொன்று சுக்கிரீவனுக்கு அரசுரிமை அளித்து, கடலில் அணைகட்டிக் கடந்து இலங்கை இராவணனைக் கொன்று வீடணனுக்கு அரசுரிமை அளித்தாய்.)

◇

ஸ்ரீ திருக்குறுங்குடி அழகிய நம்பியுலா

- மைக்கடலின்
வீறடைத்து மேவுமணைமீது சென்றீர் என்னிருகண்
ணாறடைத்து மேவுமணை காணீர்! 149

(கருமையான கடலின் ஆற்றலை அடக்கி அதன்மீது திகழும் அணைமீது நடந்து சென்றீர்! என் இரு கண்களிலிருந்து பொங்கும் கண்ணீர் ஆற்றை அடைத்துக் கடக்கும் அணையைக் காணமாட்டீர்!)

◇

திருஎவ்வுள் பதிற்றுப்பத்தந்தாதி

பரவை யணைசெய் நாயகனைப்
பார்த்தற் கருளுந் தாயகனை
குரவை பிணைத்த யாதவனைக்
கோதி லெவ்வுண் மாதவனை

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

யரவை யணைகொள் நாரணனை
யம்போ ருகக்கை வாரணனை
கரவை யகற்றி மடநெஞ்சே
கருதிற் பதவி பெறுவாயே. 3

(கடலில் திருவணை கட்டிய தலைவனை, அர்ச்சுனனுக்கு உபதேசம் அருளிய தாய்க் கருணை மிக்கவனை, குரவைக் கூத்தில் பெண்களைப் பிணைத்த யாதவர் குலத்தவனை, குற்றமற்ற திருஎவ்வுள் பதியின் பெருமானை, பாம்பணையில் பள்ளிகொள்ளும் நாராயணனை, தாமரை மலர்போன்ற கையில் சங்குடையவனை, மடநெஞ்சமே! நீ கபடம் அகற்றி உள்ளுவாய் எனில் பரமபதம் பெறுவாய்.)

◇

திருக்கடன் மல்லைப் பதிற்றுப்பத்தந்தாதி

(வரதராசக் கவி இயற்றியது)

வாழ்வினைச் சிறப்பென் றுன்னியே நெடிய
மாற்குர வையிலுழ லாமற்
றாழ்விலா நினது பதந்தனை வருடத்
தமியனுக் கிருவர மருள்வாய்
ஆழ்கலி யகட்டிற் பொறைமிதந் திடச்செய்
தாண்டிடு மாதியே நினைத்தோர்
ஊழ்வினை யகற்றுந் திருக்கடன் மல்லை
யுவந்துறை யாயர்க ளேறே. 22

(ஆழமுள்ள கடலில் பாறைகளை மிதந்திடச் செய்து ஆட்கொள்ளும் முதல்வனே! உன்னை நினைத்தவர்களின் ஊழ்வினைகளை அகற்றும் திருக்கடல் மல்லையில் விரும்பி உறையும் ஆயர்குலத் தலைவனே! இந்தப் புவிவாழ்க்கையை சிறந்ததென்று கருதி நீண்ட ஆசைக்கடலில் உழலாமல், தாழ்விலா

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

உனது திருவடிகளைச் சேர்ந்திருக்க தனியனாகிய எனக்குப் பெரும் வரத்தினை அருள்செய்வாய்!)

வையக மதிற்புகழு மாமகிமை சேது
மான கடன் மல்லைநில யத்தினிலி யங்குஞ்
சையபுய முற்றவசு தேவனிய நோன்பு
தன்னிலுத யஞ்செய்நிதி யேசெய மணைந்த
வையமரும் வேல்விழியர் மானலினின் மேவி
மாழ்கலடை யாதுனது வாரிய மலர்போற்
செய்யசர ணத்தினை யனவரத முன்னத்
தீவிரமு டன்றருதி யருடையை சிறந்தே. 91

(இவ்வையகத்தில் புகழ்பெற்ற, பெரும் மகத்துவம் பொருந்திய சேது தலத்திற்கு இணையான திருக்கடன் மல்லை திருத்தலத்தில் வதியும், மலை போன்ற தோளுடைய வாசுதேவனின் நோன்பினில் உதித்த செல்வமே! வெற்றிகொள்ளும் கூர்விழிகளையுடைய பெண்களின்மீது மயக்கமுற்று துன்பம் அடையாது, உம்முடைய செய்ய தாமரை அடிகளை எப்போதும் எண்ணியிருக்குமாறு உன் சிறந்த அருளையும், கருணையையும் விரைந்து வழங்குவாயாக!)

◈

திருவேங்கடக் கலம்பகம்

முத்தமிழ்க்கவி வீரராகவ முதலியார்

ஈரடித்தாழிசை

நன்மீன வுருவெடுத்த நான்றிலொரு செலுக்கிடந்த
பன்மீனத் தடங்கடலைப் பலகிரியா லடைத்ததனையே 1

(அழகிய மச்சாவதாரம் எடுத்தநாளில் செதில்களோடு கிடந்த பல்வகை மீன்களுடன் தங்கியிருந்த கடலை இராமாவதாரத்தின் போது பலமலைகளையிட்டு அடைத்து அணைகட்டினாயே!)

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

மடக்குக் கட்டளை மண்டலக் கலிப்பா

பதத்தளந்தது முப்புவ னத்தையே
பண்டடைத்தது முப்புவ னத்தையே
வதைத்ததேற்றிடு மாத்தா னவரையே
மழைக்கெடுத்தது மாத்தா னவரேயே 57

(வாமன அவதாரத்தில் காலால் அளந்தது மூவுலகையும் ஆகும். இராமாவதாரத்தில் முன்னர் அடைத்ததும் உப்புநீர்க் கடலையாகும். கூர்மாவதாரத்தில் துன்பத்தை ஏற்றது திருப்பாற்கடலில் அமுதம் கடைந்தபோது மந்தர மலையைத் தாங்கியதாகும். கிருஷ்ணா வதாரத்தில் இந்திரன் கோபித்து மழை பெய்வித்தபோது குடையாகப் பிடித்தது கோவர்த்தன மலையையாகும்.)

◇

வைகுந்தநாதன் பிள்ளைத்தமிழ்

சிறுதேர்ப் பருவம்

கலைமதி நுதற்சனகி சிறையுறை யிலங்கைநகர்
காணமுந் நீரரசனைக்
கருதியுவ சித்ததிலு மதியா திருந்ததைக்
கண்டுகணை யொன்றேவவே
மலையைநிகர் புயவருணன் உள்நொந்து நைந்துருகி
வாடியிரு கண்பனித்து
வந்தடி விழக்கருணை யுந்திய பகழியினை
மருவுகாந் தாரதீவிற்
கொலைநடலை வஞ்சனை செயுங்கொடிய நிருதரின்
குலமறுத் திடவிடுத்துக்
கோளரி யெனப்பொருவு மாருதிமுதற்றலைவர்
கொண்டுதவு குன்றமென்னுஞ்
சிலைகொண்டு கடலினை யடைத்துமகிழ் காகுத்த
சிறுதே ருருட்டியருளே
சீதைபுகழ் வைகுந்தை நாதரகு வீரநீ 7
சிறுதேருருட்டியருளே.

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

(வளர்பிறை நெற்றியுடைய சீதை சிறையில் உறைகின்ற இலங்கை நகருக்குச் செல்ல கடலுக்கு அரசனைக் கருதி உபாசனை செய்ய, அவன் மதியாமல் இருந்ததைக்கண்டு அக்கினிக் கணையொன்றினை இராமன் அபிமந்திரிக்கத் தொடங்கவும், மலையொத்த புயமுடைய வருணன் மனம்நொந்து, நைந்து, உருகி, வாடி, இருகண் நீர் பொழிய வந்து இராமன் திருவடிகளில் வீழ்ந்தான், மனமிரங்கிய இராமன் தான் எடுத்த அம்பிற்கு இலக்கு கேட்டு, வருணன் கூறியவாறு காந்தாரத் தீவிலுள்ள கொலைபுரியும், கொடிய வஞ்சனை செய்யும் அரக்கர்கள் அழியுமாறு அதனைச் செலுத்தினார். சிங்கம்போல் போரிடும் அனுமன் முதல் வானரப் படையைக்கொண்டு மலைகளைக் கொண்டு கடலினை அடைத்து அணைகட்டி மகிழும் இராமபிரானே! சிறுதேரை உருட்டி அருள்வாயாக! சீதை புகழும் வைகுந்தத்தின் நாதராகிய ரகுவம்ச வீரனே, சிறு தேரை உருட்டி அருள்வாயாக!)

மாகத் தமரும் புத்தேளிர்
மறையோர் தவித்தோர் தமைக்காத்து
மகிழ்வோ டிருத்தக் கருத்திலுன்னி
மனுவின் குலத்தி லவதரித்து
யூகப் படைகொண் டணை திருத்தி
யுவரிக் கடலப் புறமெய்தி
இலங்கணி காக்கு மதிலிலங்கை
யுறையு மரக்கர் தமைமடித்து
வேகமுடன் புட்பக மெய்தி
மிதிலை மடமான் றன்னுடனே
மேவிப் பதிவந் தரசுரிமை
விருப்புற் றளிக்குங் காகுத்தன்
கோ நகைக்கு மம்புவிக்குங்
கொழுநன் தடந்தே ருருட்டுகவே
குருகை முனிபணி வைகுந்தை
குட்டந் தடந்தே ருருட்டுகவே. 9

(வானிலுள்ள தேவர்கள், மறையவர்கள், தவத்தோர் அனைவரையும் காத்து மகிழ்வோடு வாழ்விக்க எண்ணி மனுவின் குலத்தில் அவதரித்து வானர சேனையைக் கொண்டு கடலில் அணைகட்டி உவர்க் கடலினைக் கடந்து சென்று, இலங்கணி என்ற

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

அரக்கி காத்துவந்த மதில் இலங்கையில் வாழ்ந்த அரக்கர்களைக் கொன்று, புட்பகவிமானத்தில் மிதிலை மடமானாகிய சீதையுடன் பறந்துவந்து அயோத்தி அடைந்து முடிசூடிக்கொண்ட இராமனே! இலக்குமிதேவிக்கும், பூமிதேவிக்கும் கொழுநனே! விசாலமான தேரை உருட்டுகவே! நம்மாழ்வார் பணியும் வைகுந்தத்தில் உருவில் சிறிய விசாலமான தேரை உருட்டுகவே!)

◇

மகர நெடுங்குழைக்காதர் பிள்ளைத்தமிழ்

சப்பாணிப் பருவம்

அடங்காத வெழுபது வெள்ளஞ்சே னையுங்கை
அமைக்கும் படைத் தலைவரும்
அனுமன்முத லாயசுக் கிரீபனுஞ் சென்றுகடல்
அணைகட் டிலங்காபுரந்

தொடர்ந்தேறி யொருசிலைக் கடைகுழைத் தடுகணை
துரந்திரா வணனை மகுடந்
துகள்படுத் திச்சனகி சிறைமீட்ட தண்ணந்
துழாக்காள மேகங்கொடு

விடந்தாவு பஃறலைக் கட்செவி கிடந்தாட
விரிதிரைக் கங்கையாட
வேணியா டக்காளி தன்னுடன் வாதாடும்
வெள்ளிப் பொருப்பனன்பாற்

தடந்தாரு வேரோடு புறந்தாள் கொணர்ந்தமால்
சப்பாணி கொட்டியருளே!
சந்தனச் சோலைசெறி தென்திருப் பேரைமுகில் 4
சப்பாணி கொட்டியருளே!

(அளவற்ற எழுபது வெள்ளம் சேனையும், அவர்களை

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

வழிநடத்தும் படைத்தலைவரும், அனுமன் முதலாக சுக்கிரீவனும் சென்று கடலில் அணைகட்டி பாதை அமைத்ததும், இலங்கைநகர் சென்று ஒரு வில்லை வளைத்து அம்பைச் செலுத்தி, இராவணன் மகுடத்தைத் தூளாக்கி, சீதையைச் சிறைமீட்ட இராமனே! திருத்துழாய் மாலையணிந்த மேகவண்ணனே! நச்சினைப் பல தலைகளிலும் கொண்டு, கண்ணையே செவியாக உடைய பாம்பு தோளினில் ஆட, பரந்த கங்கைநதி தலையினில் ஆட, தலையினில் சடை ஆட, காளியுடன் போட்டி நடனஞ் செய்யும், வெள்ளி மலையான சிவபெருமானிடமிருந்து சத்தியபாமா பொருட்டாக பாரிசாதத்தை வேரோடு பறித்து வந்த திருமாலே, சப்பாணி கொட்டியருள்வாயாக! சந்தனச் சோலைகள் செறிந்துள்ள தென் திருப்பேரை நகரிலுள்ள முகில் வண்ணனே சப்பாணி கொட்டியருள்வாயாக!

◇

மணவைத் திருவேங்கடமுடையான் பிள்ளைத்தமிழ்

செங்கீரைப் பருவம்

கலைபயில் நாவலர் வேந்திசை மீதே
அன்பா ருந்தூயா
குரவைகொ ளாய்மனை யேந்திழை யார்பால்
நின்றாடுந் தாளா
கரையறு மாவின மேய்நதிட வேயே
கொண்டூதுந் தூயா
மலர்மகள் வார்பொரு பூந்தன நேயா
வண்டூதுந் தாமா
ஒருசிலை நேருரு வாய்ந்தெழ வேதாள்
கொண்டே கண்டோனே

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

மழுவுடை யான்வலி வார்ந்தவன் றவமே
வென்றே நின்றோனே
அலர்கதிர் நேமியி னாங்கிருள் சாய
அன்றே தந்தோனே
கடல்நடு வேவழி போந்தரி யோடே
பண்டே சென்றோனே
அரவணை நேர்துயில் கூர்ந்தருள் தேவே
என்பா லன்பாளா
சிலைமலி போரெதி ரேந்திய தோளா
பண்கூர் வெண்கோடா
தசரத னாரருள் கூர்ந்தருள் சேயே
செங்கோ செங்கீரை!
திருமண வாபுரி வேங்கட வாணா
செங்கோ செங்கீரை! 10

(கலைகளைப் பயின்ற நாவலர்கள் ஏத்துகின்ற புகழ் நிரம்பிய பாட்டுகளின்மீது அன்புகாட்டும் தூயவனே! ஆயர் மனைகளில் குரவை பாடும் பெண்களிடையே நின்று ஆடுகின்ற தாள்களை உடையவனே! மாடுகள் எண்ணற்ற மேய்ச்சலைக் கொள்ளுமாறு புல்லாங்குழல் இசைத்திடும் தூயவனே! இலக்குமியின் கச்சுடைய கொங்கையை விரும்புபவனே! வண்டுகள் தேனுண்ணும் மாலையை அணிந்தவனே! கல்லைப் பெண்ணுருவாக்கிய தாளினை உடையவனே; அகலிகை எழவும், தொழவும் கண்டவனே! பரசுராமனின் வலிவை அவனுக்கே தெரிவித்து அத்தவத்தை இழக்கச்செய்து வெற்றிகொண்டவனே! சூரியனை பார்த்தனுக்காகச் சக்கரம் விட்டு மறைத்து சயந்திரனைக் கொல்லுமாறு செய்தவனே! கடல்நடுவே அணைகட்டிக் குரங்குகளோடு இலங்கை சென்றவனே! பாம்பணையிலே துயில்கொள்ளும் திருமாலே! என்பால் அன்பு மிகுந்தவனே! போர்செய்யும் ஆற்றலுடைய வில்லினை ஏந்திய தோளையுடையவனே! இசைக்கின்ற வெண்மையான சங்கையுடையவனே! தசரத மன்னனின் அன்பினைப் பெற்ற இராமனே! நீ செங்கிரை ஆடுவாயாக! மணவை நகரில் எழுந்தருளியுள்ள வேங்கடவனே! நீ செங்கிரை ஆடுவாயாக!)

◈

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

திருமயிலைச் சிங்காரவேலர் பிள்ளைத்தமிழ்

தாண்டவராயப் புலவர்

தாலப்பருவம்

வையம் புகழுந் தசரதன் முன்மதலை
யாகித் தாடகையை
வதைத்து முனிவன் மகங்காத்து வலியார்
சனகன் வில்லொடித்துச்
செய்ய சீதை தனைமணந்து செம்தக் கினிதன்
சுதனை வென்று
சீரை புனைந்து வனஞ்சென்று சிந்து
வார மணையடைத்துத்
துய்ய வெள்ளி மலையெடுத்தான் றுவள
வீழ்த்தி மனைவிகொண்டு
துங்க வயோத்தி நகர்மகுடஞ் சூடி
ராமன் வந்திறைஞ்சும்
மெய்ய கபாலீ சுரன்றந்த வேளே
தாலோ தாலேலோ!
வேதபுரிவாழ் சிங்கார வேலா
தாலோ தாலேலோ! 3

(உலகம் போற்றும் தசரதனின் மூத்த மகனாகத் தோன்றி, தாடகையை வதைசெய்து விசுவாமித்திர முனிவரின் வேள்வியைக் காத்து, வலிமைமிக்க சனக மன்னனின் வில்லை ஒடித்து, அழகிய சீதையை மணம்புணர்ந்து, செமதக்கினி முனிவரின் மகனான பரசுராமரை வென்று, மரவுரி புனைந்து காட்டிற்குச் சென்று, கடலைத் தூர்த்து அணைகட்டி, வெண்மையான வெள்ளி மலையாகிய கயிலையை எடுத்தவனாகிய இராவணன் துவளுமாறு வீழ்த்தி, மனைவியை மீட்டு, பெருமைமிக்க அயோத்தி நகர்சென்று மகுடம் சூடிய இராமன் வந்து வணங்கும் உண்மையான கபாலீசுரன் தந்த வேள்முருகனே, தாலோ, தாலேலோ! வேதபுரியில் வாழும் சிங்கார வேலனே, தாலோ தாலேலோ!)

◈

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

அனுமன் பிள்ளைத்தமிழ்

சீர்காழி அருணாசலக் கவிராயர்

வருகைப் பருவம்

ஓரா யிரங்கரத் தொருதூண் இடந்தவுணன்
உதிரங் குடித்த மாலே
உன்னுயிரையுங் குடிகுடிக்க வந்தனுன் எங்கள்
உலகப் பிராட்டியை விடுத்
தீரா யிரங்கோடி காலமும் வாழ்கென
இரங்கா அரக்கனை மறுத்
தெந்தைநின் சரணடைய வந்தனன் எனக்குயிர்
இவன்கொடுத் தனன் முன்னை நாள்
ஆராய வேறில்லை வீடணன் இவன்பேதை
அன்னைதன துயிர் புரப்பாள்
அபயதா னம்புரிதி எனமனோ ரதமுடித்
தலைஆழி முதுகின் மீதே
வேரோடு மலைமலை களாகக் கொடுத்தணை
விதித்த சேவகன் வருகவே
மேருகிரி நிகர்காத்ர தீரமுள திரிநேத்ர
வீரஅனு மான் வருகவே. 1

("ஓராயிரம் தூண்களில் மறைந்திருந்து, ஒரு தூணிலிருந்து வெளிப்பட்டு அரக்கனாகிய இரணியனின் இரத்தத்தைக் குடித்த நரசிம்ம மூர்த்தியாகிய திருமால் இப்போது உன் உயிரையும் குடிக்க வந்தனர்; எங்கள் உலகப் பிராட்டியாகிய சீதையை நீ சிறையிலிருந்து விடுவித்து ஈராயிரம் கோடி காலமும் வாழ்வாயாக என்று இரக்கமற்ற அரக்கனாகிய இராவணனை மறுத்துப்ட பசி எந்தையாகிய நின்னை சரணடைய வந்தனன்; எனக்கு முன்னர் உயிர் கொடுத்தனன் என்று முன்னை இராவணன் அவையில் வீடணன் உதவியதை நினைவு கூர்ந்து, ஆராய்வதற்கு வேறு ஒன்றுமில்லை; இவன் மகள் திரிசடை அன்னை சீதையின் உயிரைக் காப்பாற்றுவாள். எனவே அடைக்கலம் தருதி" என்று கூறி உன் மனோரதம் முடித்தாய்! கடலின் முதுகின் மீது வேரோடு மலைகளைப் பறித்து அடுக்கி அணைகட்டிய சேவகனே

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

வருக! மேரு மலையை ஒத்த வலிமையும், தீரமும் உள்ள முக்கண் வீர அனுமனே வருக!)

◇

திருமாலிருஞ்சோலை

அழகர் கிள்ளைவிடு தூது

பலபட்டடைச் சொக்கநாதப் புலவர்

-அமலன்

அரவணையா னென்பதுமுண் டண்ணல் அரன்போல
இரவணையா னென்பதுமுண் டேனும் - பரவைத்
திருவணையா னென்றுதினஞ் செப்புவது பொய்யென்றே
உருவணையு மாதர்க் குரைத்தேன் அடி 170-173

(தூயவன் பாம்புப்படுக்கை யுடையவன் என்பதும் உண்டு. அண்ணல் சிவனாரைப் போன்று இரத்தல் தொழிலில் ஈடுபதாதவன் என்பதும் உண்டு. என்றாலும், பரவைத் திருவணையான் என்று நாளும் கூறுவது பொய்யாகும் என்று அழகிய பெண்களுக்கு உரைத்தேன்.

பரவைத் திருவணையான் என்பதற்கு கடலில் அணை கட்டியவன் என்று பொருள். கடலில் பிறந்த திருமகளை அணையாதவன் என்று தலைவி இரட்டுற மொழிந்துள்ளாள்.)

◇

ஒருதுறைக் கோவை

அமிர்தகவிராயர்

சேதுவை யாளலர் மாதிரு நால்வளர் சேதுவையாண்
மாதள வாய்ரகு நாத கிரீடி வரைவருமுற்
பாதமின் னேதண் டுலம் வாங்கச் சொற்சுயம் பாகியென்றே
யோதனங் காட்டிய நீகமு நீரை யொளித்ததென்னே. 194

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

(சேதுவை ஆளும் அஷ்டலட்சுமியின் விருத்தியுடைய சேது தீரத்தை ஆள்கின்ற பெரும் சேனாதிபதியாகிய ரகுநாத மகுடபதியுடைய மலையில் தோன்றிய வியப்புடைய மின்னல் கொடியே, நீ அரிசி வாங்கி சுயம்பாகி என்று பெயர்பெற்று சோற்றைக் காட்டிய நீ கழுநீரை ஒளித்தது ஏன்? ஓ, தனம் காட்டிய நீ கழுநீராகிய ஆம்பலை (கண்களை) மறைத்தது ஏன்? என்பது குறிப்புப்பொருள்.)

வீடண னாற்சொ லிலங்கைச் சுவேலைக்கும் வேலைக்குமேன்
மாடணை செய்யச் செயும்ரகு நாதன் வரைமடவீர்
கூட லிறைரத் தினம்பகர்ந் தாம குடஞ்செய்விளை
யாடல்கண் டோம்வலை வீசா டலுங்கண் டறிகுவமே. 225

(வீடணனால் சொல்லப்பட்டவாறு இலங்கைச் சுவேல மலைக்கும் கடலுக்கும் மேலாக அணைகட்டச் செய்த ரகுநாதன் மலையிலுள்ள பெண்களே! ஆலவாய் இறைவன் இரத்தினத்தை விற்று அழகிய திருமுடிசூடிய திருவிளையாடல் கண்டோம், வலை வீசிய திருவிளையாடலையும் கண்டறிவோம். மகுடம் போன்ற தனத்தைக் கண்டோம்; வலைவீசும் கண்களையும் காண்போம் என்பது குறிப்புப் பொருள்.)

◇

மணவை திருவேங்கடமுடையான் மேகவிடுதூது

-மேக்குயர்ந்த

பண்டை யிலங்கைப் பதிக்கேக வாரியணை
கண்டை திருவேங்கடநாதன் கண்ணி 77

(மேலான தன்மையுடைய பழைய இலங்கை நகருக்குச் செல்வதற்காக கடலில் அணை கண்ட இராமனாகிய திருவேங்கட நாதன்)

◇

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

திரு அருட்பா

திரு அருட்பிரகாச வள்ளலார்

இராமலிங்க சுவாமிகள்

இராமநாதப் பதிகம்

அறம் பழுக்கும் தருவேஎன் குருவே என்றன்
ஆருயிருக் கொருதுணையே அரசே பூவை
நிறம் பழுக்க அழகொழுகும் வடிவக் குன்றே
நெடுங்கடலுக் கணையளித்த நிலையே வெய்ய
மறம் பழுக்கும் இலங்கைஇரா வணனைப் பண்டோர்
வாளினாற் பணிகொண்ட மணியே வாய்மைத்
திறம் பழுக்கும் ஸ்ரீராம வள்ளலே நின்
திருவருளே அன்றிமற்றோர் செயலி லேனே. 1945

(அறம் பழுக்கின்ற கனிமரமே! என் குருவே! என் அருமையான உயிருக்கு ஒரு துணையே! அரசே! காயாம்பூ நிறம் ஒளிரும், அழகு ததும்பும் வடிவத்தை உடைய குன்றமே! நீண்ட கடலில் அணைகட்டிய நெடுமாலே! கொடுமையான பாதகச் செயல்செய்த இலங்கை இராவணனைப் பண்டு ஓர் அம்பினால் அழித்த மணிவண்ணனே! வாய்மைத்திறம் முதிர்ந்த ஸ்ரீராம வள்ளலே! நின் திருவருளை வேண்டுவதன்றி மற்றொரு செயல் எனக்கு இல்லை.)

◇

செயங்கொண்டார் வழக்கம்

முத்தப்பர்

பேரிலுயர் வாலிசுக் கிரீப
ரிருவரும் பகையாய்ப் பிரியராமர்
காரியத்திற் காகிவந்து கடலடைத்துச்
சிறைமீட்ட கணக்குப் போலே

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

மேருவைவில் லாய்வளைத்த செயங்கொண்டார்
உலகில் விளக்குஞ் சொல்லு
ஊரிரண் டானதினால் கூத்தாடிக்
கழகெனவு முரைத்த வாறே. 9

(பெயர்பெற்ற வாலியும், சுக்ரீவனும் ஒருவருக்கொருவர் பகைத்துப் பிரிய, இராமர் சீதையைத் தேடிவரும் வழியில் சுக்ரீவனைக் கண்டு பேசி, வாலியைக் கொன்று சுக்ரீவனுக்கு அரசளித்து, அவன் உதவியால் குரங்குப் படையைத் திரட்டி, கடலில் அணைகட்டிக் கடந்து சீதையை சிறைமீட்டார். ஆதலால், மகாமேரு கிரியை வில்லாய் வளைத்த செயங்கொண்டார் உலகில், ஊர் இரண்டானால் கூத்தாடிக்கு நல்லது என்ற உலக வழக்கு ஏற்பட்டது.)

◈

பாண்டி மண்டல சதகம்

மதுரை ஐயம்பெருமாள் ஆசிரியர் இயற்றியது

தாக்கரி தான விராவண னைக்கொன்று தாசரதி
போக்கரி தாகிய பாதகம் போக்கிப் புவியிற் கங்கை
தேக்கிய நீரன்றிப் பூசைகொள் ளாதுசெய் சேதுவெனும்
மாக்கடல் சூழு மிராமேசம் பாண்டியன் மண்டலமே. 87

(வெல்லுதற்கரியவனான இராவணனைக் கொன்ற தசரதன் மகனாகிய இராமனின் போக்குதற்கரிதாகிய பாவத்தைப் போக்கிய தலம், இப்புவியில் கங்கை நீரன்றி வேறு நீரால் பூசை கொள்ளாத இராமேச்சுரம் ஆகும். அது பாண்டிய மண்டலத்தில் செய்கரையாக அமைத்த சேது என்னும் அணை அமைந்த பெருங்கடல் சூழ்ந்த பதியாகும்.)

◈

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

அந்தகக்கவி வீரராகவ முதலியார் பாடல்

வாழும் இலங்கைக்கோ மானில்லை மானில்லை
ஏழு மராமரமோ ஈங்கில்லை - ஆழி
அலையடைத்த செங்கை அபிராமா இன்று
சிலையெடுத்த வாறெமக்குச் செப்பு.

(இலங்கை வாழும் கோமானாகிய இராவணன் இல்லை. மான் உருவெடுத்த மாரீசன் இல்லை. கடலலைகளை அணைகட்டி அடைத்த சிவந்த கைகளையுடைய அழகிய அரசனே! இன்று வில்லெடுத்தது எதற்காக என்று எனக்குத் தெரிவிப்பாயாக.)

◈

வெறிமங்கை பாகக் கவிராயர் பாடல்

நற்றாயிரங்கல்

நன்றே நடாத்துமெம் மங்கைபங் காளர்தந் நாட்டினிலே
அன்றே யிராம னணைகட்டும் போதங் கவன்படைகள்
குன்றேன் சுமந்தவெம் மான்சென்ற பாலைக் குறும்பரலில்
ஒன்றே யிடிலக் கடலூற்றும் வற்ற உறிஞ்சிடுமே.

(நன்மையையே செய்விக்கின்ற மாதொரு பாகனாருடைய நாட்டினில், முன்னர் இராமர் சேதுக்கடலில் அணை கட்டும்போது அவருடைய குரங்குப் படைகள் குன்றுகளை ஏன் சுமந்தனவோ? என் மகள் தன் தலைவனுடன் சென்ற பாலை வனத்திலுள்ள சிறு கற்களில் ஒன்றை இட்டிருந்தால் அது கடல் ஊற்றும் வற்றுமாறு உறிஞ்சி விட்டிருக்குமே!)

◈

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

தனிப்பாடற்றிரட்டு

(சரசுவதி மகால் நூலக வெளியீடு)

செய்ய குங்கும மார்பன் வண்டு
　　செறிந்திலங்கிய தொங்கலான்
செழியர் பூபதி, கொடுமை மேவிய
　　சித்ரவேள்சத பத்ரம்வாழ்
தைய்ய லன்புத ழைத்து வாழ்வருள்
　　சவரி வெற்பில் மடந்தையார
தழுவி வாழுந ராக போகச
　　மேள மானதி ருந்தவா,
மைய்யி லங்கிய கடல்சி வந்ததுள்
　　எதிர்பு குந்தன மலைகளும்
மன்னு பொன்னை துன்னு கின்றது
　　வந்தெ ழுந்ததரிக்குலம்
மெய்யி லங்கைவ ளைந்து கொண்டது
　　களந்து ரந்தது, தானைபோய்
மேலி ராவண நிலைகு லைந்தது
　　மீண்டு விட்டது மாலுமே.

(முன்னிரண்டு அடிகளின் பொருள்:

சிவந்த குங்குமத்தைப் பூசிய மார்பை உடையவன், வண்டுகள் மொய்க்கும் மாலை அணிந்தவன் செழியன் பூபதி. கொடுமை செய்யும் மலரம்பை எய்யும் மன்மதன் அம்பாகிய தாமரை மலரில் வாழும் இலக்குமி அருள் பாலிக்கும் சவரி மலையில் உள்ள இம்மடந்தையரின் தழுவல் தரும் இன்பத்தை என்னென்பது!

பின்னிரண்டு அடிகள் இருபொருள் தருபவை:

(1) மை விளங்கும் கண்கள் சிவக்க, மலை போன்ற கொங்கைகள் மார்பகத்தில் எதிர்புகுந்தன. வண்டுகள் கூட்டம் ஆரவரித்தன. மேனி பொன்னிறம் உற்றது. உடம்பை கைகள் வளைத்துக்கொண்டன. ஆடை நெகிழ, காமம் மேலிட்டது.

(2) கருமையான கடல் வழிய மலைகள் உள்ளே புகுந்தன. சீதையை மீட்க வானரக்கூட்டம் எழுந்தது. இலங்கை நகரை அது

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

வளைத்துக்கொண்டது. பகைவர் படைகளை வென்று இராவணன் நிலைகுலைய திருமால் வெற்றியோடு மீண்டார்.)

இதுவே அரசிங் கிதுவேபுல் லாணி
இதுவே வருணன்வந் தெல்லை - இதுவேதான்
மாது பொருட் டாக வள்ளல் வாரியணை கட்டுவித்த
சேதுவுக்கு முந்தினதீர்த் தம்.

(இதுவே அரசமரம்; இதுவே திருப்புல்லாணி தீர்த்தம். வருணன் வழிபட வந்த எல்லையும் இதுவே. சீதை பொருட்டாக இராமபிரான் கடலிடை கட்டுவித்த அணையாகிய சேதுவுக்கு முந்திய தீர்த்தமும் இதுவே.)

எவர்க்கும்மெய்ஞ் ஞானகுரு ஏகம்ப வாணர்
அவர்க்குமெய்ஞ் ஞானகுரு ஆரோ? - உவர்க்கரையைக்
கட்டினவன் பார்த்திருக்கக் கஞ்சமலரோன் தலையில்
குட்டினவன் தானே குரு.

(கச்சியில் வாழும் ஏகம்ப வாணர் எல்லோருக்கும் மெய்ஞ்ஞானம் அளிக்கும் குருஆவார். ஆயினும் அவருக்கு மெய்ஞ்ஞான குரு யார்? உப்புக்கடலில் அணைகட்டிய (திருமால்) பார்த்திருக்க தாமரை மலரில் வீற்றிருப்பவன் (பிரமன்) தலையில் குட்டியவன்தான் (முருகன்) குரு ஆவான்.)

◈

யாழ்ப்பாணம் சாமிநாதர் பாடல்

ஆண்டுகொண் டவனிமுதல் அன்றிலங் கையிலுறையும்
அரிய ராவண நிசிசரன்
அழகுசெறி சீதையைச் சிறைவைக்க ராமனாய்
அவதரித் திடுமா யவன்
தூண்டவநு மான்சென் றறிந்துவந் தேசொலத்
தொடுகடலை அணைகட்டியே
சுக்ரிவ னொடுசேனை சூழ்ந்திட இலங்கையில்
தொகுதியொடு போய டைந்து

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

வேண்டியம ருக்குவரு தம்பியும் பிள்ளைகளும்
வெகுமூல பலமும் அழிய
விறலிரா வணன்மடிய நொடியிலே சிறைமீட்ட
வீரராகவன் மருமகனே
நீண்டவன் பிலையெனினும் ஆண்டுகொண் டிடுமடிமை
நீயரு ளெனக்குதவு வாய்
நிகரில் தொண் டமனாற்றில் நிலவுசந் நிதிமேவும்
நிமலகுரு பரமு ருகனே.

(இராமனாய் திருமால் அவதரிக்க, அன்று உலகையெல்லாம் ஆண்டுகொண்டு இலங்கையில் உறைந்த அரக்கன் இராவணன் அழகுமிக்க சீதையைச் சிறைவைக்க, அநுமனைத் தேடிச்செல்லத் தூண்டி, அவன் இடம் கண்டுவந்து சொல்ல, கடலில் அணைகட்டி சுக்ரீவனோடு குரங்குச் சேனை சூழ்ந்திட இலங்கைக்குப் படைகளுடன் சென்றடைந்த பின்னர் இராவணனுடைய தம்பியரும், பிள்ளைகளும், விரும்பிப்போர் செய்து மடிய, இராவணன் மூல பலம் அழிய, அவனும் மடிய, நொடியில் சீதையை சிறைமீட்ட வீரராகவன் மருமகனே! உன்மீது எனக்கு நீண்ட அன்பில்லை யாயினும் என்னை ஆண்டுகொண்டு நான் அடிமை செய்யுமாறு நிகரற்ற தொண்டமனாற்றில் உள்ள சந்நிதியில் உறையும் குறையற்ற குருபரனாகிய முருகனே, எனக்கு அருள்தந்து உதவுவாயாக!)

◇

இராமப்பய்யன் அம்மானை

ஆயன் கடலை அன்றே அடைக்கையிலே
பூலோக ராமன் புகழ்ச்சடைக்க னைப்பிடிக்கத்
திருவணையைத் தானடைத்தான் தீரன்புலி ராமய்யனும்
சடைக்கன் மருகன்வன்னி தானிந்தச் சொல்கேட்டு
அயோத்தி ராமர் அடைத்த திருவணை மேல்
திறமா யடைத்துச் செலுத்துவனோ ராமனுந்தான்
பார்ப்பான் படைப்போரும் பாருலகில் நம்போரும்
இருவருட போரும் இனித்தெரியு மன்னவனே

அடி 1457-1464

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

(புகழ்மிக்க சேது காவலனான சடைக்கனைப் பிடிப்பதற்காக இராமப்பையன் கடற்கரை வந்து சேர்ந்தான். சடைக்கனுடைய மருமகன் வன்னி இச்செய்தி கேட்டு முந்நாளில் இராமன் சீதையை மீட்க இலங்கை செல்வதற்காகக் கடலை அடைத்துக் கட்டிய திருவணைமேல் திறமையாகப் படைகளைச் செலுத்தினான். இராமப் பையனன் போர்த்திறமையும், இவ்வுலகில் வன்னியினுடைய போர்த்திறமையும், இனிமேல்தான் தெரியவரும்.)

◈

இராமாயணத் திருப்புகழ்

பால பாரதி

6. உயுத்த காண்டம்

**(தனன தனந்த தனன தந்த
தனன தனந்த தனன தந்த
தனன தனந்த தனன தந்த தனதான)**

வருணனை யஞ்சலென விளம்பி
விரிகடலின்கண் வழிவி டென்று
மகிமை துலங்கி யருளு கின்ற பொழுதேயென்

வலிமுதுகின்கண் நடவு மென்று
பெரிது சுமந்த பிறகு வந்து
வருநளன் விஞ்சை வகையின் முந்தி அணைகோல

இருநில மெங்கு மினிது நின்ற
மலைகள் பிடுங்கி யனும துங்கன்
இரவிமகன் குமுதன் மயிந்தன் வலிநீலன்

இளவரசன்பன சனடங்க
உவரி குழம்ப நளன் விரும்ப
எறிவது கண்டு மனமகிழ்ந்த பெருமாளே. 212

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

(வருணனை அஞ்சற்க என்று சொல்லியபின், கடல்வழியாக இலங்கைக்குச் செல்லுவதற்கு வழி விடுகவென்று உன் பெருமை விளங்குமாறு நீ கேட்டபோது, வருணன், என் திண்ணிய முதுகின்மேல் மலைகளைப் படுத்து அதன்மேல் நடத்திர் என்று சொல்லி விரிவாகச் சுமந்த பின்னர் மகிழ்ச்சியோடு வரும் நளனுடைய சிற்பக் கலையின் வகைகளினால் முன்னே அணைகோல, அப்போது, பெரியநிலம் சுமக்கும் மலைகளை அனுமான் பிடுங்கி, கதிரோன் மைந்தனாகிய சுக்கிரீவனும், குமுதனும், மயிந்தனும், வலிமை மிக்க நீலனும், இளவரசாகிய அங்கதனும், பனசனும் ஆகிய சேனைகளும் கடலும் குழம்பவும், அணைகட்டும் நளன் விரும்பவும் எறிவது கண்டு திருவுள்ளம் மகிழ்ந்தருளினை பெருமாளே!)

துரந்தே கவிக்குல மனைத்தும்
நடந்தே மரத்தினொடு கற்கள்
சுமந்தே யடிக்கடி குவிக்க வழிநூறும்

துலங்கோசனைக் கிடைகிடக்க
மருங்கான வுட்கிடைய கற்சி
சுருங்காது பத்துவன மெத்த வருணேசன்

இருந்தே படுத்திடு புறத்தின்
முழங்காழியைத் தொனி யடக்கி
இழிந்தே நளப்ரபு வொருத்தன் அணைகோல

இடஞ்சேர வெற்பினை யடுக்கி
நெடுஞ்சேதுவைக் கடிது கட்டி
இலங்கா புரிக்கு வழிவிட்ட பெருமாளே 213

(குரங்குக் கூட்டமெல்லாம் நான் முன்னே நீ முன்னே என்று ஒருவரையொருவர் துரத்தி நடந்து சென்று மரங்களோடு மலைகளைச் சுமந்து வந்து அடிக்கடி குவிக்க வழியாக விளங்கி நூறு யோசனை நீளங் கிடக்கவும், அதன் இருபுறமான உள்ளிடத்தில் அமைந்த அகலம் நீளத்திற்கேற்பச் சுருங்காமல் பத்து யோசனை அமையவும், நீர் திரும்பியெழவும், வருணன் இருந்து படுத்து முழங்குங் கடலோசையை அடக்கி நிற்க, நளனென்னும்

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

பெயரையுடைய தலைவன் பள்ளத்தில் இறங்கி அணையாகக் கோலி வளைக்க, ஏற்கும் அகலம் உண்டாகுமாறு மலைகளை அடுக்கி நீண்ட சேதுவை விரைவிற் கட்டி இலங்கை நகருக்கு வழிகாணவிட்ட பெருமாளே!)

◈

பாண்டித்துரைத்தேவர் நான்மணிமாலை

உடுப்பிட்டி சிவசம்புப்புலவர்

களிப்பது தினமுந் தருமதா னங்கள்
கருத்துறச் செய்துகண் ணித்தேன்
றுளிப்பது குறையாத் தளவத்தோட் பாண்டித்
துரைச்சுரன் சோர்வுதோ யாம
லளிப்பது சிசுக்கள் விருத்தர்க ளார்த்த
ரஃதைக ளாவரி வையரைக்
குளிப்பது விசயக் கொடுமா விராமன்
குரைகடற் குயிற்றிய குரம்பே. 21

(நாள்தோறும் தரும தானங்கள் கருத்தாகச் செய்யும் பாண்டித்துறைத் தேவரின் தோளில் உள்ள மல்லிகை மலர்மகள் தேன்துளிர்ப்பது குறைவதே இல்லை. அவர் சோர்வடையாமல் வாரி வழங்குவது குழந்தைகள், முதியவர்கள் பெண்கள் அனைவருக்குமே ஆகும். அவர் நாள்தோறும் குளிப்பது, மாபெரும் வெற்றிபெற்ற இராமன் முன்னாளில் ஒலிக்கின்ற கடலில் கட்டிய சேது அணையிலாகும்.)

◈

காளிதாசரின் இரகுவமிசம்

(தமிழாக்கம் : க.ரா.ஜமதக்னி)

சருக்கம் பன்னிரண்டு

உவர்க்கடல் அறிதுயில் கொள்ளப் பாதலத்
திவர்ந்தது பாம்பர சணையென் றிருந்தது

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

தவவுயர் அணைதனை யமைத்தான் கவியின
நவக்கடல் உதவிகொண் டிராமச் செம்மலே. 70

(உப்புக்கடல் மீது திருமால் துயில்கொள்ளப் பாதலத்திருந்து எழுந்த ஆதிசேடன் போன்று காணப்பெற்ற மிக உயர்ந்த சேதுவை வானரக் கடல் உதவிகொண்டு இராமன் கட்டுவித்தான்.)

வழியதா யவ்வணை கடந்து பொன்னிறக்
கழியுயர் மதிலினுக் கிரண்டாம் பொன்மதில்
எழிலுற அமைந்தெனக் குரக்குப் பெரும்படை
குழிசெய இலங்கையை யிட்டான் முற்றுகை. 71

(அவ்வணையைக் கடந்து இலங்கையைச் சூழ்ந்திருக்கும் பொன்மதிலைச் சுற்றிலும் இரண்டாவது பொன்மதில் அமைந்தது போல வானரப்படை சூழ்ந்துகொள்ளத் தரை படைப்பளுவால் குழியாகுமாறு இலங்கையை முற்றுகையிட்டான்.)

◇

தயாசதகம்

ஸ்ரீமத் வேதாந்த தேசிகன்

ஸக்ருத் அவேக்ஷணாத் தத்க்ஷணாத்
ப்ரக்ருஷ்ட பஹுபாதக ப்ரஸமஹேதுநா ஸேதுநா

(ஒருமுறை பார்ப்பதினாலேயே எத்தனை கொடிய பாவங்களையும் அந்த க்ஷணமே ஒழிக்கவல்ல புண்ய சேதுவை ராமபிரான் தயையாலே கட்டியுள்ளார்.)

◇

வால்மீகி ராமாயணம்

ஸேதுபந்த இதி க்யாத: த்ரைலோக்யேந ச பூஜிதம் 6.123.21
ஏதத் பவித்ரம் பரமம் மஹாபாதக நாஸநம்

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

(சேது பந்தம் என்று மூவுலகிலும் புகழ்பெற்றுப் பூஜிக்கப்படும் இது உயர்ந்தது, பவித்ரமானது, மகா பாவங்களையும் அறவே ஒழிக்கவல்லது.)

◇

இராமநாடகக் கீர்த்தனைகள்

அருணாசலக் கவிராயர்

ஆறாவது - உயுத்த காண்டம்

ஸ்ரீராமர் வருணன்பேரில் அம்புதொடுத்தல்

விருத்தம் - 13

அறியும் விபீ ஷணன்சொல்ல அனுமான் வெற்றி
அறிந்தவனுக் குகந்து சிரஞ்சீவியாக
மறுவில்வர மதுகொடுத்தான் கடலைத்தாண்ட
வருணமந் திரஞ்செபித்து விரிதருப்பைமேலே
பெறுதினம் ஓர் ஏழும்போய் ராமச்சந்திரன்
பின்னும் வருணனைக் காணான் தம்பிக்கோதி
எறிகடல் மேற்சினந்து கோதண்டம் நாணி
ஏற்றினான் சரமாரி தூற்றினானே.

தரு-12

சங்கராபரணராகம் ஆதிதாளம்

பல்லவி

தொடுத்தானே சாதாரை - தரைக்குராமன்
கொடுத்தானே கடல் நீரை (தொடு)

அநுபல்லவி

தொடுத்தானே ஏழுநாள் படுத்தானே அதைக்கூடத்
தடுத்தானே வருணனென்று எடுத்தானே கோதண்டம் (தொடு)

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

சரணங்கள்

1. கனல் கனலா எங்கும் பாய்ந்ததே - பிரம்ம
கமண்டல சுலங்களும் தீய்ந்ததே - மலையிற்
சுனையும் தரையாவற்றிக் காய்ந்ததே - புகையால்
சூரியன் பரியும் நடை ஓய்ந்ததே

புனலிலே செங்கமல மலர்என விரிகொழுஞ்சுடர் தழைய
வனதிமிங்கில திமிங்கில மகரமீன்கள் குரைய
அனல் எழும் பொறிச் சிதற வெகுவெகு கணைகளோடு கணை இழைய
இனி எங்கே இடமென்று வடவாக்கினியும் போய் மறுடகடலில் நுழைய
(தொடு)

2. சிட்ட முனிவர் தவம் சிறக்கவே - நீரில்
செழிக்கும் ராட்சதரும் போய் இறக்கவே - அவர்
பட்ட உதிரம் எங்கும் பறக்கவே - கடல்
பாய்ந்து செவசெவன்று நிறக்கவே

அட்டகெசங்களும் தேவரும்பயப் பட்டுக்கண்விழி பிதுங்க
மட்டிலா அனல் வெட்டையால் சுருண் டெட்டுநரகமும் அதுங்க
இட்டமாம் கவிப்படை எல்லாம் திகிலிட்டுச் செடி தொறும் ஒதுங்கமுன்
சுட்டதூதன் வந்தானோ எனலங்கைப் பட்டணமும் திடுக்கிட்டுப் பதுங்க
(தொடு)

3. தெரிந்து பாதாளமும் கண்டதே - ஆதி
சேஷன் முடியும் சாய்ந்து கொண்டதே - வானிற்
பிரிந்து வைக்கிரமும் விண்டதே - அந்த
பிரம லோகமும் புகை உண்டதே

பொருந்தவிடும் ஒருதொடைக்கு நூறாயிரம் சரங்களாகப் பெருக
விரிந்த கடலினில் இருந்த மலைகளும் எரிந்து கரியாக் கருக
பரிந்து சதிமடவார்கள் கண்ணீர் சொரிந்து சாமிமுன் உருக
வருந்த வருந்த வராதவருணனும் பொரிந்து பொரிந்து கடல் கரிந்து வருக
(தொடு)

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

ஸ்ரீராமரை வருணன் சரணடைதல்

விருத்தம் - 14

பெருமான் பிறகக்கினிவாளி பிடிக்கவருணன் துடித்துவந்து
பருமாமணி ஆயிரமாலை பாதகாணிக்கை யாகவைத்து
நிருபாசரணம் பிழைபொறுப்பாய் நீயேசரணம் எனதாவி
தருவாய் சரணம் என்முன்னே தாழ்ந்தான் அடிக்கீழ் வீழ்ந்தானே.

தரு-13

அசாவேரி ராகம் ஆதிதாளம்

பல்லவி

சரணம் சரணம் ரகுராமா - நீ என்னைத்
தற்காத் தருள் பரந்தாமா (சர)

அநுபல்லவி

வரிகடல் வேந்தன்உன் திருவடி சேர்ந்தனென்
மேல்என்ன உபசாரம் ஆயிரம் நமஸ்காரம் (சர)

சரணங்கள்

1. மட்டிமீன் ஒன்றோடன்று மல்லாடி அமர் பூணும்
வழக்குத் தீர்க்கப் போனேன் இதுக்கோ உன்மனம் கோணும்
எட்டுரண்டும் தெரியா எனக்கித்தனையா காணும்
என்னபிழை செய்தாலும் நீயே பொறுக்க வேணும்
(சர)

2. ஏதும் பலமில்லாத நீ ஒரு மானுடன்
என்று நினைத்தால்நான் வீழ்வேன் நரகத்துடன்
தீது நல்லதென்று அறியாதநான் அசடன்
சிறியோர் செய்தபிழையைப் பெரியோர் பொறுத்தல் கடன்
(சர)

3. திக்குவேறில்லை உன்தன் பாதத்திலே புகுந்தேன்
சேதுபந்தனம் செய்ய என்முது கிடந்தந்தேன்
அக்கினிகணை விடவேண்டாம் நான்மிக நொந்தேன்
அலைகடல் துயின்றோனே நான் உன்னை நம்பி வந்தேன்
(சர)

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

வானர வீரர்கள் சேதுபந்தனம் பண்ணுதல்

விருத்தம் - 15

இரக்கமாய் வருணனிந்த வாறுபோற்ற
இராகவனும் கருணைசெய்து வருகாந்தார
அரக்கர்மேல் அக்கணையை விடுத்தான் அப்பால்
அபயதானம் கொடுத்தே வழிகாட் டென்றான்
பரத்தினால் அவனும் என்மேல் அணைசெய்துன்தன்
படைஎல்லாம் நடத்தென்றான் கூடிக்கூடிக்
குரக்கு வீரர்கள் மலைமேல் மலையா வீசிக்
கொட்டினார் கடலில் அணை கட்டினாரே.

தரு-14

மோகனராகம் அடதாளசாப்பு

பல்லவி

சேதுபந்தனம் செய்தாரே - தேவர்
சீதமலர் மழை பெய்தாரே (சேது)

அநுபல்லவி

நாதனும் கவிக்கெல்லாம் நாதனும் இலங்கைக்கு
நாதனும் அல்லாமல் ஓதும் வானரர் எல்லாம் (சேது)

சரணங்கள்

1. முந்துநான் முகன்மகன் இந்திரன் மகன்மகன்
சுந்தர ததிமுகன் கந்தமா தானன்அனு
மந்தன் குமுதன் மயிந்தன் துமிந்தன்வ
சந்தன் முதலோர்கூடி

அந்தமலை உனக்கு இந்தமலை எனக்கென்று
எந்தமலையும் ஓங்கித் தந்தம் கைகளால் வாங்கித்
தொந்தராகவன் முன்னே தந்த மொழிப்படிக்கு
வந்தத் துறையிற்கி டந்த வருணன் மேலே (சேது)

2. கடுத்து முகங்கள் சிடு சிடுத்து ராட்சதர் தம்மை
கெடுத்து வேரோடேகீண் டெடுத்தெறிகுவது போலே
அடுத்த மலைகளைக்கீண் டெடுத்தொருவர்க் கொருவர்
சடுத்தம் பேசிப்பேசி

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

மடுத்து வாலினிற்சில தொடுத்த தோளினிற்சில
படுத்துச் சிலமலையை எடுத்துத் தலையில் வைத்து
விடுத்து நளன்கையிலே கொடுத்துப் பெருங்கடலின்
நடுத்திடல் ஆம்படித் தடுத்து வகைவகையாச் (சேது)

3. மேட்டின் மலைகளோடு நாட்டின் மலைபிடுங்கி
ஓட்டி எறிய அலை ஆட்டிய துளிதெய்வ
நாட்டின் மங்கைய ரிடை பூட்டிய துகில்குளிப்
பாட்டி வெட்கம் ஊட்டி

தாட்டிக முடன்வகு போட்டிபோட்டிகளாகப்
பாட்டில் அடுக்கிச்சந்து மூட்டி மூன்று நாளையில்
நாட்டி யோசனைபத்து கூட்டி அகலம்செய்து
நீட்டி நூறுயோசனை காட்டி இலங்கைமட்டும் (சேது)

◈

ஸ்ரீ தியாகராஜஸ்வாமி கீர்த்தனைகள்

(மொழிபெயர்ப்பு டி.எஸ்.பார்த்தசாரதி)

ராகம் : கரஹரப்ரியா தாளம் : ஆதி

பல்லவி

சேதுலார ச்ருங்காரமு
சேஸி சூதுநு ஸ்ரீராம (சேது)

அநுபல்லவி

ஸேதுபந்தந ஸுரபதிஸர
ஸுருஹபவாதுலு பொகடநா (சேது)

சரணம்

1. மெறுகு பங்காரந்தெலு பெட்டி
மேடியெள ஸரிக வல்வலு கட்டி
ஸுரதரு ஸுமமுல ஸிகநிண்ட ஜுட்டி
ஸுந்த ரமகு மோமுந முத்து பெட்டி (சேது)

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

2. மொலநு குந்தநபு கஸ்ஜெலு கூர்ச்சி
முத்துக நுதுடநு திலகமு தீர்ச்சி
அலகலபை ராவிரேகயு ஜார்ச்சி
அந்தமைந நிந்நுரமுந ஜோர்ச்சி (சேது)

3. ஆணிமுத்யால கொண்டெ வேஸி
ஹௌஸுக பரிமள கந்தமு பூஸி
வாணி ஸுரடிசே விஸரக வாஸி
வாஸியநுசு த்யாக ராஜநுத யநிரோஸி (சேது)

(சேதுவைக் கட்டியவனே! ஸ்ரீராம! இந்திரன், பிரமன் முதலியோர் புகழுமாறு நான் என் கைகளார உன்னை அலங்காரம் செய்து தரிசிப்பேன். உன் பாதங்களில் பொற்சங்கிலி அணிவித்து, அரையில் உயர்ந்த சரிகை வஸ்திரம், கட்டி, தேவலோக மலர்களைச் சிகையில் சூட்டி, அழகிய முகத்தில் ஒரு முத்தமிட்டு, இடுப்பில் பொற்சலங்கைகள் கட்டி, நெற்றியில் திவ்யமான திலகமிட்டு, முன்னுச்சியில் பதக்கம் சூட்டி அழகிய உன்னை மார்புறத் தழுவி, ஆணி முத்துக்களால் கொண்டை அமைத்து, நறுமணம் வீசும் வாசனைப் பொருள்களைப் பூசி, சரஸ்வதி விசிறிகொண்டு வீசவும், நன்று, நன்று என்று மகிழ்ந்து மற்றதனைத்தையும் நிறுத்தி உன்னை அலங்கரித்து தரிசிப்பேன்.)

◇

ராகம் : ரவிசந்திரிக தாளம் : ஆதி

பல்லவி

நிரவதி ஸுகத நிர்மலரூப
நிர்ஜித முநிசாப (நிர)

அனுபல்லவி

சரதி பந்தந நதஸங்க்ரந்தந
சங்கராதிகீயமான ஸாது, மாநஸ ஸுஸதந (நிர)

சரணம்

மாமவ மரகதமணிநிப தேஹ
ஸ்ரீமணி லோல சரிதஜநபால

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

பீமபராக்ரம பீமகரார்ச்சித
தாமஸ ராஜஸ மாநவதூர
த்யாக ராஜ விநுதசரண (நிர)

(எல்லையற்ற ஆனந்தமளிப்பவன் நீ. நிர்மல வடிவத்தவன். கௌதம ரிஷியின் சாபத்தைப் போக்கியருளியவன். கடலுக்கு அணையமைத்தவன். இந்திரனால் வணங்கப்படுபவன். சங்கரன் முதலியோரால் துதிக்கப்பெறுபவன். சாதுக்கள் மனத்தில் உறைபவன்.

என்னைக் காப்பாயாக. நீ மரகதமணியை யொத்த தேகமுடையவன். இலக்ஷ்மியை உகப்பவன், சரணடைந்தவரைக் காப்பவன். (எதிரிகளுக்கு) அச்சம் விளைவிக்கத்தக்க வலிமை யுடையவன். பரமசிவனால் அருச்சிக்கப்பெறுபவன். தமோகுணம், ரஜோகுணம் நிறைந்தவருக்கு எட்டாதவன். தியாகராஜன் வணங்கும் பாதன்.)

◇

ராகம் : தேவகாந்தாரி தாளம் : ஆதி

பல்லவி

க்ஷீரஸாக ரசயந நந்நு
சிந்தல பெட்டவலெ நாராம (க்ஷீர)

அநுபல்லவி

வாரணராஜுநு ப்ரோவநு வேகமே
வச்சிநதி விந்நாநுரா ராம (க்ஷீர)

சரணம்

நாரீமணிகி ஜீரலிச்சிநதி
நாடே நே விந்நாநுரா
தீருடௌ ராமதாஸீநி பந்தமு
தீர்ச்சிநதி விந்நாநுரா

நீரஜாக்ஷிநக நீரதி தாடிந
நீகீர்த்திநி விந்நாநுரா

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

தாரகநாம த்யாக ராஜநுத
தயதோ நேலுகோரா ராமா (க்ஷீர)

(பாற்கடலில் பள்ளிகொண்டவனே! இராம! என்னை நீ சோகத்தில் ஆழ்த்தவேண்டுமா? கஜேந்திரனைக் காக்க நீ விரைந்து வந்த வரலாற்றைக் கேட்டிருக்கிறேன். திரௌபதிக்கு நீ ஆடையளித்து அவள் மானம் காத்ததை நான் அன்றே கேள்வியுற்றிருக்கிறேன். தீரராகிய ராமதாசரின் தளையை நீ நீக்கியதைக் கேட்டிருக்கிறேன். தாமரையொத்த கண்களையுடைய சீதைக்காக நீ கடல் கடந்த புகழையும் கேட்டிருக்கிறேன். தாரக நாமத்தாய்! தயையுடன் என்னை ஏற்றுக்கொள்.)

◇

ராகம் : வராளி தாளம் : ஆதி

பல்லவி

தரநு நீஸரி தைவமு காநரா ரகுவர (தரநு)

சரணம்

1. ஸ்ரீதாஜவந்தந ஸிந்துபந்தந
ஸ்ரீதசரத நந்தந ச்ரிதஹ்ருத்ஸ்பந்தந (தரநு)

2. பாபவிமோசந பங்கஜலோசந
ப்ராபகுடகு யோசந பக்தபாலந (தரநு)

3. ஸாலவிதாரண ஸருவலோகாவந
பாலயசந்த்ராநந பதித பாவந (தரநு)

4. இந்திரா பாக்யமா இநகுலோத்தமா
சந்தமு கறுபிம்புமா ஸத்தாமாத்ரமா (தரநு)

5. பாதா ரவிந்தமு பாவந கந்தமு
நீதய தநப்ருந்தமு நித்யா நந்தமு (தரநு)

6. வாகீஸந்நுத த்யாக ராஜாச்சித
நாக சயந பாலிதநத ஸுசரித (தரநு)

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

(இவ்வுலகில் உனக்கிணையான தெய்வங்களை எங்கும் காணேன். இரகுவரனே! நீ சௌபாக்கியம் அளிப்பவன். பிரமனால் வணங்கப் பெறுபவன். கடலுக்கு சேது அமைத்தவன். ஸ்ரீதயரதனின் தவப்புதல்வன், தஞ்சமடைந்தோரின் இதயத்தை இரதமாகக் கொண்டவன், பாவங்களை அகற்றுபவன், தாமரைக் கண்ணன், எனக்குப் புகலாக நீ அமைவதற்கு யோசனையா? பக்தரைக் காப்பவனே! நீ மராமரங்களைத் துளைத்தவன். சகல புவனங்களையும் பாலிப்பவன். மதிவதனன், எளியோரைப் புனிதமாக்குபவன். திருமகளின் பேரதிர்ஷ்டம். சூரிய குல திலகன். உன் திருவழகைக் காட்டுவாய். உண்மையே உருவானவனே! உனது பாதாரவிந்தமே எனது பாவனைகளின் மூலம். உன் கருணையே எனக்குச் செல்வமும் நித்தியானந்தமும் ஆகும். நான்முகனால் துதிபெறுபவனே! பாம்பணைப் பள்ளியானே! அடிபணிவோரைக் காப்பவனே! நற்சரிதனே!)

◇

ராகம் : ஸஹாந　　　　　　　　　　தாளம் : ஆதி

பல்லவி

வந்தநமு ரகுநந்தந ஸேது
பந்தந பக்தசந்தந ராம　　　　(வந்)

அநுபல்லவி

ஸ்ரீதமா நாதோ வாதமாநே
பேதமா இதி மோதமா ராம　　　　(வந்)

சரணம்

1. ஸ்ரீரமா ஹ்ருச்சாரமா பரோவ
பாரமா ராயபா ரமா ராம　　　　(வந்)

2. விண்டிநி நம்மு கொண்டிநி சர
ணண்டிநி ரம்மண்டிநி ராம　　　　(வந்)

3. ஓடநு பக்தி வீடநு ஒருல
வேடநு நீவாடநு ராம　　　　(வந்)

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

4. கம்மநி விடெ மிமமநி வரமு
கொம்மநி பலுக ரம்மநி ராம
(வந்)

5. நயாயமா நீகாதா யமா இந்த
ஹேயமா முநிகேயமா ராம
(வந்)

6. சூடுமீ காபாடுமீ மம்மு
போடி மிகா கூடுமீ ராம
(வந்)

7. க்ஷேமமு திவ்யதாமமு நித்ய
நேமமு ராமநாமமு ராம
(வந்)

8. வேகரா கருணாஸாகர ஸ்ரீ
த்யாக ராஜுநி ஹ்ருதயாகர ராம
(வந்)

(இரகு நந்தன! சேதுவை அமைத்தவனே! பக்தர்களுக்குச் சந்தனம் போல் குளிர்ச்சி தருபவனே! உனக்கு நமஸ்காரம்.

செல்வங்களை யளிப்பவனே! என்னுடன் வாதமா? நீ வேறு நான் வேறா? இது உனக்கு மகிழ்ச்சி தருகிறதா?

திருமகளின் உள்ளத்தில் உறைபவனே! என்னைக் காப்பது உனக்குப் பாரமா? உனக்கு நான் தூது அனுப்ப வேண்டுமா?

உன்னைக் குறித்துக் கேள்வியுற்று நான் உன்னையே சரணமடைந்தேன். உன் வரவையே கோரினேன்.

நான் பின்வாங்கமாட்டேன். உன் பக்தியைக் கைவிடேன். பிற தெய்வங்களை வேண்டேன். நான் என்றும் உன்னைச் சேர்ந்தவன்.

இது நியாயமா? இதனால் உனக்கு இலாபமா? அல்லது நான் வெறுக்கத் தக்கவனா? முனிவரால் துதிபாடப் பெறுவனே!

என்னைக் கடாட்சிப்பாய். காப்பாற்றுவாய், எங்களை ஒப்புடன் கூடுவாய்.

உன் இருப்பிடமே க்ஷேமத்தையளிக்கும் இடம், உன்திருநாமமே தினமும் ஜபம் செய்யத் தகுந்தது.

விரைந்து வாராய் கருணைக் கடலே! ஸ்ரீ தியாகராஜனின் இதயத்தை இருப்பிடமாய்க் கொண்டவனே!)

◈

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

பஞ்சபாண்டவர் வனவாசம்

புகழேந்திப் புலவர்

(தருமர் துரோபதைக்கு மான் பிடிக்கலாகாதென்று ஸ்ரீராமர் கதையைச் சொன்னது)

சீதைசிறை போனபின்பு திருமாலவர் பார்த்து
நல்லதென்று சொல்லியல்லோ நடந்தா ரிருவருமாய்
சவரியைக் கண்டுமல்லோ சந்தோஷம் பண்ணாரே
அனுமாரைக் கண்டார்கள் அவர்க ளுறவாகி
அனுமா ருறவாலே அங்கதசுக் ரீபர்களும்
மெத்த உறவானார் வேந்த ரிருவர்களும்
வாலியைக் கொன்றபின்பு வானர வீரருக்குள்
சுக்ரீப னுக்குப்பட்டஞ் சூட்டிக் கடலதனில்
வாராவதி கட்டியல்லோ வந்தார்கள் தென்னிலங்கை
ராவணன் கும்பகர்ணன் ராட்சத இந்த்ரசித்தன்
மூல பலச்சேனை முடிந்தது ராமர்கையால்
சேனைகளைக் கொன்றலவோ சீதை சிறைமீட்டு
புட்ப ரதமேறி புண்ணியர்கள் வந்தாரே
அயோத்தியா புரியதனில் அரிராமர் வந்துவிட்டார்
சீதாச மேதராக சிம்மா தனமேறி
தம்பிமார் மூவர்களுந் தானுங் கொலுவிருந்தார்.

◇

இராமர் கதை

திருவானந்தம் நாட்டுப்புறப் பாடல்

சரணமென் றடியைப் போற்றும் தனதனு மானைக் கண்டார்
வரமுடன் சீதை சூடா மணிஅடை யாளங் கொண்டார்
திரைகட லடைக்க வேணும் சீக்கிரஞ் செல்ல வேணும்
தரணியில் சமுத்திர ராசன் தனைகொடு வாநீ யென்றார். 138

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

கொடுவா சமுத்திர ராசனை நீசென்று கூட்டிவந் தனுமானே
குரைகட லடைத்திட விரைவது பாரென்று கோவிந்தனா ருரைத்து
நெடுவால் கவிகளுந் தலைவரும் மகிழ்சுக்கிரீ பனுமாக வந்து
நெடுங்கட லோரத்தில் பாளையஞ் செய்துமே நீலவர்ணரு மிருந்தார்
இருந்தாரிளையவர் திருந்திய வானரம் எழுபது வெள்ளஞ் சேனை
எல்லாரு மிருக்கையில் நல்லனுமான் கடல்ஏறியே தேறித் தாண்டிப்
பெருந்தாரணி புயன்சமுத்திர ராசனைக் கண்டு பெருமான் பேருரைத்து
பெருமா னருளிப் பாடென வருணனுந் தான்பேசாம லங்கிருந்தான்
பேசாமலே யவன்சிலை விளையாட்டும் பெருமை யைப்பார்த் திருக்கப்
பெருமான் சமூகத்தி லனுமா னோடிவந்து பிணக்கம தாயுரைத்தான்
ஆசை வருணன்கடல் சுவறும்படி அக்கினி யஸ்தி ரத்தை
அரிதிரு மால்தொட விரிகட லானது அறவே சுவறினதே
அறவே சுவறிட சமுத்திர ராச னடியற்ற மரம்போலவே
அரசர் குலத்தில் தசரதர் மகன்முன் னடியிணைப் பணிந்தானே
திறமாய்ப் பருதியைப் பழிக்குமாலை யொன்றுசீர் பதந்தன்னில் வைத்துச்
சிறியோர் செய்பிழை பெரியோர் பொறுப்பீர் திருமாலே சரணம்
சரணமென் றடிதொழ அரிரெகுராமன் தான்குறு நகைபுரிந்து
சமுத்திர ராயா நமக்கொரு காரியம் தகும்படி செய்வாயோநீ
மரண அரக்கரி லங்காபுரிப் பட்டணத்தில் வானரம் போய்வரவே
வழிபகர் வாயென வெளியம்பால் மாயவன் ஏங்குவனென் மேலே
என்மேலே படைநடத்தனை மதுவன்றி இணைய ரிதனை விடுவோம்
இடங்கொண்டு பகர்வேன்றடங்கண்டுபோவேனெனத்திருமால்மகிழ்ந்து
உன்மேலே யுறுசினந் தவிர்ந்தோ மெனவொரு கணைமுனை யதிலே
உருண்டிடுஞ் சலமது பெருங்கட லாய்வர உகந்தருள் புரிந்தாரே
புரிசெய வருணன் திருவணை செய்யும் புகலது தடங்காட்ட
புத்தியோ டனுமன் விசுவ கர்மனையே போயவ னழைத்துவர
அரியடி தொழுதே விசுவ கர்மனுமே அணையில் பணிநடத்த
அனுமனும் பாய்ந்தே கனமலை பிடுங்கி அவன்கையிலே கொடுக்கக்
கொடுத்திட எழுபது வானர வெள்ளம் குன்றுகள் பிடுங்கிவர
அடுத்த சராசர பக்ஷிகள் பறவைக ளடங்கலும் மணல் சொரிய
மணல்சொரி யணிக்குலந் தனைக்கண்டு திருமால் மலர்க்கரம் முதுகில் வைத்து
மகிழ்ந்தரி திருவணை செய்த விஸ்தாரத்தை வழுத்துதற் கெளிதாமோ
அணித்தலத் தனுமான் கொடுவரும் பருமலை யதெல்லாம் விஸ்வகர்மன்
அவனொடு கரத்தா லேந்தி வைத்தானதை யனுமனும் மனதில்வைத்தான்
மனதுவைத் தனுமன்கால்கொண்டும்கைகொண்டும்வால்கொண்டும்சிரசுகொண்டும்

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

மகமேரு வொத்ததை விட்டனுமான் பலமலைகளைப் பிடுங்கிவந்தான்
தனதொன்று பத்து நூறாயிர மாயிரம் தடமலை கொடுவரினும்
சரசவிசுவ கர்மன் கரத்தொன்றிலேந்தியுந் தாங்கியு மணையில்வைத்தான்
வைப்பது கண்டனு மான்மலர் முகமது வாடிட அரியறிந்து
வருத்தி விஸ்வகர்ம னிடத்திலுந் திருமால் வளர்திரு வுளம்பற்றுவார்
செப்பமுட னனுமான் கொடுவருகிரி சிறப்புடன் வாங்கும் பிள்ளாய்
திறமுயர் சேவகனைக் குறைவு செய்யாது செயமாய விஸ்வகர்மா
செயராமன் கற்பனையை நயமென் றொருகையைச் சென்றொரு கரத்தாலே
சிகரியனுமன் கொண்டு மிகவர விசுவனும் சிறப்பு வாசாரமதாய்
நயமுட னணையது முடிந்தது வானரம் நடந்தது திருவணைமேல்
நவமணி ராகவன் பவளமா பருவதம் நாடிவந் தேறினாரே. 139

◈

ஸ்ரீமத் வால்மீகி ராமாயணம்

தமிழில் : ஸ்ரீ உ.வே.C.R. ஸ்ரீநிவாஸய்யங்கார்

யுத்த காண்டம்

ஸர்க்கம் 22 : ஸேது பந்தனம்

வானர சேனைகள் சமுத்திரத்தைத் தாண்டுவதற்கு ராமன் சமுத்திர ராஜனைச் சரணமடைந்து, அவன் வராதபொழுது, "லட்சுமணா! வில்லை எடுத்துவா!" என்று பயமுறுத்தி, அப்போதும் வராமலிருக்கக்கண்டு அவனைப் பாணங்களால் கலக்கி, அப்படியும் வராதபொழுது, அவனுக்கு விசேஷ பயத்தை உண்டாக்குவதற்காகக் கடும் கோபத்துடன், "இப்பொழுதே உன்னைப் பாதாளம் வரையில் வற்றச் செய்கிறேன், மகாசமுத்திரம் என்ற பெயரே இல்லாமல் செய்கிறேன். என் பாணங்களால் நீர்வற்றி பூமியில் சுவறி இருக்கும் நீரும் இல்லாமல், உன் சக்தி முழுவதையும் எரித்து, காளமேகங்கள் ஒன்று சேர்ந்து கல்பகோடி காலம்வர்ஷித்தாலும் ஒரு துளி நீர்கூட இல்லாமல் நுட்பமான புழுதி கிளம்பும்படி செய்கிறேன் பார்! 'சகல நீரையும் வற்றச் செய்தால் பாதாளம் தெரியும். அங்கே நீங்கள் போக

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

மாட்டீர்கள். ஆகாய மார்க்கமாக அல்லவா போகவேண்டும்? இப்பொழுதே அப்படிச் செய்யக்கூடாதா? ஏன் வீணாகக் கோபிக்கிறீர்கள்' என்றால், என் கோதண்டத்திலிருந்து பிரயோகிக்கும் பாணங்கள் வானர சேனைகளை இலங்கையில் கொண்டுபோய்ச் சேர்க்கும். என் பலத்தையும், பராக்கிரமத்தையும் நன்றாய் ஆலோசிக்க உனக்குத் தெரியாது. தானவர்களுக்கு வாசஸ்தலமாக இருக்கும் உனக்கு, சகவாசதோஷத்தால் அவர்களுக்குள்ள அஞ்ஞானம் பழகியிருக்கிறது. நான் பிரயோகிக்கும் பிரம்மாஸ்திரத்தால் நீ படும் கஷ்டமும் உனக்குத் தெரிய வில்லையே" என்று பிரம்ம தண்டத்தைப்போல் வீண்போகாத ஒரு பாணத்தில் பிரம்மாஸ்திரத்தை அபிமந்திரித்து உத்தமமான கோதண்டத்தைப் பூட்டி பிரயோகித்தார்.

அப்போது ஆகாயமும் பூமியும் வெடித்தது போலிருந்தது. மகாபர்வதங்கள் கிடுகிடுவென நடுங்கின. உலகமெங்கும் இருள் மூடிற்று. திக்குகள் தெரியவில்லை. ஏரிகளும், ஆறுகளும் கலங்கின. சூரிய சந்திரர்கள் நட்சத்திரங்களுடன் வக்ரமாய்ச் சேர்ந்து கொண்டார்கள். ஆகாயம் இருள் சூழ்ந்து சூரிய கிரணங்களால் கொஞ்சம் வெளிச்சத்துடன், கணக்கில்லாத எரிகொள்ளிகளால் பளீர் பளீரென்று வானத்தில் நிற்காதம் என்ற பேரிடிகள் மகாசப்தத்துடன் விழுந்தன. ஆவகம், ப்ரவகம் முதலிய வாயுக்கள் தங்களுடைய ஸ்தானங்களை விட்டு சஞ்சரித்தன. பெருங்காற்று மரங்களை முறித்து, மேகங்களை சிதற அடித்து மலைகளின் நுனிகளைப் பெயர்த்து, சிகரங்களைத் தூளாக்கிற்று. மகாமேகங்கள் ஆகாயத்தை மறைத்து ஒன்றோடொன்று தாக்கிப் பெரும் சப்தத்துடன் மின்னல்களும், பயங்கரமான இடிகளும் உண்டாயின. கண்ணிற்குத் தென்படும் ஜந்துக்களும் அப்படியில்லாத பிசாசு முதலியவைகளும் பயந்து நடுங்கி இடியைப்போல் கதறி, பிறகு மூர்ச்சையடைந்து பூமியில் விழுந்து அசைவற்றுக் கிடந்தன. ராமன் பாணங்களைப் பிரயோகிக்க ஆரம்பித்தவுடன் சமுத்திரத்தின் அலைகள் வேகமாக அடிக்க ஆரம்பித்தன. பிரம்மாஸ்திரத்தைப் பிரயோகித்தவுடன் நாகர்கள், ராட்சதர்கள் முதலிய கணங்களோடும் ஜல ஜந்துக்க ளோடும் கூடின சமுத்திரத்தின் அலைகள் மலைகளைப்போல் அதிவேகமாய்ப் பொங்கிக் கொந்தளிப்பதைப் பார்க்கப் பயங்கரமாக இருந்தது. ஒருநாளும் கரைபுரளாத சமுத்திரம் ஒரு யோஜனை பூமியை மறைத்துவிட்டது. அப்படிப் பயந்து ஓடுகிற சமுத்திரத்தை

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

ராமன் துரத்தி இம்சிக்கவில்லை. சத்துருக்களை வேரறுக்கும் பிரபாவமுள்ள ராகவன் கர்வம் கொண்ட அந்த சமுத்திரராஜனிடம் தயவு செய்தார்.

பிறகு மேருபர்வதத்திலிருந்து சூரியன் உதித்ததுபோல், சமுத்திரத்தின் நடுவிலிருந்து அதன் அபிமானி தேவதை வெளிப்பட்டார். கொழுந்துவிட்டெரியும் முகங்களையுடைய மகாசர்ப்பங்கள் அவரைச் சூழ்ந்து வந்தன. அழகான வைடூரிய பர்வதத்தைப் போல் தேக காந்தியுடன், ஜாம்பூநதம், ஜாதரூபமென்ற பலவகைத் தங்கங்களால் செய்யப்பட்ட அணிகலன்களாலும், தன்னிடத்தில் உண்டான உத்தம ரத்தினங்களாலும் அலங்கரிக்கப் பட்டு அனேக தாதுக்களால் விளங்கும் இமய கிரியைப்போல் பிரகாசித்தார். ....சமுத்திரராஜன் ராமனைநோக்கி அதிவேகமாக வந்து தன் ஸ்நேகத்தைத் தெரிவிக்கும் பொருட்டு அவரை முதலில் கூப்பிட்டுத் தலைமேல் கைகூப்பி, கோதண்டபாணியாய் நிற்கும் ராகவனைப் பார்த்து, "பூமி, ஜலம், வாயு, தேஜஸ், ஆகாயமென்ற பஞ்சபூதங்கள் தொன்றுதொட்டு அவைகளுக்கேற்பட்ட குணங்களை மீறுகிறதில்லை. ஸர்வ சக்தனான தங்களுக்கு என்னால் ஆகவேண்டியதென்ன? சமுத்திரத்தில் ஆழமில்லாமல் செய்ய வேண்டுமா? அல்லது ஜலத்தை ஓட்டமில்லாமல் கெட்டியாகச் செய்ய வேண்டுமா? அல்லது அணைகட்டுவதற்கு அனுகூலமாய் அதில்போடும் பதார்த்தங்கள் அமிழ்ந்து போகாமல் இருக்கச் செய்ய வேண்டுமா? ஆழமாக இருப்பதும், தாண்டமுடியாமலிருப்பதும் என் சுபாவம்; இதற்கு விரோதமாய் என்னால் இருக்க முடியாது. ஆகையால் என்னை ஆழமில்லாமல் செய்ய முடியாது. ஐசுவரியத்தை விரும்பியாவது, கிடைத்த வஸ்துவை விட்டுப்பிரிய இஷ்டமில்லாமலாவது, தண்டனைக்கு பயந்தாவது ஜலத்தை அசைவில்லாமல் செய்யமுடியாது. அதில் வசிக்கும் ஜந்துக்களுக்கு அதிக பீடை யுண்டாகுமல்லவா? ராஜசிரேஷ்டனான தாங்கள் சகல தர்மங்களையும் நிலைநிறுத்துகின்றவர்களல்லவா? என்னால் கூடிய வரையில் தங்களுக்கு சகாயம் செய்கிறேன். வானர சைனியம் சமுத்திரத்தைத் தாண்டுகிற வரையில் ஜலஜந்துக்கள் அவர்களை உபத்திரவிக்காது; குரங்குகள் ஜலத்தில் விழாது. தாங்கள் கட்டுகிற அணை உறுதியாயும், தரையைப் போலும் இருக்கும்படி செய்கிறேன். அதைச் சேர்ந்த எந்த வஸ்துவும் ஜலத்தால் அபகரிக்கப் படாமல் இருக்கும்" என்று விக்ஞாபனம் செய்தான்.

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

அதற்கு ராமன், "ஆனால் நான் உன்மேல் பிரயோகித்த பிரம்மாஸ்திரம் வீண்போகாது. அதை எங்கே அனுப்பட்டும்?" என்றார். சமுத்திரராஜன் ராமன் சொன்னதைக் கேட்டு, பிரம்மாஸ்திரத்தையும் பார்த்து, "ஸ்வாமி! இதற்கு வடக்கே சமீபத்தில் ஓர் அழகான ஸ்தலமிருக்கிறது. அது லோகத்தில் த்ரும குல்யமென்று பிரசித்தி பெற்றது. பயங்கரமான ரூபத்தையும், நடத்தையையும் உடைய சில திருடர்கள் அங்கே வசிக்கிறார்கள். அந்த பாபிகள் என் ஜலத்தைத் தொட்டுக் குடிப்பதை நான் பொறுக்க முடியவில்லை. தங்களுடைய பாணத்தை அவர்கள்மேல் பிரயோகித்துத் திருப்தி செய்யுங்கள்" என்றான்.

ராமனும் அவன் குறிப்பிட்ட ஸ்தலத்தில் அந்த தீட்சண்யமான அஸ்திரத்தைப் பிரயோகித்தார். நெருப்பு இடியைப்போல் பிரகாசிக்கும் ராமபாணம் விழுந்த இடம் மருகாந்தாரம் என்று பிரசித்தி பெற்றிருக்கிறது. அந்த பாணத்தால் துளைக்கப்பட்ட பூமி அலறிற்று. அந்தப் பிளவின் வழியாய் ரஸாதலத்திலிருந்து ஜலம் பிரவகித்து ஓடிற்று. அதற்கு வர்ணகூபம் என்று பெயர்... ராமன் அந்த ஜலத்தை வற்றச் செய்து, தோஷத்தை நீக்கி, அதற்கு மருகாந்தார மென்ற கீர்த்தியையும் உத்தமமான வரங்களையும் கொடுத்தார்.... ராமனுடைய வரமகிமையால் மிகவும் அழகான பிரதேசமாயிற்று மருகாந்தாரம்.

பிறகு சமுத்திரராஜன் சகல சாஸ்திரங்களையும் கரைகண்ட ரகுவீரனை நோக்கி, "தங்களுடைய சைன்யத்தில் நளன் என்ற ஒரு வானர வீரன் இருக்கிறான். அவன் விசுவகர்மாவின் புத்திரன். 'என்னைப் போன்ற ஒரு புத்திரன் உனக்குப் பிறப்பான்' என்று அவனுடைய தாய்க்கு விசுவகர்மா வரம் கொடுத்தான். ஆகையால் நளன் தன் பிதாவிற்கு சமானன். அவன் என்மேல் அணை போடட்டும். விசுவகர்மாவைப்போல் அவனைக் கௌரவித்து அவனால் போடப்பட்ட எந்தப் பதார்த்தத்தையும் அமிழ்த்தாமல் காப்பாற்றுகிறேன்" என்று சொல்லி ராமனிடத்தில் உத்தரவு பெற்றுக் கொண்டு அவரைப் பிரதக்ஷண நமஸ்காரங்கள் செய்து தன் இருப்பிடம் சென்றான்.

பிறகு நளன் கைகூப்பி ராமனைப் பார்த்து, "எல்லையற்ற சமுத்திரத்தில் நான் அணை கட்டுகிறேன். சமுத்திரராஜன் சொன்னது நிஜமே. என் பிதாவின் சாமர்த்தியம் எனக்கும் உண்டு.... ஆனாலும்

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

அதை நானே சொல்லிக்கொண்டால் இவ்விதமான பெரிய காரியத்தை ஆரம்பிப்பதில் நம்பிக்கை பிறக்காது. ஆகையால் வேறொருவர் சொல்லுகிற வரையில் காத்துக் கொண்டிருந்தேன். சமுத்திரத்தில் அணைகட்ட எனக்குத் திறமையுண்டு. வானர சிரேஷ்டர்கள் அதற்கு வேண்டிய வஸ்துக்களை இப்பொழுதே கொண்டுவரட்டும் என்றான். ராமனும் அப்படியே உத்தரவு செய்ய, வானரங்கள் ஆயிரக்கணக்காய் காடுகளிலும், மலைகளிலும் சென்று மலையைப் போன்ற விருட்சங்களைப் பெயர்த்து சமுத்திரக் கரைக்கு இழுத்துக்கொண்டு வந்தார்கள். மகா பலவான்களாக வானர வீரர்கள் மகாகஜங்களைப் பேர்ன்ற பாறைகளையும் மலைகளையும் பெயர்த்து யந்திரங்களால் சமுத்திரக் கரையில் சேர்ப்பித்தார்கள். சுபாவமாய்ப் பெரிய அலைகளுள்ள சமுத்திர ஜலம் பாறைகளையும், விருட்சங்களையும் போட்டவுடன் ஆகாயம் வரை எழும்பிற்று. வானரர்கள் சமுத்திரத்தைக் கலக்கினார்கள். சிலர் நூறு யோசனை அளவு ஏற்றக்குறைவில்லாமல் அணைகட்டுவதற்காகக் கயிறுகளைப் பிடித்து ஒழுங்கு பார்த்தார்கள். இப்படி நளன் மகா சமுத்திரத்தின் நடுவில் பெரிய அணையைக் கட்டுகையில் வானரர்கள் ஒவ்வொருவரும் அநேக பர்வதங்களை எடுத்துக் கொண்டுவந்து, பிறரால் செய்யமுடியாத காரியங்களைச் செய்து அவனுக்கு சகாயம் செய்தார்கள்... மகா பலவான்களும் பயங்கரமான தேகங்களுடையவர்களுமான வானரர்கள் முதல் நாளில் அதிக சந்தோஷத்துடன் பதினான்கு யோசனை தூரமும், இரண்டாம் நாளில் இருபது யோஜனை தூரமும், மூன்றாவது நாளில் இருபத்தொரு யோசனை தூரமும், நான்காவது நாளில் இருபத்திரண்டு யோசனை தூரமும், ஐந்தாவது நாளில் சுவேல மலைவரை உள்ள இருபத்து மூன்று யோசனை தூரமும் அணை கட்டினார்கள். விஸ்வகர்மாவின் புத்திரனும், பலவானும், வானர சிரேஷ்டனுமான நளன், தன் பிதாவைப்போல் வெகு சாமர்த்தியமாய் அந்த அணையைக் கட்டினான். அது ஆகாயத்தில் ஸ்வாதி வீதியைப் போல் மிகவும் அழகாய் விளங்கிற்று. அப்போது தேவ, கந்தர்வ, ஸித்த, மகரிஷி கணங்கள் அந்த ஆச்சரியத்தைப் பார்க்க ஆகாய வீதியில் கூட்டம் கூட்டமாய் வந்து நின்றார்கள். அந்த அணை நூறு யோசனை தூரமும், பத்து யோசனை அகலமுமாய், பிறரால் அமைக்க முடியாததாக நளனுடைய புத்தி விசேஷத்தால் சமுத்திரத்தின் நடுவில் விளங்குவதைக் கண்டு மகிழ்ந்தார்கள்.

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

அழகுள்ள ஸ்திரீயின் வகிட்டைப்போல் சமுத்திரத்தின் நடுவில் போடப்பட்ட அந்த அணை விசாலமாகவும், உறுதியாகவும், அழகாகவும், யாதொரு தோஷமும் இல்லாமலும், மேடு பள்ளம் இல்லாமலும், பிளப்புகள், துவாரங்கள் இல்லாமலும் வெகு சாதுரியமாய் நளனால் அமைக்கப்பட்டது... வானர சைன்யம் அந்த பயங்கரமான சமுத்திரத்தைக் கொஞ்சம்கூட லட்சியம் செய்யாமல் தாண்டிச்சென்று, நளனால் கட்டப்பட்ட அணையின் வழியாய் அபாயமில்லாமல் அக்கரை சேர்ந்து, சுக்ரீவனுடைய உத்தரவால் ஜலம், பழங்கள், கிழங்குகள் நிறைந்த ஓரிடத்தில் தங்கிற்று.

◇

அத்யாத்ம ராமாயணம்

வடமொழியிலிருந்து தமிழில் : ஹரிணி

யுத்த காண்டம்

மூன்றாவது அத்தியாயம்

ஸ்ரீராமர் சமுத்திரத்தைப் பார்த்து, கோபத்தினால் கண்கள் சிவக்கக் கூறினார்: “லக்ஷ்மணா! இந்தக் கடலரசனின் கர்வத்தைப் பார்! நான் இங்கு வந்திருப்பதை அறிந்தும்கூட எனக்கு வணக்கம் தெரிவிக்காமல் அலட்சியமாக இருப்பதைப் பார்! இந்த வானரர்களும், மனிதர்களும் என்னை என்ன செய்துவிட முடியும்? என்று நினைக்கின்ற இந்த துஷ்டனை தண்டிக்கப் போகிறேன் பார்! இதோ இக்கடலை வற்றச் செய்யப்போகிறேன். வானர வீரர்கள் அதன்மீது நடந்து செல்லட்டும். சகல பிராணிகளும் ராமபாணத்தின் சக்தியைப் பார்க்கட்டும்,” என்று கூறின ராமர் தூணீரத்திலிருந்து காலாக்னியைப் போன்ற ஒரு பாணத்தை எடுத்து, வில்லிலே பூட்டி வேகமாக இழுக்கும்போது பூமியெங்கும் நடுங்கியது. ஆகாயத்திலும், எல்லாத் திசைகளிலும் இருள் சூழ்ந்தது. கடல் கொந்தளித்தது. கடலில் வாழும் ஜலஜந்துக்கள் துள்ளிக்குதித்துத் துடித்தன.

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

இவ்வாறு கோபத்தினால் கண்கள் ஜ்வலிக்க வில்லைக் கையில் பிடித்து கம்பீரமாக நிற்கின்ற ஸ்ரீராமபிரபுவைக் காண ஓடிவந்தான் கடலரசன். திவ்ய உருவத்துடன், பலவிதமான ரத்னங்களைக் காணிக்கையாக எடுத்துக்கொண்டு வேகமாக வந்த சமுத்திரராஜன், அவற்றை ஸ்ரீராம சரணங்களிலே சமர்ப்பித்துப் பணிவுடன் வணங்கி பின்வருமாறு கூறலானான்.

"ஹே! ஜகந்நாதா! மூவுலகங்களையும் இரட்சிக்கின்ற பிரபுவே! ராமா! என்னைக் காப்பாற்றுங்கள்! காப்பாற்றுங்கள்! இப்பிரபஞ்சத்தைத் தாங்கள் சிருஷ்டி செய்யும்போது என்னை ஜட வஸ்துவாகப் படைத்துவிட்டீர்கள். தெய்வ சிருஷ்டியான ஜடஸ் பாவத்தை எப்படி மாற்றமுடியும்? ஐந்து ஸ்தூல பூதங்களையும் ஸ்பாவமாகவே ஜடமாகப் படைத்துவிட்டிருகளல்லவா? அப்படி இருக்க, அவை தங்கள் ஆக்ஞையை எப்படி மீறக்கூடும்?

"ஹே! ராமா! பஞ்சபூதங்கள் தாமஸ அகங்காரத்திலிருந்து தோன்றியுள்ளன. ஆகவே அவை தத்தமது தன்மையைப் பின்பற்றுவதாலே ஜடத்வமானது (தமோகுணம்) அதன் பிறவி குணமாகிவிட்டது. பகவன்! நிர்குணராக நிராகாரமாக இருக்கின்ற தாங்கள், எப்போது மாயையை லீலாமாத்ரமாக அங்கீகாரம் செய்கின்றீர்களோ அப்போது தாங்கள் "வைராஜ்" என்ற நாம தேயத்தைத் தரிக்கிறீர்கள். அந்த குணமயமான "விராட்" ஸ்வரூபத்தின் சாத்வீக அம்சத்திலிருந்து தேவதைகளும், ரஜோ குணத்திலிருந்து பிரஜாபதிகளும், தாமஸ குணத்திலிருந்து ருத்ர கணங்களும் உற்பத்தியாகின்றார்கள்.

"தேவா! மாயா சக்தியினால் மறைக்கப்பட்டு லீலையாக மனித உருவத்தைத் தரித்துள்ள, நிர்குணராகிய தங்களை ஜடபுத்தியுள்ள முட்டாளாகிய நான் எப்படித் தெரிந்துகொள்ள முடியும்? பசுக்களை சரியான வழியில் அழைத்துச் செல்லத் தடியினால் அடிப்பதைப் போல, என்னைப் போன்ற மூடர்களை சன்மார்க்கத்தில் அழைத்துச் செல்வதற்கு தண்டனையே சிறந்த உபாயமாகும். பக்தவத்ஸலா! தங்களையே சரணமாக அடைந்துவிட்ட என்னை, சர்வ சரண்யராகிய தாங்கள் ரட்சித்து அருள் செய்யுங்கள். இதோ இப்பொழுதே லங்கா

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

நகரத்திற்குச் செல்லுவதற்கு வேண்டிய மார்க்கத்தை உண்டு பண்ணுகின்றேன்" என்று கூறி கைகூப்பி நிற்கின்ற கடலரசனைப் பார்த்து ராமர் கூறினார்.

"ஓ! சமுத்திரராஜனே! என்னுடைய பாணம் ஒருகாலத்திலும் வீணாகப் போவதில்லை. இதற்கு ஓர் இலக்கைக் காட்டுவாயாக! இந்த அமோகமான பாணத்தை எந்த தேசத்திலே பிரயோகம் செய்யலாமென்பதை சீக்கிரமாகக் கூறு" என்றார். அதைக் கேட்ட கடலரசன் பணிவுடன் கூறினான்: "பிரபோ! வடக்குத் திசையிலே தருமகுல்யம் என்ற தேசத்திலே பாபாத்மாக்கள் அதிகமாக இருக்கிறார்கள். இரவும் பகலும் அவர்களால் எனக்கு ஏற்படுகின்ற தொல்லைகள் கணக்கிலடங்காது. இந்த பாணத்தை அவ்விடத்திலே பிரயோகிக்கலாம்" என்றான். உடனே ராமர் அவ்விதமே செய்து அங்கேயுள்ள துஷ்டர்களை வதம் செய்தார்.

பிறகு மறுபடியும் சமுத்திரராஜன் ராமரைப் பார்த்து வினயமாகக் கூறினான்: "பிரபோ! விஸ்வகர்மாவின் புத்திரனாகிய நளன் என்ற வானர சிரேஷ்டன் இங்கு வந்திருக்கிறானல்லவா? அவன் சிறந்த புத்திசாலி. கடல் நீரிலே பாலம் அமைப்பதிலே மிகத் திறமையுள்ளவன். வரத்தினாலே இந்த சக்தியை அடைந்துள்ள அவனுடைய ஆச்சர்யமான இந்தச் செயலால் தங்களுடைய பரிசுத்த கீர்த்தியானது சகல ஜனங்களாலும் அறியப்படட்டும்" எனக்கூறி ராமரை வணங்கி உடனே மறைந்து போனான்.

அதன்பிறகு ஸ்ரீராமர், லட்சுமண, சுக்ரீவர்களிடம் கூறி நளனை அழைத்துவரச் செய்து, வெகு சீக்கிரமாக சமுத்திரத்திலே பாலத்தை அமைக்கும்படி உத்தரவிட்டார்.

அப்போது மகாபர்வதம் போன்ற உருவமுள்ள நளன், வானர யூதபதிகளுடன் சேர்ந்து, மிக்க மகிழ்ச்சியுடன் பாலத்தை அமைக்கத் தொடங்கினான். பெரிய மலைகளையும் விருட்சங்களையும் கொண்டு வந்து நூறு யோஜனை விஸ்தீரணமுள்ள பெரிய சமுத்திரத்தில் மிதக்கச் செய்து, மிக்க பலமான பெரிய பாலத்தைக் கட்டினான்.

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

4-வது அத்தியாயம்

இவ்வாறு பாலம் அமைக்கும் வேலையை ஆரம்பிக்கும்போது ஸ்ரீராமர், அங்கே ராமேஸ்வர மகாதேவரை பிரதிஷ்டை செய்து முறைப்படி பூஜைசெய்தார். பிறகு உலக க்ஷேமத்தின் பொருட்டு பின்வருமாறு கூறினார்.

"இந்த ராமேஸ்வர மகாதேவரையும், சேதுபந்த ஸ்தலத்தையும் எவன் பக்தி சிரத்தையுடன் தரிசனம் செய்து வணங்குகின்றானோ அவனுக்கு எனது அனுக்ரஹபலத்தால் பிரம்மஹத்தி தோஷம் முதலான சகல பாபங்களும் விலகி க்ஷேமத்தை அடைவான். சேதுவிலே ஸ்நானம் செய்து, ராமேஸ்வர சிவனை தரிசனம் செய்து, பிறகு சங்கல்ப பூர்வமாக காசி க்ஷேத்திரம் சென்று, கங்கா தீர்த்தத்தைக் கொண்டு வந்து ராமேஸ்வரருக்கு அபிஷேகம் செய்து, அந்த கலசத்தை சமுத்திரத்தில் சமர்ப்பித்துவிடவேண்டும். இவ்விதம் செய்பவன் பிரம்மத்தையே அடைவான்" என்றார்.

பிறகு நளனுடைய வரத்தின் சக்தியினாலும் வானரவீரர்களின் தீவிர முயற்சியினாலும் அமைக்கப்பட்ட அந்தப் பெரிய பாலத்தின் வழியாக ராம லக்ஷ்மணர்களும், சுக்ரீவன் முதலானவர்களும், சகல வானரப்படைகளும் கடலைக் கடந்து மறுகரைக்குப் போய்ச் சேர்ந்தார்கள்.

◈

கோஸ்வாமி துளஸீதாஸரின்

ஸ்ரீராமசரிதமானஸம்

(ப்ரிஜ் மொழியின் தமிழாக்கம் : ஸ்ரீ ஸ்வாமிநாத ஆத்ரேயர்)

சுந்தரகாண்டம்

17. ராமன் கடலிடம் லங்கைபோக வழிவேண்டுதல்

"லட்சுமண! வில்லையும் அம்பையும் எடு. நான் அக்நி அம்பு எய்து கடலை வற்றவைத்து விடுகிறேன். முட்டாளிடம் பணிவு

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

வஞ்சகனிடம் பிரேமை - கஞ்சத்தனம் உள்ளவனிடம் உயர்ந்த நீதி - மமதை முற்றியவனிடம் ஞானப் பேச்சு - பேராசை பிடித்தவனிடம் வைராக்ய உபதேசம் - கோபமுள்ளவனிடம் அமைதி உபதேசம் - காமுகனிடம் பகவான் பற்றிய பேச்சு - இதெல்லாம் பாலைவனத்தில் விதைவிதைப்பதுபோல வீணாகும்".

இவ்விதம் கூறிவிட்டு ராமன் வில்லை நாணேற்றினார். ராமனின் இந்தப் போக்கு லட்சுமணனுக்கு மிகவும் உகப்பாக இருந்தது. பிரபு பயங்கரமான அம்பு (அக்நி அம்பு) தொடுக்கத்தான் செய்தார். அதற்குள் கடலின் ஆழத்தில் நெருப்பு கொழுந்து கிளம்பியது. முதலைகள், பாம்புகள், மீன்கள் கூட்டம் பதறிப் போயின. கடல்வாழ் பிராணிகள் வெப்பத்தாக்கமுற்றன என்றறிந்து கடல் அரசன் அந்தண வடிவில் தங்கக் கலசத்தில் ரத்தினங்களை நிரப்பிக்கொண்டு தற்பெருமையை விட்டுவிட்டு வந்தார். 58

கடலரசன் பயந்து பிரபுவின் சரணங்களைப் பற்றிக் கொண்டு கூறினான். "என் சிறுமைகளை மன்னியுங்கள். ஐயா! ஆகாயம், பூமி, நெருப்பு, நீர், மண் இவை ஜடம்தானே. தங்கள் தூண்டுதலின் பேரில் மாயை இவற்றை, படைப்புகளைத் தாங்குவதற்காக உண்டு பண்ணியிருக்கிறது. நூல்கள் எல்லாம் இப்படித் தான் கூறுகின்றன. உரிமையாளரான தாங்கள் என்ன ஆணையிட்டிருக்கிறீர்களோ, அது அப்படி இருந்துதான் நன்மைபெறும். தாங்கள் எனக்கு தண்டனை அளிப்பது நியாயம்தான். ஆனால் எங்களுக்கு எல்லையும் நீங்கள்தான் வகுத்திருக்கிறீர்கள். டோலக் (வாத்யம்), காட்டு மிராண்டிகள், பணியாளர்கள், பசுக்கள், பெண்டிர் இவர்கள் எல்லோரும் அடிபடத்தான் வேண்டும். பிரபுவின் பிரதாபத்தினால் நான் வற்றிவிடுகிறேன். படை அக்கரை சேரட்டும். அதில் எனக்குப் பெருமை இல்லை. (எனக்கு இயல்பை மீறிய குறைதான் ஏற்படும்) பிரபுவின் ஆணையை மீற முடியாதது என்று வேதங்கள் கூறுகின்றன. தங்களுக்கு எது இஷ்டமோ, அதையே உடன் செய்வேன்".

கடலரசனின் மிகுந்த பணிவான சொல்கேட்டு தயாளனான ராமன் புன்னகை புரிந்து கூறினார். "அப்பா! எவ்விதம் வாநரப்படை அக்கரை சேருமோ, அதற்கு உபாயம் கூறுவாயாக". 59

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

18. கடல்மீது சேது அமைக்க வேண்டுகோள்

கடலரசன் கூறினான்: ஐயா! நீலன், நளன் என்ற வாநர சகோதரர்கள் இளமையில் ரிஷிகளிடம் ஆசி பெற்றவர்கள். அவர்கள் கைபட்டால் பெரிய பெரிய மலைகள்கூட தங்களுடைய பிரதாபத்தினால் கடலில் மிதக்கும். நான் பிரபுவின் ஆளுமையை மனதில் கொண்டு, என் சக்திக்கு ஏற்ப உதவுவேன். ஐயா! இவ்விதம் கடலில் அணை கட்டுங்கள். அதனால் மூவுலகங்களிலும் உங்கள் சிறப்பான புகழ் பாடல் பெறும். இந்த அம்புகொண்டு வடகரையில் வசிக்கின்ற, பாபங்கள் நிறைந்த, கொடியவர்களை அழியுங்கள்".

தயாளனான போர்வீரன் ராமன் கடலின் மனவேதனையைக் கேட்டு உடனே அதைத் தீர்த்தார். ஸ்ரீராமனின் சிறந்த வலிமையையும் ஆண்மையையும் கண்டு, கடலரசன் மகிழ்ந்து அமைதி பெற்றான். அவன் அந்த துஷ்டர்களின் நடவடிக்கைகள் அனைத்தையும் பிரபுவிற்குச் சொன்னான். பிறகு அவர் திருவடிகளில் வணங்கிவிட்டு, கடலரசன் மறைந்தான். 60

லங்கா காண்டம்

1. கடலில் சேது அமைத்தல்

கடலரசன் சொற்கோட்டு, ராமன் மந்திரிகளை அழைத்து இவ்விதம் கூறினார்: "ஏன் இன்னும் தாமதம்? அணை கட்டுங்கள், அதன்மீது படை கடக்கட்டும்". ஜாம்பவான் கைகூப்பிக் கூறினார். சூரிய குலத்தின் வெற்றிக்கொடியே! ராம! கேளுங்கள். தங்கள் நாமமே ஒரு சேது ஆயிற்றே. அதில் ஏறி மனிதன் சம்சாரக் கடலைக் கடக்கிறானே! பின் இந்தச் சிறிய கடலைக் கடப்பதற்கு என்ன நேரம் ஆகப்போகிறது?"

இதைக்கேட்டு மேலும் அனுமான் கூறினார்: "பிரபுவின் பிரதாபம் கடல் தீக்கு ஈடானது. இது முன்னமேயே கடல்நீரை வற்ற வைத்துவிட்டது. ஆனாலும் தங்கள் பகைவரின் மனைவிகளின் கண்ணீர் பெருக்கினால் இது மீண்டு நிரம்பிவிட்டது. அதனால்தான்

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

உப்புக்கரிக்கிறது". அனுமானின் இந்த மிகைச் சொல்லைக்கேட்டு வாநரர்கள் ராமனைப் பார்த்து மகிழ்ச்சி கொண்டனர்.

நளன், நீலன் என்ற இரு சகோதரர்களையும் அழைத்து ஜாம்பவான் அவர்களுக்கு எல்லாக் கதைகளையும் கூறினார். "மனதில் ராமனுடைய பெருமையை தியானம் செய்துகொண்டு அணை தயார் செய்யுங்கள். (அவருடைய அருளினால்) சிரமம் ஒன்றும் இராது". "பிறகு வாநகரக் கூட்டத்தை அழைத்தார். கூறினார்: "நீங்கள் எல்லோரும் சற்று எனது விண்ணப்பத்தைக் கேளுங்கள். உமது இதயங்களில் ராமனுடைய திருவடிகளைத் தாங்கிக்கொண்டு எல்லாக் கரடிகளும், வாநரர்களும் ஒரு விளையாட்டு புரியுங்கள். கொம்மாளம் போடுகின்ற வாநரர்களின் கூட்டமே! ஓடுங்கள். மரங்களையும், மலைகளையும் பிடுங்கிக்கொண்டு வாருங்கள். "இதுகேட்டு வாநரர்களும் கரடிகளும் ஹூ ஹூ என்று கூச்சலிட்டுக் கொண்டு ராமனுடைய பிரதாப வரிசைக்கு ஜயகோஷம் செய்து கிளம்பினர். மிகவும் நெடிதுயர்ந்த மலைகளையும், மரங்களையும் - விளையாட்டாகப் பிடுங்கிக்கொண்டு வந்து நளன், நீலனிடம் கொடுக்கின்றனர். அவர்கள் அவற்றை நன்கு பொருத்தி அணை கட்டுகின்றனர்.

வாநரர்கள் பெரிய பெரிய மலைகளைக் கொண்டுவந்து போடுகின்றனர். நளனும், நீலனும் அவற்றைப் பந்துமாதிரி பிடிக்கின்றனர். சேதுவின் மிகவும் அழகிய அமைப்பைக் கண்டு, கிருபையின் உறைவிடம் ராமன் சிரித்துக்கொண்டே சொன்னார்: "இந்த அழகிய உத்தம பூமிப்பகுதியின் அளவற்ற பெருமையைச் சொல்ல இயலாது. இங்கு நான் சிவபெருமானை ஸ்தாபித்து வழிபட விரும்புகிறேன். என் உள்ளத்தில் இப்படி ஒரு பெரிய சங்கற்பம்".

ராமன் சொல் கேட்டு, வாநரர் தலைவர் சுக்கிரீவன் பல தூதர்களை அனுப்பினார். அவர்கள் சிறந்த முனிவர்களை அழைத்து வந்தனர். அங்கு சிவலிங்கத்தை முறைப்படி நிறுவி, முறைப்படி அவரை பூஜித்தார். 2

திறமைசாலிகளான நீலனும், நளனும் சேதுவைக் கட்டினர். ராமனுடைய கிருபையின் புகழ் எங்கும் ஒளிபெற்றுப் பரவியது.

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

எந்தக் கற்கள் தாமே நீரில் மூழ்கிவிடுமோ, பிறரையும் மூழ்கச் செய்யுமோ, அவையே கப்பல்களுக்கு நிகராகிவிட்டன. இது கடலின் புகழ் கூறுவதாகாது. கற்களின் சிறப்புமன்று. வாநரர்களின் செய்நேர்த்தியுமன்று. ரகுவீரனின் பிரதாபத்தினால் கற்களும் கடலில் மிதந்தன. இத்தகைய ஸ்ரீராமனை விட்டு, எவர் பிற எஜமானிடம் சென்று வழிபடுகிறார்களோ, அவர்கள் ஐயமின்றி சிறுமதி படைத்தவர்களே. 3

அணையை மிகவும் திடமாகக் கட்டி, அதனை மேற்புறம் வழவழப்பாகவும் செய்தனர். அதைப் பார்த்தவுடன் கருணை உறைவிடமான ராமனுடைய மனத்திற்கு மிகவும் பிடித்துவிட்டது. படை (அதன்மீது) சென்றது. அதை வர்ணிக்க இயலாது. வாநர வீரர்கள் கூட்டம் கர்ஜிக்கிறது. கருணையுள்ள ரகுநாதன் அணைமீது ஏறி கடலின் விஸ்தாரத்தைப் பார்த்தார். கருணையின் கருவூலமான பிரபுவை தரிசிக்க நீர்வாழ் பிராணிகளின் கூட்டம் வெளிப்பட்டது. திமிங்கிலங்கள், முதலைகள், பலவிதமான மீன்கள், பாம்புகள், அவை ஒவ்வொன்றும் நூறு யோஜனை நீளமான உடல்கள் படைத்தவை. அவைகளைக்கூட சாப்பிடக்கூடிய ஜந்துக்களும் அங்கே இருந்தன. ஒன்றுக்கொன்று பயந்து வாழ்ந்தன. அவை யெல்லாம் (தம்மை மறந்து) பிரபுவைத் தரிசித்தன. விரட்டினாலும் நகருவதில்லை. எல்லாமே மகிழ்ந்தன. சுகப்பட்டன. அவை பரவி இருந்ததால் தண்ணீரே கண்ணில் படவில்லை. அவை பகவானுடைய ஸ்வரூபம் கண்டு பிரேமையில் மூழ்கி இருந்தன. பிரபு ஆணை பெற்றுப் படை நகர்ந்தது. வாநரப்படையின் விரிவை எவர் எடுத்துக் கூறமுடியும்? அணைக்கட்டின் மீது கூட்டம் அதிகமாகிவிட்டது. சில வாநரர்கள் ஆகாயத்தில் பறந்தனர். மற்றவர் மிதந்த நீர்ப்பிராணிகள்மீது ஏறி அக்கரை சேர்ந்தனர். 4

கிருபையுள்ள ராம லட்சுமண சகோதரர்களும் இப்படி வேடிக்கை பார்த்துக்கொண்டு, சிரித்துக்கொண்டே சென்றனர். ரகுவீரன் படைகளுடன் அக்கரை சேர்ந்தார். 5

◈

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

ஸ்ரீ விஷ்ணு புராணம்

(தமிழில் : M.K. வெங்கடராமன்)

நான்காவது அம்சம்

ஸ்ரீராமாவதாரம்

கமல நாபனான ஸ்ரீ நாராயணனே தனது அம்சங்களாகிய ராமன், லட்சுமணன், பரதன், சத்ருக்னன் என்ற நான்கு உருவங்களுடன் தசரத மகா சக்ரவர்த்திக்கு நான்கு புத்ரர்களாகப் பிறந்தார்.

சிறுவனாய் இருக்கும்போதே ராமன் விசுவாமித்ர மகரிஷியின் யாக ஸம்ரட்சணைக்காகச் செல்லும்போது தாடகையை வதம் செய்தான். யாகத்தில் மாரீசனை வாயவ்யாஸ்த்ரத்தினால் தாக்கி, அவனை சமுத்திரத்தில் வீழ்த்தினான். சுபாகு போன்ற அரக்கர்களை அழித்தான். அகல்யையைத் தனது திவ்ய தர்சனத்தினாலேயே பாபம் நீங்கச் செய்தான். ஜனகர் அரண்மனையில் சிவதனுசை அனாயாச மாகவே முறித்தான். ராமன் என்ற மாவீரனுக்கே உரியவளான ஜனக குமாரியை, அயோனிஜையான சீதையை மணந்தான். க்ஷத்ரியர்களை நிர்மூலனம் செய்து வந்து, கேகய குலத்திற்கே தூமகேதுவைப் போன்ற பரசுராமனை கர்வம், பலம் முதலானவற்றை இழக்கச் செய்தான்.

பித்ருவசன பரிபாலனத்திற்காக அகண்டமான ராஜ்யத்தை துறந்து மனைவியும், தம்பி லட்சுமணனும் பின்தொடர வனவாசத்திற்குச் சென்றான். விராதன், கரன், தூஷணன், கபந்தன், வாலி முதலானோரை வதம் செய்தான். சமுத்திரத்தின் மீது ஸேதுபந்தம் (அணைக்கட்டு) செய்து, ராட்சதர்களை நிர்மூலனம் செய்து, தனது மனைவியை அபகரித்த தசானனை (ராவணனை)க் கொன்று, எந்தக் களங்கமும் இல்லாதிருந்தும் உலகத்திற்காக அக்னி ப்ரவேசம் செய்து தனது கற்புத்தன்மையை நிரூபித்த ஸ்ரீசீதா தேவியை ஏற்று, ஸமஸ்த தேவகணங்கள் புகழ்பாட, ஸ்ரீராமன் அயோத்தி திரும்பினான். அதன்பிறகு நடைபெற்ற ஸ்ரீராமனின் பட்டாபிஷேக வைபவத்தை நூறு வர்ஷங்களானாலும் விவரிக்க ஒண்ணாது.

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

ஸ்ரீமத் பாகவதம்

நவம ஸ்கந்தம்

தமிழ் வசனம் : ஸ்ரீ அ.வீ.நரஸிம்ஹாசாரியர்

சமுத்திரராஜன் சொல்லுகிறான்: பெருமை அமைந்தவனே! எங்கும் நிறைந்த பரமபுருஷனே! நீ ப்ராயோபவேசம் செய்திருக்கையில், உன்னை மூட புத்தியர்களாகிய நாங்கள் இதுவரையில் நிர்விகாரனும் ஜகத்திற்கெல்லாம் ப்ரபுவுமாகிய ஆதிபுருஷனென்று அறியாதிருந்தோம். இப்பொழுது தெரிந்தது. உன் சங்கல்பத்தின்படி நடப்பதாகிய ஸத்வகுணத்தினின்று தேவ கணங்களும், அத்தகைய ரஜோ குணத்தினின்று ப்ரஜாபதிகளும், தமோ குணத்தினின்று ருத்ராதிகளும் உண்டானார்கள். ஸத்வாதி குணங்களுக்கு நியாமகனான அந்தப் பகவான் நீயேயென்று இப்பொழுது நான் நினைக்கின்றேன். நீ இஷ்டப்படி ஜலத்தைக் கடந்து சென்று விஸ்ரவஸ்ஸென்னும் ப்ரஜாபதியின் மலம் போன்றவனும் மூன்று லோகங்களையும் அழப்படுத்துகிறவனு மாகிய ராவணனை வதைத்து உன் பத்னியைப் பெறுவாயாக. வீரனே! உனக்கு என் ஜலம் தடையன்று. ஆயினும் உன் புகழ் பரவும் பொருட்டு என் ஜலத்தின்மேல் அணை கட்டுவாயாக. திசைகளை யெல்லாம் ஜயித்த மன்னவர்கள் நீ அணைகட்டினதைக் கண்டு இது ஒருவராலும் செய்யமுடியாத செயலென்று, உன் புகழைப் பாடுவார்கள்.

ஸ்ரீ சுகர் சொல்லுகிறார்: ஸ்ரீராமன் சமுத்திர ராஜனுடைய வசனத்தை அங்ஙனமே அபிநந்தித்து வானர வீரர்களின் கைகளால் அடிக்கப்பட்ட விருட்சங்களின் நுனிகளையுடைய பற்பல பர்வத சிகரங்களால் சமுத்திரத்தில் அணைகட்டி சுக்ரீவன், நீலன், ஹனுமான் முதலிய பலவானரர்களுடன் முன்னமே ஹனுமானால் கொளுத்தப்பட்ட லங்காபட்டணத்திற்குள் விபீஷணன் காட்டின வழியின்படி நுழைந்தான்.

◈

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

ஸ்ரீ மகிரிஷி ஸ்ரீவியாஸரின்

ஸ்ரீ மஹாபாரத பர்வங்கள்

வடமொழியின் தமிழாக்கம் : தி.ஈ. ஸ்ரீ நிவாஸாசாரியார்

வனபர்வம்

ராமோபாக்யான பர்வம்

"பிறகு, நதங்களுக்கும் நதிகளுக்கும் பர்த்தாவும் ஜல ஜந்துக்களுடைய கூட்டங்களால் சூழப்பட்டவனும் காந்தியுள்ளவனும் ஆனந்தமுள்ளவனுமான ஸாகரனோ ராகவருக்கு ஸ்வப்னத்தில் தன்னைக் காண்பித்தான். நூறுநூறாக ரத்தினங்களின் சுரங்கங்களால் நிரம்பிய ஸமுத்திரராஜன், ராகவரை, 'கௌஸல்யையை மாதாவாகக் கொண்டவனே! என்று அழைத்து, மதுரமான இந்த வசனத்தைக்கேள். புருஷோத்தமனே! சொல். இச்சமயத்தில் உனக்கு என்ன உதவியைச் செய்யக் கடவேன்? நான் இக்ஷ்வாகு வம்சத்தாரால் உண்டுபண்ணப்பட்டவன். ராம! தவறாத பராக்கிரமமுள்ளவனே! உனக்கு நான் ஞாதியாக இருக்கிறேன்' என்று சொன்னான். ஸமுத்திரனால் இவ்வண்ணமுரைக்கப்பட்ட ராமர், பிறகு, 'நதங்களுக்கும் நதிகளுக்கும் பதியே! எந்த வழியினால் சென்று, குலத்தைக் கெடுத்த பாவியும் என்னுடைய மனைவியைக் கவர்ந்தவனும் ராக்ஷஸனுமான அந்தத் தசக்ரீவனை உறவினர்களுடன் கொல்வேனோ அந்த வழியை என்னுடைய ஸைன்யத்திற்கு நீ கொடுக்க விரும்புகிறேன். இப்படி யாசிக்கின்ற எனக்கு நீ வழியைக் கொடாமற் போனால் திவ்யாஸ்திர மந்திரங்களால் அபிமந்திரணம் செய்யப்பட்ட அம்புகளால் உன்னை வறளச் செய்வேன்' என்று சொன்னார். இவ்வாறு சொல்லுகின்ற ராமனுடைய வசனத்தை ஸமுத்திரராஜன் கேட்டு மனவருத்தமடைந்து கரங்களைக் குவித்து நின்றுகொண்டு ராமரைப் பார்த்து, 'உனக்குத் தீங்கை நான் செய்ய விரும்பவில்லை. நான் உனக்குத் தடையைச் செய்கிறவனுமல்லேன். ராம! என்னுடைய இந்த வசனத்தைக்கேள். கேட்டுச் செய்யத் தக்கதைச் செய். சேனை செல்லுவதற்கு உன்னுடைய கட்டளையினால் வழியைக் கொடுப்பேனாகில் மற்றவர்களும் வில்லின் பலத்தால் என்னை இவ்வாறு கட்ளையிடுவார்கள். ராகவா! இந்தவானரச் சேனையில் த்வஷ்டாவென்கிற விஸ்வகர்மாவுக்குப்

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

புத்திரனும் நல்ல பலமுள்ளவனும் சில்பிகளால் ஒப்புக்கொள்ளப் பட்டவனுமான நளனென்கிற வானரன் இருக்கிறான். அவன் கட்டையையோ புல்லையோ கல்லையோ எதை எதை என்மீது போடுவானோ அவையெல்லாவற்றையும் நான் தாங்கிக் கொண்டிருப்பேன். அது உனக்கு அணையாகும் என்று சொன்னான். இவ்வண்ணமுரைத்து அவன் மறைந்துபோகவே, ராமர் நளனைப் பார்த்து, 'நள! நீ ஸமுத்திரத்தில் அணையைக்கட்டு. நீ வல்லவ னென்று என்னால் எண்ணப்பட்டிருக்கிறாய்' என்று சொன்னார். எது நளஸேதுவென்று பூமியில் இன்றும் பிரஸித்தி பெற்றிருக்கிறதோ பத்து யோஜனம் அகன்றதும் நூறு யோஜனம் நீண்டதுமான அந்த அணைக்கட்டை ராகவர் அந்த உபாயத்தால் செய்வித்தார். ராமருடைய கட்டளையை முன்னிட்டு மலைக்கொப்பான அணையானது ஸமுத்திரத்தால் தாங்கப்படுகிறது".

◇

மகிரிஷி வியாசரின் ஸ்ரீ தேவி பாகவதம்

தமிழில் : காஞ்சி அ.ஆலாலசுந்தரம் பிள்ளை

ஸ்கந்தம் 3 - 30-ஆம் அத்தியாயம்

ஸ்ரீ ராமசரிதம்

தேவி மகிழ்ந்தவளாய் அஷ்டமிதினம் அர்த்த ராத்திரியில் அந்த மலையின் உச்சியில் சிம்ம வாகனத்தில் எழுந்தருளிவந்து தரிசனங் கொடுத்து ஸ்ரீராமரைப் பார்த்து மேகந்தொனிப்பது போலும் கம்பீரமாகிய வாக்கினால் பின்வருமாறு சொல்லத் தொடங்கினாள்: "ஓ ராமா! நீ லட்சுமணனோடு என்னிடத்தில் பக்திப் பிரபாவத்தோடு செய்துவரும் இந்த விரதத்துக்கு நான் சந்தோஷித்தவளாயினேன். உனக்கு வேண்டுவனவற்றைக் கேட்பாயாக. இராவணனை ஒழிக்கும் பொருட்டு, தேவர்களெல்லாம் விஷ்ணுவைப் பிரார்த்திக்க அவரம்சமாய் தசரதனுக்கு மகனாகப் பிறந்திருக்கின்றனை....: நீ விஷ்ணு அம்சமாக வந்ததுபோல் இந்த வானரக் கூட்டங்களும் தேவர்களுடைய அம்சங்களாகும். இந்தக் கூட்டங்களெல்லாம்

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

உனக்குச் சகாயமாயிருக்க என்னுடைய சத்தி அம்சத்தைக் கொடுக்கிறேன். உன் தம்பி ஆதிசேஷனுடைய அம்சம். அவன் இந்திரஜித்தைக் கொல்லப் போகிறான். நீயும் ராவண யுத்தத்தை வசந்த காலத்தில் சிரத்தையுடன் செய்து வெற்றியடைந்து சுகமாய் அயோத்திக்குப் போய் பதினாயிரம் வருடம் ராஜ்ய பரிபாலனம் செய்து, பின்னர் பரமபதத்தை அடைவாய்" என்று அனுக்கிரகம் செய்து மறைந்து போயினள்.

தேவியனுக்கிரகம் பெற்ற ராமர் சந்தோஷமடைந்து விரதத்தைப் பூர்த்திசெய்து அநேக தானங்களைக் கொடுத்து நாரதரைப் பணிந்து, "ஸ்வாமி! நீர் எனக்கு ஆசிரியராய் எழுந்தருளியபடியினாலல்லவா விரதபூர்த்தியும் தேவி அனுக்கிரகமும் கிடைக்கப் பெற்றேன். இனி சீதையையும் கிடைக்கப்பெறுவேன். இவ்வரிய உதவி செய்த தேவரீருக்கு அடியேன் என்ன கைம்மாறு செய்ய வல்லேன்?" என்று வணக்கத்துடன் சொல்ல, நாரதர் மகிழ்ந்து, "ஓ, ராமமூர்த்தி! உனக்கு வெற்றியும் மங்களமும் உண்டாகுக" என்று ஆசீர்வதித்துப் போயினர்.

ராமர் சந்தோஷ சித்தராய் தசமி தினம் பிரயாணப்பட்டு யாவராலும் துதிக்கப்படும் கீர்த்தி பெற்று, தம்பியினிடத்தில் மிகுந்த இஷ்டமுடையவராய் மகா சத்தியால் அனுக்கிரகிக்கப்பட்ட வானர சைனியங்கள் சூழ்ந்துவரக் கடற்கரையை அடைந்து சேது பந்தனஞ் செய்து இலங்காபுரிக்குப் போய் தேவ சத்துருவாகிய ராவணனைச் சங்கரித்துச் சுகமுற்றனர்.

◈

ஸ்ரீ ஆஞ்சநேய புராணம்

தமிழில் : கெம்பு ஆறுமுகம்

அணைகட்டும் பணி

இராமர் உட்பட அனைவரும் கடற்கரையை அடைந்தனர். கடலைக் கடந்து செல்வதற்கான வழி அவர்களுக்குப் புலப்பட வில்லை. விபீஷணன் இராமனிடம் "பிரபு! தாங்கள் கடலரசனை

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

வேண்டிக் கொள்ளுங்கள்! அதனால் நன்மை உண்டாகலாம்" என்றான்.

இராமனும் அவ்வாறே கடலரசனை வேண்டி மூன்று நாட்கள் உபவாசமிருந்தார். இருந்தும் பயனில்லாமல் போய்விட்டது. அதனால் பொறுமை இழந்தார். தம்முடைய ஆற்றலைக்கொண்டு காரியத்தை முடிக்கத் துணிந்தார்.

அவர் தம் கையில் வில்லையெடுத்து பிரம்ம அஸ்திரத்தைப் பிரயோகித்துக் கடல்நீரை வற்றச் செய்ய நினைத்தார்.

அதை அறிந்த இலட்சுமணனும், முனிவர்களும் "வேண்டாம்! அதனால் பல விபரீதங்கள் நேரும்!" என்று தடுத்தனர்.

ஆனால் இராமன், "நான் என் கடமையை ஆற்றவேண்டும். இந்த நேரத்தில் இதைத்தவிர எனக்கு வேறு மார்க்கம் தோன்றவில்லை!" என்று பிரம்மாஸ்திரத்தை பிரயோகிக்கத் தயாரானார்.

அப்போது பூமி அதிர்ந்தது - கடல் பெருமளவு கொந்தளித்தது. அந்த இடத்தில் கடலரசன் தோன்றி இராமனை வணங்கி, "இராமா! அஸ்திர பிரயோகம் செய்ய வேண்டாம்! இது நியாயமற்ற செயல். நான் இயற்கை நியதிக்குக் கட்டுப்பட்டு நடப்பவன். நான் பரந்து விரிந்து இருப்பதால்தான் ஒருவராலும் தாண்டமுடியாமல் இருக்கிறது. ஆழமாக இருப்பதால்தான் அலைகள் உண்டாகவும் பிறரால் கடக்கமுடியாமலும் இருக்கிறது. இந்நிலையில் பிரம்மாஸ்திரங்கொண்டு வற்றச் செய்தால் உலக நடைமுறைக்கே குந்தகம் உண்டாகும்! அதனால் தங்களுக்காக என் நியதியிலிருந்து நான் விலகுவதும் நியாயமல்ல" என்றான்.

இராமன் யோசித்தார். "உண்மைதான் சமுத்திர ராஜா! நான் என் காரியம் நிறைவேறவில்லையே என்ற வேகத்தில் இப்படிப்பட்ட காரியத்தில் ஈடுபட்டேன்! அதற்காக வருந்துகிறேன். இருந்தாலும் நான் கடலைக் கடந்து செல்லும் மார்க்கம் என்ன?" என்று கேட்டார்.

கடலரசன், "தசரதன் மைந்த! தங்கள் வானர சேனையில் நளன் என்பவன் ஒருவன் இருக்கிறான். அவன் ஒருசமயம் கங்கைக் கரையில் சில அந்தணர்கள் சாளக்கிராமத்தை வைத்து பூசித்து வருவதைக் கண்டான். அவன் அவர்களுக்குத் தெரியாமல் சாளக் கிராமத்தை எடுத்து கங்கையில் வீசி எறிந்துவிட்டான். இதையறிந்த

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

அந்தணர்கள் கோபங்கொண்டு அவனுக்கு ஒரு சாபமிட்டனர். அவன் எந்தப் பொருளை தன் கையால் எடுத்து தண்ணீரில் போட்டாலும் அது மூழ்காமல் மிதக்கும் என்று அன்று அவன் பெற்ற சாபம் இன்று உங்களுக்கு உதவியாக இருக்கும். வானர வீரர்களைக் கற்களையும் பாறைகளையும் கொண்டுவரச் செய்து நளன் கையால் கடலில் போடச் செய்தால் அது மிதக்கும். நீங்கள் அணையைக் கட்டி சுலபமாக கடலைக் கடந்து விடலாம்" என்று கூறிவிட்டு மறைந்தான்.

இராமன் மகிழ்ச்சியுடன் நளனை அழைத்துவரச் செய்தார். வானர வீரர்கள் கற்களையும் பாறைகளையும் மரங்களையும் கொண்டு வந்து நளனிடம் கொடுத்தனர்.

நளன் ஒவ்வொன்றையும் தன் கையால் தொட்டு இராமா என்ற பெயரை அதன்மீது எழுதி நீரில்போட்டுக் கொண்டிருந்தான். அவை நீரில் மிதந்தன.

வானர வீரர்கள் உற்சாகத்துடன் மிக வேகமாக செயல்பட்டுக் கொண்டிருப்பதைக் கண்ட அணில் ஒன்றும் இராமனுக்கு சேவை செய்ய விரும்பியது. அதனால் அது மணலிலே புரண்டு எழுந்து தன் உடலிலுள்ள மணலைக் கற்களுக்கிடையே உதறிக்கொண்டிருந்தது. அந்த அணிலின் உதவிக்குத் தம் நன்றியையும் பாராட்டையும் தெரிவிக்கும் வகையில் இராமன் அதை எடுத்துத் தம் கையால் அதன் முதுகில் தமது மூன்று விரல்களும் பதியுமாறு தடவிக் கொடுத்தார்.

◇

பத்ம புராணம்

தமிழில் ஸ்ரீ T.S. பாலகிருஷ்ண சாஸ்திரி

வாமன பிரதிஷ்டை

ஸ்ரீ ராமபிரான் அயோத்தியில் அரசு புரிந்த காலத்தில் தமது உயிர்த் தோழர்களான சுக்ரீவன், விபீஷணன் இவர்களைக் காண விரும்பினார். அரசை, தம்பி லடசுமணனிடம் ஒப்படைத்து, பரதனை அழைத்துக்கொண்டு புஷ்பக விமானத்தின்மீது ஏறிச்

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

சென்றார். புஷ்பக விமானத்தில் இருந்தபடியே, பரதனுக்குத் தம் பழைய இருப்பிடங்களைக் காட்டிக்கொண்டே சென்றார். உள்ளத்தைத்தொடும் சித்திரகூடம், மறக்கமுடியாத பஞ்சவடி, அதற்கருகே ஜனஸ்தானம், அங்கே தமக்கும், கரதூஷணாதிகளுக்கும் நடைபெற்ற யுத்தத்தின் வரலாறு இவைகளைச் சொல்லிக்கொண்டே கிஷ்கிந்தைப் பட்டணம் வந்தார். புஷ்பக விமானத்தைக் கீழே நிறுத்தி, அதனின்றும் இறங்கி நேரே சுக்ரீவனைப் பார்க்கச் சென்றார். ஸ்ரீராமபிரானையும், பரதனையும் ஒருங்கே தரிசித்த சுக்ரீவன் மட்டற்ற மகிழ்ச்சியடைந்தான்.

"ஸ்வாமி, தாங்கள் என்னை மறக்காமல், தங்கள் அருமைத் தம்பியுடன் வந்துற்றீர்கள். அன்றைய தினம் லட்சுமணனுடன் வந்து என்னைக் காத்தீர்கள். எப்பொழுதும் உங்கள் நினைவில் நீங்காத புனிதன் அன்றோ இப்பரதன் எனும் பெருந்தகை. அன்று இந்த பரதனுக்காக விரதம் பூண்டு என்னுடைய சிறு நகரத்துக்குள் வர மறுத்துவிட்டீர்கள். இன்று நீங்கள் இருவருமே வந்தது யான் பெற்ற புண்ணிய பலனே. இங்கு நீங்கள் இருவரும் சில தினங்கள் தங்கி எனக்கருள் புரியவேண்டும்" என்று கேட்டுக்கொண்டான்.

ஸ்ரீ ராமனும் அன்புடன் சுக்ரீவன் வேண்டுகோளை ஏற்று கிஷ்கிந்தையில் சில நாள்கள் தங்கினார். "இலங்கையில் என் பக்தன் விபீஷணனைக் காண வேண்டியே புறப்பட்டேன். உன்னையும் பார்த்துவிட்டுப் போக ஆசைப்பட்டு இங்கு தங்கினேன்" என்று சுக்ரீவனையும் அழைத்துக்கொண்டு புஷ்பக விமானத்தில் இலங்கையை நோக்கிப் புறப்பட்டார்.

ஸ்ரீ ராமபிரான், சுக்ரீவனுடனும், தம்பி பரதனுடனும் தன்னிடம் வருகிறார் என்று அறிந்த விபீஷணன், நான்கு மந்திரிகளுடன் ஆகாயத்தில் எழும்பி, அவரை எதிர்கொண்டு தன் நகரம் அழைத்து வந்தான். தெற்குக் கடலைத்தாண்டி வரும்பொழுது, முன்பு விபீஷணனுக்கு இவ்விடத்தில் தான் அபயம் அளித்ததையும், சுக்ரீவன் முதலான வானரர்கள் தடுத்தபோது அவர்களுக்கு அபயப்ரதானம் செய்யும் நீதியை உணர்த்தியதையும், இவ்விடத்திலேயே சமுத்திர ராஜனிடம் தான் உதவி கோரியதையும், சமுத்திரராஜன் மூன்று நாளாகியும் வராததால், தான் அவனிடத்தில் கோபம் கொண்டு அவனைத் தண்டிக்க, அவன் விரைந்து ஓடிவந்து

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

தம்மைச் சரணம் அடைந்ததையும், வேடிக்கையாகத் தம்பி பரதனுக்குச் சொன்னார். பிறகு வழிநெடுக சமுத்திரத்தின்மீது நளன் என்ற வானரன் கட்டியமைத்த பாலத்தை பரதனுக்கும் காட்டியவாறு இலங்கையில் தமக்கும், ராவணனுக்கும் வானரர்களுக்கும், ராட்சதர்களுக்கும் நடந்த பெரும் சண்டையை விவரித்துக்கொண்டே சென்றார். பிறகு ராவணன், கும்பகர்ணன், இந்திரஜித்து இவர்களைத் தாமும், தம்பியும் வதம் செய்ததையும், பிறகு சீதா பிராட்டி அக்னிப் பிரவேசம் செய்ததையும் மொழிந்தார். தமது தந்தை தசரத சக்ரவர்த்தியை அவ்விடத்திலே தாம் கண்டதையும், அவர் இந்திர லோகத்திலிருந்து தம்மைக் காணவந்தார் எனவும் ஸ்ரீராகவன் பரதனுக்கு மொழிந்தார்.

பிறகு விபீஷணன் அனைவரையும் வரவேற்று பூஜைசெய்தார். இலங்கையே ஒருங்கே திரண்டு ஸ்ரீ ராகவனையும், பரதனையும் கண்டு களித்தது. விபீஷணன் செங்கோன் முறையைப் பிறழாது அரசு புரிவதை அறிந்த ஸ்ரீராமபிரான், அவனுக்கு ஆசி கூறினார்.

◇

THE RAMAYAN OF VALMIKI

(Translated from Sanskrit into English by Ralph T.H.GRIFFITH)

Book VI - CANTO XXII

Then spake the king of brooks and seas
To Raghu's son in words like these:
'Now let a wondrous task be done
By Nala, Visvakarma's son,
Who born of one of Vanar race,
Inherits by his father's grace
A share of his celestial art.
Call Nala to perform his part,
And he, divinely taught and skilled,
A bridge athwart the sea shall build.

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

He spoke and vanished Nala best
Of Vanar chiefs, the king addressed:
'O'er the deep sea where monsters play
A bridge, O Rama, will I lay;
For, sharer of my father's skill,
Mine is the power and ruine the will,
'Tis vain to try each gentler art
To bribe and soothe the thankless heart;
In vain on such is mercy spent;
It yields to naught but punishment,
Through fear alone will Ocean now
A passage o'er his waves allow.
My mother, ere she bone her son,
This boon from Visvakarma won:
'O Mandari, thy Child shall be
In skill and glory next to me,
But why unbidden should I fill
Thine year with praise of my skill?
Command the Vanar hosts to lay
Foundations for the bridge today,
He spoke: and swift at Rama's hest
Up sprang the Vanars from their rest,
The mandate of the king obeyed
And sought the forest's mighty shade,
Unrooted trees to earth they threw,
And to the sea the timber drew.
The stately palm was bowed and bent,
Askokas from the ground were rent,
And towering Sales and light bamboos,
And trees with flowers of varied hues,
With loveliest creepers wreathed and crowned,
Shook, reeled, and fell upon the ground,
With mighty engines piles of stone
And seated hills were overthrown;
Unprisoned Waters sprang on high,

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

In rain descending from the sky;
And ocean with a roar and swell
Heared wildly when the mountains fell.
Then the great bridge of wondrous strength
Was built, a hundred leagues in length.
Rocks huge as autumn clouds bound fast
With cordage from the shore were cast,
And fragments of each riven bill,
And trees whose flowers adorned them still.
Wild was tumult, loud the din
As ponderous rocks went thundering in.
Ere set of sun, so toiled each crew,
Ten leagues and four the structure grew;
The labours of the second day
Gave twenty more of ready way,
And on the fifth, when sank the sun,
The whole stupendous work was done.
O'er the broad way the Vanars sped,
Nor swayed it with their countless tread.

◇

SHRI RAMAYANA DARSHANAM

KANNADA : KUVEMPU
TRANSLATION : S.M. PUNEKAR

CANTO NINE
I Die or Cross The Ocean

As the sun rose
Higher, darker spread the shadows of Vanara braves
Bunched around the fainted solar Prince in oblique patches
Elongated on the vast sand plains, Slowly opened
The eyes of Rama, still dazed, he was not able

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

To speak, Seeing the anxious faces of Vanara captain
He sighed and looked at the sea. Then he spoke:
"Heard of the name of Nala mentioned by the architect
Of Heaven! Able to construct a bridge, I learnt!
Isn't he the son of Vishwakarma? To himself muttered he
and turned his eyes on Nala. When Rama's eyes met
Nala's like lamp relumning another lamp, suddenly leaped forth
The just born intuitive architectural wisdom,
From the depths of deep-frozen unconscient state,
Bubbling and spudding to the open world as extravert
Intellectual accomplishment incomplete form
As inherited memory of his father's long labours
Of trial and error and enunciation. Nala's hair
Pricked up, as pricked up the hair of all hearers,
When he confidently said folding his hands to Rama:
"My lord, no cause for anxiety anymore. Treasures
Buried in the oblivion's depths have become available
To me this instant, to my own amazement. With the blessings
Of my father giving me strength, build I an amaging bridge,
Spanning this dreadful ocean, smashing in twain his pride..
This ocean will be petrified for amazement! See
For yourself! Rocks will float; giant trees
Will stabilise themselves where fixed without floating
About! See for yourself... The meanest weakling
In this crowd will uproot mighty mountains and ancient rocks
And themselves carry them for the bridge! See
For yourself... give me the mandate; give a word
Of encouragement to the enthusiasm of ape army's
Millions! I shall build a bridge and reach all
To Lanka soil, for certain victory!"

What to tell?
No sooner did Nala's optimistic words issued,
Than the loud cheers rose among Vanara regiments
That woke the stony sleep of mountains and upset

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

The indifference of earth and sky. Ramachandra
Had the amazing vision like oneconfronted
With a magnifying mirror. Was it the boon promise
Of the divine architect? or, the operation of Nala's
Freshly acquired power? Even, pigmies in Vanara force
Miraculously grew to gigantic size that no simile,
Not even peak-like can suffice to envision! Nala,
Now statured as Vindhya mountain stood and waved
His arms in command, like king mountain commanding
Smaller ranges. As the herd of elephants catching
The signal of the bull-elephant obediently walk
In file, so some gigantic ape soldiers held the line
For measurement. Some took on giant footrules;
Several in konts climbed mountains; quick-witted men
Seasoned in building bridges over rivers seemed
To have all the skills needed for oceanic bridge-building.

They heaved heavy ancient rocky peaks with the ease
Of breaking hollow twigs, clasping them is arms,
Uprooting from base and loading them on shoulder
Like conveyor belts they rolled boulders hand to hand
To the bridgehead. Like undergrowth shrubs in hollow
Of mountains, they uprooted giant trees, as their stems
Shook, erased their leaves, broke roots brushed lush growth,
And broke them with sharp report; and threw the logs
Seaward. The earth thembled with the violent crashing
Of loads; forests were reduced to bald plains;
Mountain shoulders were flattened and levelled.
Streams dried up to leave behind crevasses; water
Spudded in the hollows left by uprooted rocks
To form wide underground lakes. Elephants homing in cane clumps,
Fled helter-skelter affrighted by giant-size apes,
appearing like emmets to the heaven's luminary travellers,
The sun and the moon, in comparison! Though reduced
Mahendra mountain in the confidence of retaining

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

His repute, though severed from the sea now, felt
Gratified for the good name he had earned, now flattened
Day after Day!

On the other side, under the powered guidance
Of Nala, the divine architect's son, the bridge progressed
According to the divine plan, over the spell-bound sea
Right over its breast of blue brine, like a serpent
Holding an upright hood. Every moment it stretched
On and on, in a grand, gigantic and imperishable build,
By the crush of rolling boulders and rocks, the brine mass
Was pounded and spliced, heaving to mountains and vales,
Foaming and seething at open mouth. Numerous rows
Of Vanara braves appeared here and there, following
The rope of Nala's will filatures twined together
To Nala's design. They heaved the boulders from back
And shoulders, shook the mud clinging to their bodies thumped
Their arms with resounding muscular reports
Of gratified gesture, thumped their things like clubs,
And walked back with the regimen of beads on a string;
Carrying their mountain-massive bulks. Like cumulus
Clouds massing in the west in some eve of Ashwina month,
In the beam-streaks of the setting sun, bund on bund,
Huge boulders, giant logs, sand dunes and earth bunds
Fitted into the bridge leading toward the demon isle,
As if the Vanaras had made a street festoon, still growing
Longer and Longer!

Thus, for five days and five night incessant building work
Continued, smeshing, the teeth of obstruction raised
By demonic trickery, according to the plan made
By the divine architect's son. The magnificent bridge
Of grand design stretched like Adisesha emerging
From the Earth's ant hill to explore Vishnu's chamber
In search of Laxmi.

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

ANJANEYA RAMAYANA

Telegu : Anjaneyulu

English Translation : R.M.Challa

Yuddha Kanda

Law of Nature

The sea-god said: "Lord Rama, you know I am one of the five elements whose laws are relentless. The thickness and immobility of the earth, the free movement of air, the depth and wetness of water, the flaming and buring of fire and the empty space of ether are there by inexorable nature. I do not want to come in your way; you for your part should not forget your sense of right and wrong in your momentary disappointment. Please build a bridge across my surface; I shall co-operate with you to the extent I can. I wish you success in your efforts and request you to come back here as a conqueing hero".

As Rama had already aimed his Brahmastra, which could not be withdrawn, he asked the sea-god as to what should be done with it.

The sea-god advised him to fling it at the sinners who were roaming about in the region of Druma river, drunk on its intoxicating waters.

As Rama did accordingly, the waters of that river dried up and all the creatures in and around it perished. Afterwards, a fertile forest grew out of it, thanks to Rama's blessings.

Plan

The sea-god was much gratified. He said: "Lord Rama, the monkey Nala is the son of the divine architect Visvakarma. He has all the attributes of his father. Besides, his zeal is matchless. Please entrust

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

the supervision of construction of the bridge to him and your task will be successfully fulfilld". Promising again that he would do his best to see that the bridge would be safe on its foundation, he took his leave of Rama and disappeared.

Then Rama sent for Nala and told him what transpired between him and the sea-god. Nala replied: "Lord, the sea-god has reminded me of the boon my father granted to my mother on mount Mandara. I will now be true to that blessing".

Bridge

On Nala's orders the monkeys began pulling out trees and even small hills. With them, they completed the construction of the bridge within five days. They used all their skill and energy to make it soft enough for Rama's tender feet to tread upon.

The bridge looked as though it were the parting line in the hair of the sea-god. Poor Ravana, he thought he was invincible because of his boons. Now, even his other self-assurance, that his island could not be reached by the outside world, was being belied.

The gods in heaven were pleased with the work of the monkey army. They blessed them with flowers. Even as the monkeys were delighted to have the heavenly petals fall on their heads, the flowers themselves were looking forward to the joy of Rama's feet touching them.

Vibishara was guarding the rear as they all began crossing the sea. After walking over the approaches to the sea, Rama and Lakshmana were carried on the shoulders of Hanuman and Angade respectively.

◈

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

ராம கீர்த்தி

தாய்லாந்து இராமாயணம்

மொழிபெயர்ப்பு : ஸ்ரீ வேணுகோபாலன்

இராமர் சுக்ரீவாவை அழைத்தார். இலங்கைத் தீவுக்குச் செல்வதற்காகக் கடல்மீது ஒரு பாலம் கட்டச் சொன்னார். இந்தப் பாலத்தின்மீது நமது படைகள் நடந்துசெல்ல உதவியாக இருக்கும் என்றும் கூறினார். சுக்ரீவா உடனே தனது வானரப்படை அத்தனையையும் திரட்டினான்.

“போங்கள்; கற்களையும், மரங்களையும் இழுத்து வாருங்கள். கடலில் போட்டு இதில் பாலம் கட்ட வேண்டும்” என்று கூறினான்.

இந்த விஷயத்தில் அனுமானும், நீல்பட்டும் வலுவான உதவியைக் கொடுத்தார்கள். அவர்கள் இருவருமே பெரிய மலைகளை முழுவதும் இழுத்து வரமுடிந்தது. கடலில் கொண்டு அவைகளைத் தள்ளினார்கள். இந்த விஷயத்தில் இருவரும் ஒருவருக்கொருவர் போட்டி போட்டு வேலை செய்தார்கள். இதனால் இருவருக்கும் சச்சரவுகள்கூட ஏற்பட்டன.

அனுமான்மீது நீல்பட்டுக்கு ஒரு பழைய காரணத்தில் ஆத்திரம்கூட இருந்து வந்தது. தனது மாமா அரசர் சொம்புவை அனுமான் தூக்கத்திலிருந்து எழுப்பி ராமர் முன்னால் கொண்டு வந்தார் அல்லவா? அந்தப் பழைய சம்பவம் அவனுக்கு ஆத்திரத்தைக் கொடுத்தது. இப்பொழுது அனுமான் தனது ரோமங்களில் மலைகளைக் கட்டி இழுத்துக்கொண்டு வந்து கீழ்பாகத்தில் வேலை செய்யும் நீல்பட்டிடம் “உடனே இவைகளை வாங்கிக்கொள்” என்று கட்டளை இட்டார்.

நீல்பட் ஒவ்வொரு மலையையும் ஒன்றன்பின் ஒன்றாகக் கீழே அனுப்பும்படி சொன்னான். அதன் மூலம் அவனால் எளிதாக வேலை செய்யமுடியும் என்று கூறினான்.

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

அனுமான் அதைக் கேட்டுக்கொள்ளவில்லை. தன்னால் இழுத்து வரப்பட்ட மலைகளை எல்லாம் நீல்பட்டின்மீது எறிந்தார். நீல்பட்டிற்குக் கோபம் வந்தது. அனுமானுடன் சண்டையிடக் கிளம்பினான். இருவரும் பாறைகளை ஒருவர்மீது ஒருவர் வீசிச் சண்டையிட்டார்கள். பிறகு மலைகளையே பிடுங்கி ஒருவர்மீது ஒருவர் எறிந்தார்கள். இவர்களது சண்டையில் எழுந்த கொடூர சத்தங்கள் ராமர் காதில் விழுந்தன. அவர் லட்சுமணனை அழைத்து விசாரிக்கக் கூறினார்.

லட்சுமணன் சென்று பார்த்ததில் இருவரும் சண்டையிடுவது தெரிந்தது. அவர்களைக் கையமர்த்தி ராமர் முன்னால் அழைத்து வந்தான்.

ராமருக்குக் கோபம் ஏற்பட்டது. அவர்களுக்குத் தண்டனை கொடுக்க நினைத்தார். அதைப்பற்றி யோசித்துக் கடைசியில், நீல்பட்டை கிஷ்கிந்த் நகருக்குத் திரும்ப அனுப்பிவைத்தார். அங்கே அவன் படைக்கவேண்டிய உணவுகளைச் சேகரிக்க வேண்டும் என்று உத்தரவிட்டார். அதேநேரம் அனுமானை அழைத்து, "நீ ஏழு நாட்களுக்குள் பாலத்தை முடித்துத் தரவேண்டும்" என்று கட்டளை யிட்டார்.

அந்தச்சமயத்தில் பாலம் கட்டப்படும் செய்தி ராவணன் காதுக்கு எட்டியது. அவன் யோசனைகள் படர்ந்தன. சிறிது அச்சம்கூட ஏற்பட்டது. இந்தப் பாலத்தை எப்படியும் நாம் நிறுத்தி ஆக வேண்டும் என்று நினைத்தான். அதற்கு என்ன வழி என்று யோசித்தான். தனது மகள் ஒருத்தியை அழைத்து வரச்சொன்னான்.

அவள் ஒரு செம்படவப் பெண்ணிற்குப் பிறந்தவள். கடற்கரை அருகேதான் வாழ்ந்தாள். அவளது பெயர் நங்சுபர்ணமஜா. அவளுக்கு மீன்கள் எல்லாம் வசியமாக இருந்தன. அதை ராவணன் நன்கு அறிவான்.

எனவே அவளிடம், "நீ கடலில் உள்ள மீன் குடும்பங்களை ஒரு படையாகத் திரட்டி ராமர் அணை கட்டும் இடத்திற்குச் செல்ல வேண்டும்.அங்கேஅந்த அணைப் பகுதியில் இருந்து கற்களை எடுக்க வேண்டும். கடலுக்குள் அவற்றைத் தள்ளிவிட வேண்டும்" என்றான்.

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

சுபர்ணமஜா சம்மதித்தாள். தனது வசிய முறையில் எல்லா மீன்களையும் வரவழைத்தாள். பெரிய மீன் படையைத் திரட்டினாள். ராமர் அணைகட்டும் இடத்திற்குச் சென்றாள். அங்கே மீன் படைகளுக்கு உத்தரவு கொடுத்தாள். அவைகளும் பாலத்துக்கு அருகே சென்று அங்குள்ள கற்களை நகர்த்தி கடலுக்குள் தள்ளின.

அனுமான் அணைகட்டும் கட்டளையை வெகுவிரைவாக நிறைவேற்றிக்கொண்டு இருந்தார். அப்படிக் கட்டிக்கொண்டு போகும்போது அவருக்கே ஓர் ஆச்சரியம் ஏற்பட்டது. அணைகட்டிக் கொண்டே போனாலும் பாலம் இன்னும் நீளமாகாமலே இருந்தது. "இது என்ன அதிசயம் என்று திகைத்தார். எவ்வளவோ மலைகளை இழுத்துக்கொண்டு இங்கே தள்ளுகிறேன்! வானரங்கள் எவ்வளவோ கற்களைக் கொண்டுவந்து தள்ளுகின்றன. அப்படியும் பாலம் நீளவில்லையே! என்று யோசித்தார்.

அப்போதுதான் அதைப் பரிசீலனை செய்யவேண்டும் என்ற எண்ணம் தோன்றியது. கடலுக்குள் ஏதாவது நடக்கிறதா என்று எண்ணினார். அதைக் கவனிக்கும்போது நீருக்குள் நிறைய மீன்கள் அவர்கள் போட்ட கற்களை எல்லாம் இழுத்துத் தள்ளுவதைக் கண்டார். அனுமானுக்கு ஆத்திரம் வந்தது. மீன்களை நையப் புடைக்க ஆரம்பித்தார்.

மீன்களுக்குத் தலைமை வகித்த சுபர்ணமஜா வெளிவந்தாள். அவளுக்கு மீன்களின் செதில்போல் வால் இருந்தது. உண்மையில் பார்ப்பதற்கு அழகாக இருந்தாள். அனுமான் அவளைப் பார்த்ததும் அவள்மீது மையல் கொண்டார். "இந்தப் பெண்ணை நான் அடைய வேண்டும்" என்று நினைத்தார். மெல்ல அவளிடம் சென்று பேச ஆரம்பித்தார். சுபர்ணமஜா புன்னகையுடன் பேசினாள். அனுமானும் பேசினார். இருவரும் பேசி தங்கள் மனங்களை வெளியிட்டார்கள்.

அனுமான் மீது அந்தப் பெண்ணுக்கும் பெரிய மோகம் ஏற்பட்டது. கடைசியில் இருவருமே காதலர்கள் ஆனார்கள். சுபர்ணமஜா சீக்கிரத்தில் கர்ப்பவதி ஆனாள். ஒரு மகனைப் பெற்றெடுத்தாள். அவன் உடல் பாதி மீனாக இருந்தது!

இராமர் கடலின் மீது அணை வருவதைக் கவனித்துக்கொண்டு இருந்தார். சீக்கிரத்தில் அணை முடிவாகும் நிலைக்கு வந்தது.

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

அப்போது அனுமான் மனக் கலக்கத்துடன் இருந்தார். தனது காதலி சுபர்ணமஜாவைப் பிரியவேண்டுமே என்று வருத்தப்பட்டார். அவளை நினைத்தார். கடலுக்குள் மீன்களுக்கு அரசியாக இருந்த சுபர்ணமஜா நீந்திக்கொண்டு மேலே வந்தாள். அனுமானைப் பார்த்தாள். அவருக்கு சமாதானம் கூறினாள்.

"நீங்கள் ஏன் வருந்தவேண்டும்? இராமருக்காக நீங்கள் எடுத்துக் கொண்ட காரியத்தை முடியுங்கள். நானும் உங்கள் மகனும் உங்களை மறக்கவே மாட்டோம். எப்போது நீங்கள் கடற்கரைக்கு வந்தாலும் நான் உங்களைச் சந்திப்பேன்" என்று கூறினாள்.

சீக்கிரத்தில் அணை முடிவடைந்தது. இராமர் தமது படைகளை "போகலாம்" என்று கட்டளை இட்டார். படைகள் அணைமீது செல்ல ஆரம்பித்தன.

◇

ராம கதா ரஸவாஹினி

பகவான் ஸ்ரீ சத்ய சாயிபாபா

(தமிழாக்கம் : K.G. மாணிக்க வாசகம்)

25. திருவணை

இராமர் தம்முடைய வில்லையும், அம்பையும் தம்மிடம் கொண்டு வருமாறு இலக்குமணரைப் பணித்தார். அவைகளைக் கொண்டு வரும்பொழுது இராமர், "ஆணவம் பிடித்தவர்கள் அன்பிற்கு அருகதையற்றவர்கள்; குறும்புக்காகக் கொடூர குணம் கொண்டவர்கள், சலுகைக்குப் புறம்பானவர்கள்; இயற்கையான லோபிகளுக்கு நல்லொழுக்கப் பயிற்சி பயனளிக்காது; தற்பெருமைக்காரர்களுக்குப் புத்திமதி தேவையில்லை; பேராசைக் காரர்களுக்குத் தியாக உபதேசம் பயனளிக்காது; கோபத்தில் சிக்குண்டவர்களுக்கு அமைதி அறிவுரை ஏறாது; காமாந்தகாரர் களுக்குச் சாத்திர வாசிப்பு தகுதியில்லை; களர் நிலங்களுக்குத் தான்ய விதைகள் ஏலாவாம்; அதுபோல் இதமான வேண்டுகோள்களுக்குப்

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

பணியாத இப்பெருங்கடலுக்கு இரக்கம் காட்டத் தேவையில்லை" என்று சொல்லிய வண்ணம் தம் வில்லில் அம்பு பொருத்தினார்.

அதைக்கண்ட இலக்குமணர் பெருங்கடலுக்கு நேரவிருக்கும் பேராபத்தை நினைந்து நடுங்கினார். தன்னை நோக்கி ஆழ்ந்து எறிய அம்பு பூட்டப்படுவதைக் கண்டதுமே அக்கடல் கொதிக்க ஆரம்பித்து விட்டது. அதன் ஆழத்தில் வாழ்ந்திருக்கும் ஜந்துக்கள் வெந்துயரால் வாடின. பீதியினால் பிடிபட்டதுபோல் அலைகள் இரைந்து கொந்தளித்தன. வரிசை வரிசையாக அலைகள் இராமரிருந்த விடத்திற்குத் திரண்டோடி, மெல்லென அவர் பாதங்களை வருடிக் கருணை காட்டவேண்டுமென்று மன்றாடுவது போல் இறைஞ்சின.

அத்தருணத்தில் ஏதோ ஒரு குரல் வானிலிருந்து பேசுவது போலிருந்தது. அது "பிரபோ! உங்கள் பாசறையில் முனிவரால் சபிக்கப்பட்ட நளன், நீலன் என்ற இரண்டு தளபதிகள் உள்ளனர். அவர்களுக்கு இட்ட சாபத்தை இப்பொழுது பயன்படுத்தி நன்மையைப் பெறக்கூடும்; உற்றுக்கேளுங்கள். அக்கதையை யான் இப்போது சொல்லுகின்றேன்" என்று பெருங்கடலே இராமருக்கு அஞ்சத்தக்க அந்நிகழ்ச்சியின் விபரங்களை எடுத்துரைத்தது.

"ஒரு நதிக்கரையின் ஓரத்தில் பல துறவிகள் குடில்களில் வசித்து வந்தனர். சிறு வயதிலேயே நளன், நீலன் என்ற இருவரும் அக்குடில்களுக்குள் பிரவேசிப்பதுண்டு. அங்கு துறவிகளால் பூசிக்கப்பட்டு வரும் சாளக்கிராம தெய்வ வழிபாட்டுத் திருஉருவங்களை எடுத்து அந்நதியில் எறிவது வழக்கம். அந்த அவச் செயலைக் கண்டு சினம் கொண்ட துறவிகள் அவர்களுக்கு இட்ட சாபமாவது: 'சிறுவர்களே! நீங்கள் நீரில் எறியும் எப்பொருளும் மூழ்காமல் இருக்கக் கடவது; மூழ்குவதற்குப் பதிலாக அவைகள் நீரில் மிதக்கக்கடவன. நீர் வெள்ளப்பெருக்கு வந்தாலும் அப்பொருள்கள் யாவும் எறியப்பட்ட இடத்திலேயே இருக்கக் கடவன' என்பதே.

"ஆதலால் அவர்களிருவரும் நீரில் வீசி எறியும் பாறைகள் யாவும் எறியப்பட்ட இடத்திலேயே நீரில் மிதக்கும்; உங்கள் திருநாமத்தை ஒவ்வொரு கல்லிலும், பாறையிலும் பொறியுங்கள்.

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

உங்கள் திருநாமம் பளுவானதல்ல, நொய்ம்மையானது. அவ்விதம் பொறித்து எறியப்பட்ட மாபெரும் மலைச்சிகரங்கள்கூட மிதக்கும். அவைகளைக்கொண்டு ஒரு பாலத்தை உருவாக்க இயலும். நானும் என்னால் இயன்றவரை என் பங்கு உழைப்பைத் தருவதற்குத்தயார். ஏனெனில் நீங்கள் மேற்கொண்ட பணி, சத்தியத்தை நிலைநாட்டும் பணி. அதன்பொருட்டு இயற்கையனைத்தும் அப்பணியில் ஈடுற்றவர்களுக்கு உழைக்க வேண்டியது கடமை" என்றது.

இதைக்கேட்ட இராமர் தொடுத்த அம்பை எய்ய வேண்டுமென்ற எண்ணத்தைக் கைவிட்டார். ஆனால் பூட்டிய அம்பை எதன்மேலாவது எய்தே ஆகவேண்டுமென்ற காரணத்தால் அதைத் தூரத்திலிருந்த ஒரு காட்டை நோக்கி எய்தார். அக்காடு பாலையாக மாறியது. பிறகு இராமர் அமைச்சர்களை அழைத்துப் பெருங்கடலுக்குக் குறுக்கே ஒரு பாலத்தை அமைக்க வேண்டுமென்று கட்டளை இட்டார். அப்பொழுது அநுமான், "பிரபோ! உங்கள் திருநாமமே வாழ்க்கையாகிய சாகரத்தைக் கடக்க உதவும் பாலம். எந்தப் பாலம் அதைவிட உறுதியாகவும், பாதுகாப்பாகவும் இருக்க முடியும்?" என்றார். வயது முதிர்ந்த தளபதியான ஜாம்பவான் இராமரை நோக்கி, "பிரபோ! சீற்றம் கொண்ட காட்டுத்தீயைப் போன்ற தங்களுடைய வீரம் திரளான இப்பெருநீரை வற்றிடச் செய்யும்; இராவணனுடனும், அவன் சேனைகளுடனும் நேரவிருக்கும் போரில் இலங்கையில் எஞ்சி நின்ற விதவைகளின் கண்களிலிருந்து வழிந்தோடும் கண்ணீரால் பிறகு அது நிறைந்து வழியுமென்பது திண்ணம்" என்றுரைத்தான்.

தம்முடைய பக்தர்களின் எளிய நேர்மையான பற்றையும், வீரத்தையும் கண்டு இராமர் புன்முறுவல் கொண்டார். சிறு பிராயத்தில் தங்களின் மீது இடப்பட்ட சாபத்தைப் பற்றிச் சாகரமே இராமருக்கு எடுத்துரைத்த செய்தியை ஜாம்பவான் நளனுக்கும், நீலனுக்கும் ஞாபகம் ஊட்டினான். இராமரின் திருநாமத்தைத் தங்கள் இதயங்களில் இருத்திக் கற்களையும், குன்றுகளையும், மலைகளையும் அவர்கள் கடலில் எறியவேண்டுமென்று பணித்தான்.

அக்கட்டளையைக் கேட்டவுடன் வானரவீரர்கள் தாவிக் குதித்துப் பல திக்குகளிலும் ஓடி முழுமையாகக் குன்றுகளையே

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

தங்கள் தலைகளின்மீதும், தோள்களின் மீதும், சிறு விளையாட்டுப் பந்துகள் போலச் சுமந்துகொண்டு, ஒழுங்காக ஒருவர்பின் ஒருவராக நின்றுகொண்டு, இராம நாமத்தை உச்சரித்துக்கொண்டே ஒருவரிடமிருந்து மற்றொருவரிடம் மாற்றி மாற்றிக் கரையோரம் கொண்டு வந்தனர். இடையிடையே அவர்கள் மாபெரும் மரங்களை வேருடன் களைந்து அவைகளையும் சுமந்து சென்று, நளனும், நீலனும் கரையோரம் நின்று பொருள்களை நீரில் எறியும் இடத்திற்குச் சேர்ப்பித்தனர். நளன், நீலன் இவர்களால் எறியப்பட்ட காரணத்தால் அவைகள் யாவும் நீரில் அழுந்தாதபடி மிதந்து நின்றன.

நாள் முழுவதும் ஓய்வில்லாமலும், உணவு அருந்த வேண்டுமென்ற உணர்ச்சியில்லாமலும் அவர்கள் உழைத்தனர். முதல் நாளன்று பதினான்கு யோஜனை தூரம் பாலத்தை அமைத்தனர். இரவில் உறங்கிக் காலையில் கிளர்ச்சியுடன் பிரம்ம முகூர்த்த வேளையிலேயே துயில் எழுந்து வேலையில் ஈடுற்றனர். அவர்கள் குதூகலத்துடன் "எங்கள் பிரபு ஸ்ரீ இராமச்சந்திரருக்கு ஜெய்" என்று கோஷமிட்டுக் கொண்டு, நிலத்தின் பல பகுதிகளிலும் மூலை முடுக்குகளிலும் குன்றுகளையும், மலைகளையும் நாடித் திரிந்து, அவைகளைக் கொணர்ந்து நளன், நீலன் இவர்களிடம் கரையோரம் குவித்துச் சேர்பபித்தனர்.

இரண்டாம் நாள் பாலம் மேலும் இருபது யோஜனை தூரம் அமைக்கப்பட்டது; மூன்றாம் நாள் மேற்கொண்டு இருபத்தோரு யோஜனை தூரம் கட்டப்பட்டது; நான்காம் நாள் மேலும் இருபத்திரண்டு யோஜனை தூரம் பாலத்தை அமைத்து, மொத்தம் நூறு யோஜனை தூரத்திற்குப் பாலத்தைக் கட்டிமுடித்தனர்.

இம்மாதிரியாக, உடனடியான தேவையைப் பூர்த்திசெய்ய ஓய்ச்சல் ஒழிவில்லாமல் உழைத்து, இராமர் மேற்கொண்ட திருப்பணிக்குப் பூர்த்தி காணப் பாலத்தைப் பூர்த்தி செய்து, பாலம் அமைத்தாயிற்றென்று இராமரிடம் செய்தி சொல்லினர். அப்பாலத்தைக் கட்டி முடித்தவர்களின் முன்னிலையில் அவருடைய திருவுருவமும், அவருடைய திருநாமமும் இடையறாது நின்றதன் விளைவே அப்பூர்த்தி.

◈

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

அகராதி, நிகண்டு ஆதாரங்கள்

அபிதான சிந்தாமணி

(ஆ.சிங்காரவேலு முதலியார்)

1899

சேது-3. இராமமூர்த்தி இராவணனை வதைசெய்ய இலங்கைக்குச் செல்கையில் நளன் எனும் வாநரத்தச்சன் வாநர சைந்யங்களைக் கொண்டு கட்டிய அணை. இது 102 யோசனை நிகளம், 10 யோசனை அகலம், இது மூன்று நாட்களில் கட்டி முடிந்தது. புண்யஸ்நாந கட்டம், இராமேச்சுரத்திற்கும் இலங்கைக்கு முள்ள அணை.

◈

கதிர்வேல் பிள்ளையின் தமிழ் அகராதி

1912

சேது-2. செய்கரை (சூ.நிகண். ரு.க.9) இராமர் வானரத்தாற் செய்வித்த அணைக்குப் பெயருமாம்; இது நூறு யோசனை நீளமும் பத்து யோசனையகலமுமுள்ளதென்பர்.

◈

சென்னைப் பல்கலைக்கழகத் தமிழ்ப்பேரகராதி

1935

சேது-2 cetu n. <setu. 1. Causeway, bridge, dam; செய்கரை (பிங்) 2. Adam's bridge, a reef of sunken rocks connecting the north of ceylon with the main land of India, 30 ft. wide with 3 or 4 ft. of water above it at high tide said to have been constructed to enable Rama's forces to cross over to Lanka; இராமபிரானது சேனைகள் இலங்கை செல்லுதற்கென இயற்றப்பெற்றதாகக் கருதப்படும் திருவணை.

◈

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

நாமதீப நிகண்டு

(சிவசுப்பிரமணியக் கவிராயர்)

பாரியம்பா ராவாரம் வேலைபர வைக்கரையா
வாரமனை கோடு வரைகூலந் - தீரம்
வரம்புதடம் பாரங் கரைசெய் கரைதான்
குரம்புடன் சேதுக் குலை 530

(செய்கரையின் பெயர் : செய்கரை, குரம்பு, சேது, குலை.)

◇

DICTIONARY OF THE TAMIL AND ENGLISH LANGUAGES

Rev.J.P.Rottler, (1834)

அணை : sub. *3.கல்லணை;* 1. a dam built of stone as that at Sirengam; 2. the dam or bridge built in the sea between Ramesuram and Ceylon, by Ramen, who conquered the latter. *இராமன் இலங்கையைச் சாதிக்கும் பொருட்டுக் கடலிலிட்ட கல்லணை.*

சேது: sub 1. an isthmus, bridge or causeway. 2. the bridge said to have been built by Rama from the continent to Ceylon; also the isthmus anciently connecting the island of Ramiseram with the mainland.

சேதுபதி; the guardian of the isthmus and temple of Ramiseram, and chieftain of the Maravas, a class of people in that neighbourhood; who in some things differ from the Hindus.

சேது பந்தனம்; the building of the bridge which Rama is said to have thrown across ths straits of Manar; vulgo Adam's Bridge.

◇

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

PURANIC ENCYCLOPAEDIA
Vettam Mani

RAMA... (2a) Rama - Ravana War.

Rama and others, who had assembled on the sea-shore decided to build a bund to Lanka. The first thing Rama did, for the successful conclusion of the expedition, was to install a sivalinga at Ramesvara. Then he prayed to Varunadeva for a passage across the sea. But, Varuna did not present himself and Sri Rama, angry with him, shot the agneya (fiery) arrow into the heart of the sea when Varuna appeared, saluted him and advised him to build a bund across the sea. As a reward for Varuna Sri Rama, as requested by the former, killed with one arrow all the Raksasas, who lined in Gandhara island on the north-western shore of the ocean. Varuna returned to his abode. The construction of the bund was begun under the leadership of sugriva with Nala as Chief planner and Nila as his co-planner. Jambavan and Hanuman functioned as supervisors and other monkeys as workers. Mountains, hills, rocks etc. were brought from various quarters and the construction of the bund was begun. (Motilal Banarsidas edition 1975, p.637)

◈

மதுரைத் தமிழ்ப்பேரகராதி
1937

சேது - இராமேச்சுரம், ஒரு கடல் தீர்த்தம், சிவப்பு, செய்கரை, பாலம், ஸ்ரீராமர் இராவண சங்காரஞ்செய்து மீண்ட காலத்தில் பிரஹத்தி நீங்கும் பொருட்டு ஆடிய தீர்த்தத்துறை, இது சேது பந்தநத்துக் கருகே இராமேசுவரத்தைச் சார்ந்த கடலிலுள்ளது.

சேது பந்தனம் - அணைக்கட்டு, திருவணை. இது பாண்டி நாட்டிலுள்ளது. இலங்கைக்குச் செல்லவேண்டி ஸ்ரீராமரும், வாநரசேனையும் கடலைத் தூர்த்திட்ட அணை.

◈

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

A Classical Dictionary of Hindu Mythology & Religion
(John Dowson)
(Rupa & Co., 1982)

RAMA-SETU. 'Rama's bridge', constructed for him by his general, Nalla, son of Viswa-Karma, at the time of his invasion of ceylon. This name is given to the line of rocks in the channel between the continent and ceylon called in maps "Adam's bridge".

SETU-BANDHA. 'Rama's bridge. the line of rocks between the continent and ceylon called in maps "Adam's bridge". It is also known as Samudraru. There is a poem called Sethu-bandha or Setu-Kavya on the subject of the building of the bridge by Rama's allies.

The Dictionary of the ESOTERIC
Nevill Drury
(Watkins Publishing Limited, London)
2002

Ramayana. ".........Ravana imprisoned Sita in his island Kingdom of Lanka; but Rama Constructed a bridge to the island, assisted by Nala, and invaded Lanka with an army of monkeys......."

Gazetteer of India
Tamil Nadu State
Ramanathapuram District
1972

"The island of Rameswaram is in the shape of bow and is called Rama's bow, Each end is called Kodi, tip of the bow. The name Dhanushkodi is derived from the Sanskrit dhanus which means bow and kodi in Tamil means tip, ie., tip of the bow. Dhanushkodi is also called Sethu. Sethu means a bridge or causeway. It is the place where Sri Rama constructed the causeway to reach Lanka. The story goes

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

that Sri Rama destroyed the bridge with his bow's end after his return from Lanka. The bath at Dhanushkodi is considered sacred because of Sagara-Sangama ie., where two seas Mahodadhi (Bay of Bengal) and the Ratnakara (Indian Ocean) meet. Valmiki, in his great epic the Ramayana, says that Rama when returning from Lanka showed this place to Sita from his Pushpaka (aerial car) and said thus: "Here is seen the holy place in the great ocean which is well-known as the Sethu Bandha and worshipped by three worlds. This is extremely holy and destroys great sins. Here formerly the lord Mahadeva (Shiva) was pleased to show favour to me", The greatness of this theertham is mentioned in many Sanskrit and Tamil works. Rama is supposed to have marked the spot with an arrow from his wonderful bow.

◇

சேதுபதி செப்பேடுகள்

செ.இராசு

தமிழ்ப்பல்கலைக்கழகம், தஞ்சாவூர்

1994

சேதுபதிகள்

இராமன், இராவணனால் கவர்ந்து செல்லப்பட்ட சீதையை மீட்கப் பெரும்படையுடன் இலங்கை சென்றபோது வானரசேனை களைக் கொண்டு கடலில் கட்டுவித்த திரு அணையே சேது எனப்படும். இந்தச் சேதுவைக் காவல் புரிவதற்கு இராமனால் நியமிக்கப்பெற்ற மறவர் தலைவர் வழிவந்தவர்களே சேதுபதிகள் ஆயினர் என்பர். அவர்கள் இராமனால் பிரதிட்டை செய்யப்பெற்ற இராமலிங்கத்தையும் காப்பவர் ஆயினர்.

எனவே அவர்கள் சேதுபதிகள் என்ற பட்டத்துடன் சேதுவோடு தொடர்புடைய

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

தேவை நகராதிபன்
சேதுமூல ரட்சா துரந்தரன்
இராமநாதசுவாமி காரிய துரந்தரன்
தனுக்கோடி காவலன்
சேது காவலன்
திருவணை காவலன்
கந்தமாதன கிரியான்

போன்ற பல பட்டங்களையும் பெற்றிருந்தனர்.

◇

ILLUSTRATED GUIDE TO THE SOUTH INDIAN RAILWAY (1900)

"The Ramachandra (Moon Rama) Avatara: This which is perhaps the most celebrated of the avatars, forms the subject of the Ramayana, which, with the Mahabharata may be considered the national epic in India. The poem is long and teems with interesting episodes. Briefly, the main story describes the war which Rama waged against Ravana, the demon king of Lanka (Ceylon) to rescue his wife Sita and tells how with the aid of Hanuman, the General of the army of monkeys, he threw a bridge across the straits which separate India from Ceylon (Adam's Bridge), defeated Ravana in his capital and delivered Sita".

◇

கல்வெட்டு ஆதாரம்

மூன்றாம் குலோத்துங்க சோழனின் (1178-1218) 15-ஆம் ஆண்டுக்குரிய கல்வெட்டுகள்

1. தீர்த்தநகரி மெய்க்கீர்த்தி

"தென்னவர் வந்து அடிபணியச்
சிங்களவர் தலைமறையாறத்

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

தென்னீழம் கொள்கவென்ன
திரைகடலை அடைக்க என்ன
மன்னுதிரு வாற்படையால்
மலைகொண்டு வழிபடுத்தி
தென் இலங்கையர் கோன் தலை அரிந்த
திருநெடுமால் இவன் என்னத்
தென்னவனைத் தலை அரிந்து
தேசமெல்லாம் இருள் அகற்றி....

- South Indian Inscriptions-XVII-Thiruthanagari-18
(Lines 10 to 14)

2. திருவாலங்காடு மெய்க்கீர்த்தி

"வாழ்வேங்கையும் மடமானும் வந்து
ஒருதுறை நீருண்ணக்
கோன் வேங்கைக் கொடி எடுத்துச்
சுங்கமில்லா சோணாட்டில்
சோற்றுமலை கண்டருளி
தென்னவன் வந்தடிபணியச்
சிங்களவன் தலைமறையாற
தென்னீழம் கொள்கவென்ன
திரைகடலை அடைக்க வென்ன
பொன்னிசூழ் நாடெங்கும்
தன்பெருநிலை நாற்றிசைக்கும்
காவலனாக சேவலரு நெடுங்கொடியோன்
திருக்கயிலைச் சிவன் அருளால்
மேவலரைச் சதமடக்கி
தனிச்சிங்கம் பெற்ற தனிமகன் கோன்
தேசமெல்லாம் விளங்க...

(S.I.I. Thiruvalankadu 81/1926)

◈

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

பார்வை நூல்கள் பட்டியல்

நூல்பெயர்		பக்கம்
1.	திருஞானசம்பந்தர் தேவாரம்	
	- மூன்றாம் திருமுறை	5
2.	திருநாவுக்கரசர் தேவாரம்	
	- நான்காம் திருமுறை	5
3.	- ஆறாம் திருமுறை	6
4.	நாலாயிர திவ்வியப் பிரபந்தம்	
	- பெரியாழ்வார் திருமொழி	6
5.	- நாச்சியார் திருமொழி	8
6.	- குலசேகரர் பெருமாள் திருமொழி	9
7.	- திருமழிசைப்பிரான் திருச்சந்த விருத்தம்	10
8.	- தொண்டரடிப் பொடிகள் திருமாலை	10
9.	- திருமங்கையாழ்வார் பெரிய திருமொழி	11
10.	- திருமழிசை ஆழ்வார் நான்முகன் திருவந்தாதி	16
11.	- திருமங்கையாழ்வார் பெரிய திருமடல்	17
12.	கம்பராமாயணம்	17
13.	ஒட்டக்கூத்தரின் உத்தரகாண்டம்	27
14.	திருச்செந்தூர்த் தலபுராணம்	28
15.	திருநாகைக்காரோணப் புராணம்	29
16.	கூர்ம புராணம்	31

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

17.	பெருந்தேவனார் பாரதம்	32
18.	இராமோதந்தம்	32
19.	உபதேச காண்டம்	33
20.	காளமேகப் புலவர் பாடல்	33
21.	திருப்புல்லாணி மாலை	34
22.	வடமலை வெண்பா	35
23.	சிவசிவ வெண்பா •	35
24.	தீர்த்தகிரிப் புராணம்	35
25.	புள்ளிருக்கு வேளூர்ப் புராணம்	36
26.	சூதவன புராணம்	37
27.	குசேலோபாக்கியானம்	37
28.	சேது புராணம்	38
29.	திருவேங்கடத் தலபுராணம்	41
30.	இராமாயண வெண்பா	42
31.	அகநானூறு	44
32.	மகாகவி பாரதியார் பாடல்	44
33.	மணிமேகலை	45
34.	அஷ்டப் பிரபந்தம்	
	- திருவரங்கக் கலம்பகம்	46
35.	- திருவரங்கத்து மாலை	47
36.	- திருவேங்கடத்து அந்தாதி	47
37.	- அழகர் அந்தாதி	47
38.	திருப்புகழ்	49
39.	மீனாட்சியம்மை பிள்ளைத்தமிழ்	56
40.	கல்லாடம்	57

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

41.	தக்கயாகப் பரணி	58
42.	மூவருலா	58
43.	கப்பற்கோவை	59
44.	கந்தரலங்காரம்	60
45.	இராசராச சேதுபதி ஒருதுறைக்கோவை	61
46.	கோவிந்த சதகம்	62
47.	ஸ்ரீ திருக்குறுங்குடி அழகிய நம்பியுலா	62
48.	திரு எவ்வுள் பதிற்றுப்பத்தந்தாதி	62
49.	திருக்கடன் மல்லைப் பதிற்றுப் பத்தந்தாதி	63
50.	திருவேங்கடக் கலம்பகம்	64
51.	வைகுந்தநாதன் பிள்ளைத்தமிழ்	65
52.	மகர நெடுங்குழைக்காதர் பிள்ளைத்தமிழ்	67
53.	மணவைத் திருவேங்கடமுடையான் பிள்ளைத்தமிழ்	68
54.	திருமயிலைச் சிங்காரவேலர் பிள்ளைத்தமிழ்	70
55.	அனுமன் பிள்ளைத்தமிழ்	71
56.	திருமாலிருஞ்சோலை அழகர் கிள்ளைவிடுதூது	72
57.	ஒருதுறைக் கோவை	72
58.	மணவை திருவேங்கடமுடையான் மேகவிடுதூது	73
59.	திருஅருட்பா	74
60.	செயங்கொண்டார் வழக்கம்	74
61.	பாண்டி மண்டல சதகம்	75
62.	அந்தகக்கவி வீரராகவ முதலியார் பாடல்	76
63.	வெறிமங்கைபாகக் கவிராயர் பாடல்	76
64.	தனிப்பாடற்றிரட்டு	77
65.	யாழ்ப்பாணம் சாமிநாதர் பாடல்	78

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

66. இராமப்பய்யன் அம்மானை 79

67. இராமாயணத் திருப்புகழ் 80

68. பாண்டித்தேவர் நான்மணி மாலை 82

69. காளிதாசரின் இரகுவமிசம் 82

70. தயா சதகம் 83

71. வால்மீகி ராமாயணம் (சமற்கிருதம்) 83

72. இராமநாடகக் கீர்த்தனைகள் 84

73. ஸ்ரீ தியாகராஜஸ்வாமி கீர்த்தனைகள் 88

74. பஞ்சபாண்டவர் வனவாசம் 94

75. இராமர் கதை 94

76. ஸ்ரீமத் வால்மீகி ராமாயணம் 96

77. அத்யாத்ம ராமாயணம் 101

78. துளஸீதாஸரின் ஸ்ரீராமசரிதமாநஸம் 104

79. ஸ்ரீ விஷ்ணு புராணம் 109

80. ஸ்ரீமத் பாகவதம் 110

81. ஸ்ரீமகாபாரத பர்வங்கள் 111

82. ஸ்ரீதேவி பாகவதம் 112

83. ஸ்ரீஆஞ்சநேய புராணம் 113

84. பத்மபுராணம் 115

85. The Ramayan of Valmiki 117

86. Shri Ramayana Darshanam 119

87. Anjaneya Ramayan 123

88. தாய்லாந்து இராமாயணம் 125

89. ராம கதா ரஸவாஹினி 128

90. அபிதான சிந்தாமணி 132

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

91. கதிர்வேல் பிள்ளையின் தமிழ் அகராதி 132
92. சென்னைப் பல்கலைக்கழகத் தமிழ்ப் பேரகராதி 132
93. நாமதீப நிகண்டு 133
94. Dictionary of the Tamil and English Languages 133
95. Puranic Encyclopaedia 134
96. மதுரைத் தமிழ்ப் பேரகராதி 134
97. A Classical Dictionary of Hindu Mythology & Religion 135
98. The Dictionary of the ESOTERIC 135
99. Gazetteer of India 135
100. சேதுபதி செப்பேடுகள் 136
101. Illustrated Guide to the South Indian Railway (1900) 137
102. கல்வெட்டுகள் 137

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)